விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: இருபது

சங்கு 12 வள்ளுவர் ஆண்டு 2042 பங்குனி 01 செவ்வாய்க்கிழமை (15.03.2011) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 086

ரா ம் கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
R A M C O
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

# இலங்கையின் 'போர்ப் பகிர்வு' கருத்தரங்கில் உலக நாடுகள் கலந்து கொள்ளக் கூடாது

## மனித உரிமைகள் கண்காணிப்பகம் கோரிக்கை

(கொழும்பு)

**தமிழீழ விடுதலைப்புலிகளை இராணுவ ரீதியில் தோற்கடித்த அனுபவங்களை பகிர்ந்து கொள்வதற்காக இலங்கை படைத்துறை ஏற்பாடு செய்துள்ள படைத்துறைக் கருத்தரங்கை புறக்கணிக்குமாறு சர்வதேச சமூகத்திடம் மனிதவுரிமைகள் கண்காணிப்பகம் வேண்டுகோள் விடுத்து உள்ளது.**

கொழும்பு கலதாரி நட்சத்திர விடுதியில் எதிர்வரும் மே மாதம் 31ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள இந்தப் படைத்துறைக் கருத்தரங்கை தொடர்ந்து மூன்று நாட்களுக்கு நடத்துவதற்கு படைத்தரப்பு ஏற்பாடுகளைச் செய்து உள்ளது.

இக் கருத்தரங்கில் கலந்துகொள்ளுமாறு படைத்துறைச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ 54 நாடுகளுக்கு அழைப்பிதழ்களை அனுப்பியுள்ள நிலையில் இந்தப் படைத்துறைக் கருத்தரங்கைப் புறக்கணிக்குமாறு மனிதவுரிமைகள் (20ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ் மக்களை மூளைச்சலவை செய்யலாம் என்றெண்ணுவது தவறு

### அடைக்கலநாதன் எம்.பி. தெரிவிப்பு



(கொழும்பு)

வடக்கு கிழக்கு மக்களை மூளைச்சலவை செய்து விடலாம் என்று எந்தவொரு தரப்பும் எண்ணிவிடக் கூடாது. யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களின் தேர்தல் ஒத்திவைப்புக்களின் உள்நோக்கம் மக்களால் அறியப்படாதது ஒன்றல்ல. இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல்கள் நடைபெறுவதற்கு இன்னமும் ஒரு நாள் எஞ்சியுள்ள நிலையில் தேர்தல் நிலைவரம் குறித்து கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

தற்போதுள்ள நாடாளுமன்றத்தில் மூன்றாவது அரசியல் (20ஆம் பக்கம் பார்க்க)

## மூன்று நாட்களின் பின் மீனவர் சடலமாக மீட்பு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவில் மூன்று நாட்களுக்கு முன்னர் கடற்றொழிலுக்காக சென்ற மீனவர் ஒருவர் முல்லைத்தீவு, அலம்பில் பகுதியில் நேற்று திங்கட்கிழமை சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

கேதீஸ் சந்திரமோகன் (வயது 34) என்பவரே சடலமாக மீட்கப்பட்டவராவார். கடந்த 11ஆம் திகதி கடலுக்கு தனியாகவே சென்றிருந்த இவர் கரைக்குத் (20ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கையின் படைத்துறைக் கருத்தரங்கு அமெரிக்கா, ஜப்பான் புறக்கணிக்கும்!

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளை படைத்துறை ரீதியில் தோற்கடித்த அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ளும் இலங்கைக் கருத்தரங்கினைப் புறக்கணிப்பதற்கு அமெரிக்கா மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகள் தீர்மானித்துள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

எதிர்வரும் மே மாதம் கொழும்பில் நடைபெறவுள்ள கருத்தரங்கில் பங்கேற்குமாறு இலங்கை பாதுகாப்பு அமைச்சகம் 54 நாடுகளுக்கு அழைப்பு விடுத்துள்ளது.

முறியடிப்புத் தாக்குதல் தொடர்பான தமது பட்டறிவினை இக் கருத்தரங்கில் தாம் பகிர்ந்து கொள்ளவுள்ளதாக படைத்துறை தெரிவித்துள்ளது.

போர்க் குற்றங்கள் தொடர்பான விசாரணைக்கு அரசாங்கம் தொடர்ச்சியாக மறுத்து வரும் நிலையில் அது விடயத்தில் எதிர்ப்பினைத் தெரிவிக்கும் நோக்கில் அமெரிக்கா கருத்தரங்கினைப் புறக்கணிக்கத் தீர்மானித்துள்ளது. படைத்துறை சார்ந்த எந்தவொரு நடவடிக்கைகளிலும் பங்கெடுப்பதற்கான தடை ஜப்பான் நாட்டின் அரசியலமைப்பில் நிலவும் காரணத் (20ஆம் பக்கம் பார்க்க)

## கிறிஸ்மஸ் தீவில் அகதிகள் ஆர்ப்பாட்டம்

(சிட்னி)

கிறிஸ்மஸ் தீவில் தடுத்து வைக்கப்பட்டுள்ள அகதிகள் மேற்கொண்ட ஆர்ப்பாட்டம் மற்றும் எதிர்ப்பு நடவடிக்கைகளைத் தடுக்க அவர்கள் மீது பொலிஸார் கண்ணீர்ப்புகைப் பிரயோகம் மேற்கொண்டுள்ளனர்.

தங்களுடைய அகதி அந்தஸ்துக் குறித்து ஒரு தீர்மானமும் எடுக்கப்படாமல் நீண்டகாலமாக கிறிஸ்மஸ் தீவில் தடுத்து வைக்கப்பட்டுள்ள (20ஆம் பக்கம் பார்க்க)

## அரசு மீது சனத்துக்கு அதிருப்தி தேற்ற முயற்சிக்கிறார் ஜனாதிபதி

(கொழும்பு)

முன்னாள் கிரிக்கெட் வீரரும் ஆளும் கட்சியின் மாத்தறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான சனத் ஜயசூரியவைத் தேற்றும் முயற்சியில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நேரடியாகக் களமிறங்கியுள்ளார்.

அரசாங்கத்தின் அண்மைக்காலப் போக்குகள் காரணமாக அதிருப்தியடைந்திருந்த சனத் ஜயசூரிய கடந்த நாட்களில் அரசியல் நடவடிக்கைகளிலிருந்து முற்றிலுமாக ஒதுங்கியிருக்கத் தலைப்பட்டார்.

இம்முறை நடைபெறும் உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலில் எந்தவொரு பிரசாரக் கூட்டத்திலும் பங்குகொள்ளாத அவர், தான் தலைமைப் பதவியை வகிக்கும் மாத்தறை மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டங்களையும் தொடர்ச்சியாக புறக்கணித்திருந்தார்.

அதன் காரண (20ஆம் பக்கம் பார்க்க)

## பல்கலைக் கழக ஆசிரியர்கள் வேலை நிறுத்தப் போராட்டம்

(யாழ்ப்பாணம்)

பல்கலைக்கழக ஆசிரியர்களின் சம்பள அதிகரிப்புத் தொடர்பில் இதுவரை நடவடிக்கை எடுக்கப்படாதமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து நாட்டிலுள்ள சகல பல்கலைக்கழக ஆசிரியர்களும் இன்று வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர்.

இவ் வேலைநிறுத்தப் போராட்டத்திற்கு ஆதரவாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர்களும் அடையாள வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர். (ந-5)

ஜப்பானில் கடந்த வெள்ளிக்கிழமை ஏற்பட்ட பாரிய பூகம்பம் மற்றும் சுனாமி அனர்த்தம் காரணமாக ஏற்பட்ட பேரழிவுகளையும், பாதிக்கப்பட்ட மக்களை பாதுகாப்புத் தரப்பினர் மீட்கும் நடவடிக்கையில் ஈடுபட்டிருப்பதையும் படத்தில் காணலாம்.



## துணுக்காய் உள்ளூராட்சித் தேர்தல் ஒத்திவைப்புக்கு த.தே.கூ.ஆட்சேபம்

(கொழும்பு)

தேர்தல் ஆணையாளர், நீதிமன்றத்தில் கூறியதற்கு முரணாக முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள துணுக்காய் பிரதேச சபைக்கான தேர்தலை ஒத்திவைக்க தீர்மானித்துள்ளார் என தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரான மாவை சேனாதிராஜா நேற்றுத் திங்கட்கிழமை மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் முறையிட்டார்.

தபால் மூல வாக்களிப்பு முடிந்த நிலையிலேயே தேர்தல் ஆணையாளர் குறித்த தீர்மானத்தை எடுத்துள்ளதாக அவர் தனது மனுவில் குறிப்பிட்டுள்ளார்.

சட்டமா அதிபரும் துணுக்காய்ப் பிரதேச சபைக்கான தேர்தல் மார்ச் 17ஆம் திகதி நடைபெறும் என நீதிமன்றத்திற்கு உறுதி வழங்கினார் எனவும் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா முறையிட்டுள்ளார்.

துணுக்காய் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பான (20ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## Study & Work in UK and Canada

Intake Get Register Now
Collecting the application until March 31st 2011
start the academic on August 2011
இறுதிச் சந்தர்ப்பம் IELTS தேவையில்லை
Administration & Documentation
என்பன வெற்றிகரமான முறையில் எங்களால் செய்து தரப்படும்.
ஐரோப்பிய நாடுகளுக்கான வீஸா பெறுவதற்கான Sponsorship பிரச்சினையா? உடனடியாக ஏற்பாடு செய்து தரப்படும்.
சகல தொடர்புகளுக்கும்: 0729994777
London City College
No.01, Deanston House, Deanston Place, Colombo-03 (C-2291)

## வர்த்தகப் பெருமக்களே...

பெறுமதிமிக்க உங்கள் வியாபார நிறுவனங்களை இலகுவாகப் பதிவு செய்து, அதற்குரிய கௌரவத்தையும் உத்தரவாதத்தையும் பெற்றுக் கொள்ளுங்கள்.
தொடர்புகளுக்கு:-0729994777
(C-2290

## மாபெரும் புத்தகக் கண்காட்சியும் விற்பனையும்

15ஆம் திகதி தொடக்கம் 30ஆம் திகதி வரை
மார்ச் 2011 நேரம் : 9 a.m - 6 p.m
இடம்: யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முகாமைத்துவ மண்டபம்
(Jaffna University Management Faculty Hall)

### ஜெயா புத்தகசாலை

சகல விதமான புத்தகங்களும் விசேட விலைக் கழிவுடன் விற்பனை செய்யப்படும்.
Medical, Children, Grammar, Dictionaries, English and Tamil Language Books will be on Display.
Presented by:
**Jeya Book Centre**
91-99, U.G Floor, People's Park Complex, Colombo-11, Tel: 2438227, Fax: 2332939 (அ-2673)

# மரண அறிவித்தல்

## குழந்தைவேலு ஏகாம்பரம்

(ஓய்வுபெற்ற உத்தியோகத்தர், இந்திய காப்புறுதிக் கூட்டுத் தாபனம், இலங்கைக் கிளை, கொழும்பு)

வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட குழந்தைவேலு ஏகாம்பரம் நேற்றுமுன்தினம் (13.03.2011) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற லோகநாயகியின் அன்புக்கணவரும், கனகம்மா, இராசம்மா (சிரஞ்சீவி), தியாகராஜா, பரமேஸ்வரி, கமலாசினி (சிரஞ்சீவி), சரஸ்வதி, மகேஸ்வரி (சிரஞ்சீவி) ஆகியோரின் அன்புச் சகோதரனும், தியாகேஸ்வரி (செயலாளர், கரவெட்டி பிரதேசசபை), விமலேஸ்வரி (ஆசிரியர், அல்கலா மகாவித்தியாலயம், நீர்கொழும்பு), சந்திரிக்கா (சுவிஸ்), Dr.சிவகுமாரன் (அவுஸ்திரேலியா), கிருபாநாயகி (பிரான்ஸ்), கலைவாணி (சுவிஸ்), யோகேஸ்வரி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், அன்னலிங்கம், இராமநாதன், சிவநாதன், அசலா, பஞ்சநாயகம், இன்பராசா, ஜெயகாந்தன் ஆகியோரின் அன்பு மாமனும், அஜந்தா (நூலக உதவியாளர், கிளிநொச்சி), தனஞ்செயன் (பொறியியலாளர், ஓமான்), குணாதிகா (ஆசிரியை), ஜனனி (யாழ்.பல்கலைக்கழகம்), தாட்ஷாயினி (லண்டன்), சதீஷன் (சுவிஸ்), கிரிசங்கர், கஜனி, வினோஜன், கிருபரன், வாஹினி (நீர்கொழும்பு விஜயரட்ணம் மகாவித்தியாலய மாணவர்கள்), சுவேதா (அவுஸ்திரேலியா), பிரியங்கா, வேணுசன், சுபானுஷன் (பிரான்ஸ்), அனுஜன், தினுஜன், துர்க்கா (சுவிஸ்), சயந்தன், தர்சனா, சஞ்சனா, சஹானா (பிரான்ஸ்), மதனராஜா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை 16.03.2011 புதன்கிழமை காலை 11மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வழுக்கையாறு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கண்ணகை அம்மன் கோயில்
மேற்கு எல்லை,
சிந்துபுரம், வட்டுக்கோட்டை.
T.P: 021 3205791

தகவல்
அன்னலிங்கம் (மருமகன்),
தியாகேஸ்வரி (மகள்)
(செயலாளர், கரவெட்டி.பிரதேச சபை)
(அ-2695)

## விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள சாளி, ரலி சைக்கிள், குளிர்சாதனப் பெட்டி மற்றும் வாகன ரயர்கள் என்பன விற்பனைக்கு உண்டு.
பார்வை நேரம் பி.ப. 3.00-5.00
தொடர்பு: **விஜயகுமார்**
217/3 கடைச்சாமிலேன், நீராவியடி, யாழ்ப்பாணம். (4040)

## சாரதி தேவை

அனுபவமும், நல்லொழுக்கமும் உள்ள 40வயதுக்கு மேற்பட்ட சாரதி தேவை. கோப்பாய் பகுதியை அண்மித்தவர்கள் விரும்பத்தக்கது.
தொடர்பு:
0775430190 (4037)

## ஆனந்தி திருமண சேவை

### மணமகன் தேவை

பல் வைத்தியரான 1982ல் பிறந்த உச்சம் பெற்ற 8-ல் செவ்வாயுடைய கிரகபாவம் 46 1/2, பரணி நட்சத்திரமுடைய பெண்மணிக்கு மணமகன் தேடுகின்றோம். தபால் மூலம், நேரடியாக, தொலைபேசி (021 2228708) வாயிலாக தொடர்பு கொள்ளுங்கள்.
V.A.சிவராஜா (சோதிடர்)
56, அம்மன்வீதி, கந்தர்மடம்,
யாழ்ப்பாணம். (4036)

## Exciting Opportunity in Business Process Outsourcing

Looking for talented persons for a variety of positions:
**Minimum requirements:**
- Excellent A Level Performance
- Fast & accurate typing
- Fluent English
- Proficient with Computers

**Please Submit CV to: susie@sedco.lk** (அ-2693)

# மரண அறிவித்தல்

## செல்வி ரேணுகா பிள்ளைநாயகம்



புங்குடுதீவு 5 -ம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும், இருபாலை வீதி, கோண்டாவிலை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட பிள்ளைநாயகம் ரேணுகா 14.03.2011 நேற்று காலமானார். அன்னார் பிள்ளைநாயகம் தவமணிதேவி, நாகேஸ்வரி ஆகியோரின் பாசமிகு மகளும் காலஞ்சென்ற கதிர்காமன், சிதம்பரம், காலஞ்சென்ற இராசையா, பராசக்தி ஆகியோரின் பேர்த்தியும் சந்திரகலா (றஜனி) றமேஸ் (றமேஸ் போட்டோ புங்குடுதீவு -05) சுரேஸ், சதீஸ், தினேஸ் ஆகியோரின் பாசமிகு சகோதரியும், புவனேஸ்வரன், மல்லிகாதேவி (சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர், புங்குடுதீவு) ஆகியோரின் அன்பு மைத்துனியும் லஜித்தின் பாசமிகு அன்ராவும், அர்ச்சயாவின் அன்பு அத்தையும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 15.03.2011 அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக பிற்பகல் 4மணியளவில் கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

ஸ்ரேசன் றோட்,
கோண்டாவில்
0776163349

தகவல்
க. பிள்ளைநாயகம் (தந்தை)
பி.ரமேஸ் (அண்ணா)
(ரமேஸ் போட்டோ)
(அ-2696)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெதர்லாந்தை வீழ்த்தியது பங்களாதேஷ் காலிறுதி வாய்ப்பையும் தக்கவைத்தது

(சிட்டாக்கொங்)

இம்ரூல் ஹைஸின் சிறப்பான ஆட்டத்தின் மூலம் பங்களாதேஷ் அணி 6 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் நெதர்லாந்து அணியை வீழ்த்தியது.

இதன் மூலம் பங்களாதேஷ் அணி காலிறுதி வாய்ப்பை தக்கவைத்தது.

பத்தாவது உலகக் கிண்ண கிரிக்கெட் தொடர் இந்தியா, இலங்கை, பங்களாதேஷ் ஆகிய நாடுகளில் நடைபெற்று வருகிறது.

இதில் சிட்டாகோங்கில் நடைபெற்ற 32 ஆவது லீக் போட்டியில் பி பிரிவைச் சேர்ந்த பங்களாதேஷ்-நெதர்லாந்து அணிகள் மோதின.

இப் போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற நெதர்லாந்து அணித்தலைவர் போர்ரன் முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தார்.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய நெதர்லாந்து அணிக்கு சேவார் சிங்கி-பார்ரேசி ஜோடி நிதானமான ஆரம்பத்தை வழங்கியது.

இதில் பார்ரேசி 10 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். அடுத்து களமிறங்கிய புக்காரி 6 ஓட்டங்களுடன் வெளியேற நெதர்லாந்து அணி 12.2 ஓவர்களில் 37 ஓட்டங்களைச் சேர்த்து 2 விக்கெட்டுக்களையிழந்தது.

தொடர்ந்து மூன்றாவது விக்கெட்டுக்காக இணைந்த சேவார் சிங்கி-கூப்பர் ஜோடி பொறுப்பான ஆட்டத்தை வழங்கினார்.

எனினும் சேவார்சிங்கி 63 பந்துகளில் (ஒரு சிக்ஸர் உட்பட) 28 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார்.



அடுத்து டோஸ்சற் களமிறங்க மறுமுனையில் கூப்பர் 41 பந்துகளில் (2 பவுண்டரிகள் உட்பட) 29 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

அடுத்து வந்த கேர்வேசி 18 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழக்க நெதர்லாந்து அணி 33.3 ஓவர்களில் 113 ஓட்டங்களை எடுத்து 5 விக்கெட்டுக்களையிழந்தது.

பின்வரிசையில் குரோத் (04), பேர்மான் (0), அணித்தலைவர் போர்ரன் (03), சீலர் (0), அடீல் ராஜா (0) என வெளியேறினர்.

ஒருமுனையில் விக்கெட் சரிந்தாலும் துணிச்சலாக ஆடிய டோஸ்சற் அரைச்சதம் பெற்றார்.

இந் நிலையில் நெதர்லாந்து அணி 46.2 ஓவர்களில் 160 ஓட்டங்களை எடுத்து சகல விக்கெட்டுக்களையுமிழந்தது.

இதில் டோஸ்சற் 71 பந்துகளில் (2 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் உட்பட) 53 ஓட்டங்களை ஆட்டமிழக்காமல் எடுத்தார்.

பந்து வீச்சில் அப்துர் ரஷாக் 3 விக்கெட்டுக்களையும் சகிப் அல் ஹசன், ருபேல் ஹுசைன், சுவோ ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு 50 ஓவர்களில் 161 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற சுலப இலக்குடன் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அணிக்கு முதல் ஓவரிலேயே தமிம் இக்பால் பூச்சியத்துடன் ஆட்டமிழந்து அதிர்ச்சியளித்தார்.

எனினும் இரண்டாவது விக்கெட்டுக்காக கம்பனி சேர்ந்த இம்ருல் ஹைஸ்-ஜுனைட்டட் சிட்டிக் ஜோடி நிதானமான ஆட்டத்தை வழங்கி நம்பிக்கையளித்தனர்.

இந்த ஜோடி இரண்டாவது விக்கெட்டுக்காக 121 பந்துகளில் 92 ஓட்டங்களைப் பகிர்ந்த போது ஜுனைட்டட் சிட்டிக் 53 பந்துகளில் (4 பவுண்டரிகள் உட்பட) 35 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார்.

அடுத்து வந்த நபீஸ் பொறுப்பான ஆட்டத்தை வழங்க மறுமுனையில் இம்ருல் ஹைஸ் 68 பந்துகளில் அரைச்சதம் கடந்தார்.

இதில் நபீஸ் 60 பந்துதுகளில் (4 பவுண்டரிகள் உட்பட) 37 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார்.தொடர்ந்து வந்த அணித்தலைவர் சகிப் அல்ஹசன் ஒரு ஓட்டத்துடன் வெளியேறினார்.

எனினும் தொடர்ந்து களமிறங்கிய ரகீம் தலா ஒரு பவுண்டரி, ஒரு சிக்ஸர் விளாச பங்களாதேஷ் அணி 41.2 ஓவர்களில் 4 விக்கெட்டுக்களை மாத்திரமிழந்து 166 ஓட்டங்களை எடுத்து 6 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இவ் வெற்றியின் மூலம் பங்களாதேஷ் அணி 6 புள்ளிகளுடன் காலிறுதிக்கு முன்னேறும் வாய்ப்பைத்தக்க வைத்தது.

துடுப்பாட்டத்தில் இம்ருல் ஹைஸ் 113 பந்துகளில் (6 பவுண்டரிகள் உட்பட) 73 ஓட்டங்களையும் ரகீம் 11 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காமல் எடுத்தனர்.

பந்துவீச்சில் கூப்பர் 2 விக்கெட்டுக்களையும் புக்காரி, போர்ரன் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் சாய்த்தனர்.

இப் போட்டியில் பங்களாதேஷ் அணியின் வெற்றிக்கு பங்களித்த இம்ருல் ஹைஸ் ஆட்டநாயகனாகத் தெரிவானார்.

இதேவேளை நெதர்லாந்து அணி தான் விளையாடிய ஐந்து ஆட்டங்களிலும் தோல்வியைத் தழுவியது.


## கிரிக்கெட் ரசிகர்களுக்கு ஓர் நற்செய்தி!

MCS இன் ஒரு மில்லியன் ரூபா பரிசை வெற்றிகொள்ள உங்களுக்கு அரிய சந்தர்ப்பம்

தினமும் 5 பேருக்கு
50ஆயிரம் ரூபா வீதம் 100 பேருக்கு
ஒரு மில்லியன் வெற்றிகொள்ளும் வாய்ப்பு
வலம்புரியில் கேட்கப்படும்
உலகக்கிண்ண கேள்விகளுக்கு
சரியான பதிலை அனுப்பி உங்கள் உயர்கல்வி வாய்ப்பை
பெற்றுக்கொள்ளுங்கள்

கூப்பனை வெல்பவர் அல்லது அவரால் வழங்கப்படும் ஒருவர் பின்வரும் கற்கை நெறிகளுக்கு இப் பரிசுக் கூப்பனை பயன்படுத்த முடியும்

1. கொழும்பு பல்கலைக்கழக தகவல் தொழில்நுட்ப பட்டக் கற்கை நெறி
2. சீமா (லண்டன்) CIMA_UK
3. மைக்கிரோசொப்ற் நிறுவன கணினிப் பொறியியலாளர் கற்கை நெறி
4. அடோப் நிறுவனத்தின் மல்ரிமீடியா கற்கை நெறி

## அரையிறுதிச் சுற்றுக்கு தெரிவாகும் அணிகள் ?

1. ........................ 2. ........................
2. ........................ 4. ........................

பெயர்: ..............................
முகவரி: ..............................
..............................
தொ.பே: ..............................
தே.அ.அ.இல: ..............................

சரியான விடையை எழுதி கூப்பனை பூரணப்படுத்தி 22.03.2011 இற்கு முன்னர் அனுப்புபவர்களில் குலுக்கல் மூலம் தெரிவாகும் வெற்றியாளர் ஒருவருக்கு ஒலிம்பியா ஸ்போட்ஸ் வழங்கும் பெறுமதியான பரிசு காத்திருக்கிறது.

அனுப்ப வேண்டிய முகவரி
'உலகக் கிண்ணம்'
வலம்புரி
இல.3,2 -ம் ஒழுங்கை,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

ஒலிம்பியா ஸ்போட்ஸ்
இல06,ஜும்மா பள்ளிவாசல் லேன்
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 222 3490

## இன்றைய கேள்வி ?

உலகக்கிண்ண கிரிக்கெட் வரலாற்றில் அதிக வெற்றிகளைத் தேடித்தந்த அணித்தலைவர் யார்?

..............................................

சரியான விடையை எழுதி கீழுள்ள கூப்பனை பூரணப்படுத்தி 17.03.2011 இற்கு முன்னர் அனுப்புபவர்களில் குலுக்கல் மூலம் தெரிவாகும் வெற்றியாளர்களுக்கு M.C.S வழங்கும் பரிசுக் கூப்பன்.

பெயர்:- ..............................
முகவரி:- ..............................
..............................
தொ.பே:- ..............................
தே.அ.அ.இல:- ..............................

அனுப்ப வேண்டிய முகவரி
'உலகக் கிண்ணம்'
வலம்புரி
இல.3,2 -ம் ஒழுங்கை,
பிறவுண்வீதி, யாழ்ப்பாணம்.





## உலகக்கிண்ண கிரிக்கெட்-2011

சம்பியனாகும் நாடு?..............................

தொடர் நாயகன் விருது யாருக்கு?..............................

சரியான விடையை எழுதி கீழுள்ள கூப்பனை பூரணப்படுத்தி 20.03.2011 இற்கு முன்னர் அனுப்புபவர்களில் குலுக்கல் மூலம் தெரிவாகும் வெற்றியாளர்களுக்கு பெறுமதி வாய்ந்த பரிசில்கள் வழங்கப்படும்.

பெயர்..............................
முகவரி..............................
தொலைபேசி..............................
தே.அ.அ.இல..............................

'உலகக்கிண்ணம்'
வலம்புரி
இல.3, 2-ம் ஒழுங்கை
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

இன்னும் பல பரிசுகள்

Midea Electro Mart
No:1-1, 1-H, STANLEY ROAD, JAFFNA.

ESPN
இ.ச.பே. நாகரத்தினம் சக நிறுவனம்
52,54, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

JAFFNA ELECTRICAL
94(6), Stanley Road, Jaffna.
Tel: 021 222 2353
Fax: 021 222 4302
E-mail:matheesan16@yahoo.com

SINGER-Manipay
Alady Junction, Manipay.
T.P.:021 225 5343
077 6139592

PC SOLUTIONS TECHNOLOGIES (PVT) LTD
305,Kasthuriyar Road Jaffna.
T.P:021 2221101,021 2229644
email:- pcsjaffna@sltnet.lk


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சைக்கிளில் சமாந்தரமாக சென்றோருக்கு அபராதம்

(கரவெட்டி)

சாவகச்சேரி நகரப் பகுதியில் வீதிப் போக்குவரத்துக்கு இடையூறு விளைவிக்கும் வகையில் துவிச்சக்கர வண்டிகளில் சமாந்தரமாகச் சென்ற நபர்களுக்கெதிராக 8 வழக்குகள் சாவகச்சேரி பொலிஸாரினால் சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றில் தொடரப்பட்டுள்ளது.

இச்சம்பவத்துடன் தொடர்புடைய 8 நபர்களையும் நேற்றைய தினம் சாவகச்சேரி நீதிவான் நீதிமன்ற பதில் நீதிபதி செ.கணபதிப்பிள்ளை முன்னிலையில் மன்றில் ஆஜர்படுத்தினர்.

வழக்கை விசாரித்த பதில் நீதிபதி வழக்குடன் தொடர்புடைய நபர்கள் மன்றில் குற்றத்தை ஒப்புக்கொண்டமையால் 500 ரூபாய் அபராதம் செலுத்துமாறு உத்தரவிட்டார். (ஸ்ரீ-3-24)

## கோலப்போட்டி

(சாவகச்சேரி)

தென்மராட்சி வலய பாடசாலைகளின் தரம் ஐந்திற்கான கோலப் போட்டி நாளை புதன்கிழமை பி.ப ஒரு மணிக்கு நுணாவில் மேற்கு அ.த.க. பாடசாலை, மீசாலை விக்னேஸ்வரா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் நடைபெறவுள்ளது.

போட்டியில் கலந்துகொள்ளும் மாணவர்களை உரிய நேரத்திற்கு சமுகமளிக்குமாறு தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிறேமகாந்தன் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-3-29)

## பாடசாலை கட்டட திறப்பு விழா

யா/மறவன்புலவு சகலகலாவல்லி வித்தியாலயத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட பாடசாலைக் கட்டடத் திறப்பு விழா இன்று செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ளது.

மேற்படி கட்டடத்தை சுவிஸ் நாட்டின் இலங்கைக்கான தூதுவர் தோமஸ் லிஸ்ரர் வருகை தந்து திறந்து வைக்கவுள்ளார்.

இந்நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர்கள், கல்வி, அரசியல், அரச பிரமுகர்கள் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளதாக பழைய மாணவர் சங்க செயலாளர் எஸ். சிவகுலன் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-3)

## பரிசளிப்பு விழா

வடமராட்சி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில் மதர் ஒவ் ஸ்ரீலங்கா பன்மைத்துவ கலாசார போட்டிகளில் கோட்ட மட்ட, வலய மட்ட பரிசளிப்பு விழா எதிர்வரும் 18ஆம் திகதி வெள்ளிக்கிழமை பி.ப 2.30 மணியளவில் யா/நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா தலைமையில் நடைபெறவுள்ளது. இப்போட்டிகளில் பங்குபற்றிய பாடசாலை மாணவர்களைத் தவறாது கலந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ-3-19)

# சட்டவிரோதமாக மரங்களை வெட்டியோருக்கு அபராதம்

வடமராட்சிப் பிரதேசத்தில் இயற்கை வளத்தை அழிக்க முற்பட்ட 11 சந்தேக நபர்களை பருத்தித்துறை சூழல் பாதுகாப்பு பொலிஸார் கைது செய்துள்ளனர். மேற்படி நபர்கள் சம்பவதினமன்று மரங்களை விறகுக்காக வெட்டி தமது துவிச்சக்கர வண்டியில் விற்பனை செய்ய எடுத்துச் சென்ற வேளை கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் நேற்றைய தினம் பருத்தித்துறை நீதவான் நீதிமன்ற நீதிபதி திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரம் முன்னிலையில் முற்படுத்தினர். வழக்கை விசாரித்த நீதிபதி குறித்த நபர்கள் மன்றில் குற்றத்தை ஒப்புக் கொண்டமையால் குற்றவாளியாகக் கண்டு தலா ஆயிரம் ரூபா அபராதம் செலுத்துமாறு உத்தரவிட்டார். (ஸ்ரீ-3-24)

## சுனாமி மீள்நிர்மாண திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட 84 வீடுகள் கையளிப்பு

(கரவெட்டி)

வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தில் சுனாமி மீள் நிர்மாணத் திட்டத்தின் கீழ் இரண்டாம் கட்டமாக அமைக்கப்பட்ட 84 வீடுகள் கடந்த வெள்ளிக்கிழமை யாழ். அரச அதிபர் திருமதி. இமெல்டா சுகுமாரால் கையளிக்கப்பட்டது.

சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் அமைக்கப்பட்ட இவ்வீட்டுத் திட்டத்திற்கான நிதியை சர்வதேச இரட்சணிய சேனை வழங்கியுள்ளது.

இதில் மணற்காட்டுப் பிரதேசத்தில் 44 வீடுகளும் ஒரு பொதுமண்டபமும் அம்பன் பிரதேசத்தில் 40 வீடுகளும் வீட்டுப் பயனாளிகளுக்கு கையளிக்கப்பட்டன.

இந்நிகழ்வில் ஐ.நா.இலங்கைக்கான வதிவிடப்பிரதிநிதிகள், அப்பிரதேச இராணுவ அதிகாரிகள், மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் மற்றும் அப்பகுதி மக்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (ஸ்ரீ-3-24)

## விளையாட்டுப் போட்டிகளில் சாதனை



என்.நவறஞ்சினி



எம்.தர்மினி



கே.றூபிகா

வடமராட்சி தெற்கு, மேற்கு பிரதேச செயலாளர் பிரிவுகளுக்குட்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையில் நடைபெற்ற போட்டிகளில் பல வீர, வீராங்கனைகள் சாதனை படைத்துள்ளனர்.

இதில் 10 ஆயிரம் மீற்றர் ஓட்டத்தில் கரவெட்டி வளர்மதி அணியைச் சேர்ந்த என்.நவறஞ்சினி 52 நிமிடம் 30 செக்கனில் ஓடி சாதனை படைத்துள்ளார். அத்துடன் 800 மீற்றர் ஓட்டத்தில் மாலுசந்தி மைக்கல் அணி வீராங்கனை எம்.தர்மினி 3 நிமிடம் 10 செக்கனில் ஓடி 1992ஆம் ஆண்டு கரணவாய் அண்ணா சிலையடி வீராங்கனை நிலைநாட்டிய சாதனையை முறியடித்துள்ளார்.

மேலும் மரதன் ஓட்டப் போட்டியில் தேசிய மட்டத்தில் கலந்துகொண்ட வீராங்கனையை 1500 மீற்றர் ஓட்டத்தில் வென்று மாலுசந்தி மைக்கல் அணி வீராங்கனை கே.றூபிகா முதலாமிடத்தைப் பெற்றுச் சாதனை படைத்துள்ளார். (ஸ்ரீ-3-24)

## சட்டவிரோதமாக மாட்டிறைச்சியை கொண்டுசென்ற நபருக்கு அபராதம்

சாவகச்சேரி நகரப்பகுதியில் சட்டவிரோதமாக மோட்டார் சைக்கிளில் 28 கிலோ மாட்டிறைச்சியைக் கொண்டு சென்ற நபரொருவர் சாவகச்சேரி பொலிஸாரினால் நேற்று கைது செய்யப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த மேற்படி சந்தேக நபர் மாட்டிறைச்சியை விற்பனை செய்யும் நோக்கத்துடன் கொண்டு சென்ற வேளை பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு நேற்றைய தினம் சாவகச்சேரி நீதிவான் நீதிமன்ற பதில் நீதிபதி செ.கணபதிப்பிள்ளை முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டார்.

வழக்கை விசாரித்த பதில் நீதிபதி சந்தேக நபர் மன்றில் குற்றத்தை ஒப்புக்கொண்டமையால் குற்றவாளியாகக் கண்டு 2 ஆயிரம் ரூபாய் அபராதமும் செலுத்தத் தவறின் ஒரு மாதகால சாதாரண சிறைத்தண்டனையும் வழங்கி தீர்ப்பளித்ததுடன் சான்றுப் பொருளான இறைச்சியை அழிக்கவும் பொலிஸாருக்கு உத்தரவிட்டார். (ஸ்ரீ-3-24)

## தளபாடங்கள் அனுப்பிவைப்பு

(அல்வாய்)

யுனிசெப் நிறுவனத்தினால் வடமராட்சி கல்வி வலயத்திற்கு ஆரம்ப பிரிவுகளுக்கான தளபாடத் தொகுதிகள் நேற்றும் நேற்று முன்தினமும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இவை பாடசாலையின் தேவைக்கேற்ப வலயக் கணக்காளரினால் பங்கிட்டு விநியோகிக்கப்பட்டு வருகின்றது.

மேலும் பாடசாலையிலுள்ள வறிய மாணவர்களுக்கான கற்றல் சாதனங்கள் கிடைத்துள்ளதாகவும் இவை விரைவில் பங்கிட்டு வழங்கப்படுமென வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா அறிவித்துள்ளார். (ஸ்ரீ-3-19)

## மெய்வல்லுநர் போட்டி

(அல்வாய்)

மருதங்கேணி இந்து தமிழ்க்கலவன் பாடசாலையின் இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை புதன்கிழமை பி.ப 1.30 மணிக்கு கல்லூரி மைதானத்தில் அதிபர் எஸ்.ஸ்ரீராமச்சந்திரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக வடமராட்சி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் சி.நந்தகுமார் கலந்துகொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் ந.திருலிங்கநாதன், மருதங்கேணி 55ஆவது படைப் பிரிவு சிவில் அதிகாரி லெப். கேணல் சி.டி. சில்வா ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (ஸ்ரீ-3-19)

## கருத்தரங்கு

(அல்வாய்)


அழகியற்பாட உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், ஆசிரிய ஆலோசகர்களுக்கான கருத்தரங்கு இன்று செவ்வாய்க்கிழமையும் நாளை புதன்கிழமையும் காலை 8.30 மணி தொடக்கம் பி.ப 4.30 மணிவரை யா/கனகரட்ணம் மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

மேற்படி கருத்தரங்கில் சங்கீதம், நடனம், சித்திரம், நாடகமும் அரங்கியலும் பாடத்துறை சார்ந்த உதவிக் கல்விப் பணிப்பாளர்கள் மற்றும் ஆசிரிய ஆலோசகர்கள் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

அத்தோடு நாடகமும் அரங்கியலும் பாடத்திற்குத் தகுதியான ஆசிரியர் ஒருவரை அனுப்பி வைக்குமாறு மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் பி.எஸ். இரேனியஸ் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-3-19)

யாழ்.செய்திகள்







சுன்னாகம் வருசப்புலம் மகாமாரி அம்பாள் ஆலயத் தேர்த் திருவிழா அண்மையில் நடைபெற்றது. இத்திருவிழாவில் தேர்வலம் வருவதையும் கவிஞர் துரையர் எழுதிய 'அம்மன் அர்ச்சனை மாலை' வெளியீட்டின் தொடக்கவுரையை சிவத்தமிழ்ச்செல்வர் சி.சண்முகவடிவேல் நிகழ்த்துவதையும் பிரதமகுரு பிரம்மஸ்ரீ க.சபாபதி குருக்கள் முதல் [illegible] வழங்குவதையும் படங்களில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்று ஒரு தகவல்

# குழந்தையின் குருதிக் கொடை

இந்த உலகத்திலேயே குறைந்த வயதில் இரத்ததானம் செய்த குழந்தை எமிலிஹாக்ஸ் என்ற பெண் குழந்தையாகும்.

அது இரத்ததானம் செய்யும்போது அதன் வயது ஒருநாள் கூட ஆகவில்லையாம்.

அது பிறந்து சில நிமிடங்களிலேயே இரத்ததானம் செய்து விட்டதாம். அந்த இரத்தம் இன்னொரு குழந்தையைக் காப்பாற்றி இருக்கிறது.

பிரிட்டனின் பிறிஸ்டல் நகரிலுள்ள சவுத்மீட் மருத்துவமனையில் 1995 இல் மாண்டி என்ற 27 வயதுப் பெண்ணுக்குப் பிறந்த குழந்தை தான் எமலி.

குழந்தை பிறந்ததும் அதை தாயிடம் இருந்து பிரிப்பதற் காக தொப்புள்கொடியை அறுப்பார்கள் அல்லவா? அதிலுள்ள இரத்தத்தைதான் எடுத்துச் சேகரிக்கிறார்கள். இது வலியில்லாத மிகவும் சுலபமான குருதிச்சேகரிப்பு.

அந்த தொப்புள்கொடி சிறிது நாட்களில் தனியாகி வீணாகிப்போய்விடக்கூடிய ஒன்றுதான் என்பதால் அதில் உள்ள இரத்தத்தை எடுப்பதனால் குழந்தைக்கு எந்தக்கெடுதலும் இல்லை. குழந்தையின் இரத்தத்துக்கு சில சிறப்பான குணங்களுண்டு.

இரத்தம் சம்பந்தமான நோய்களை எதிர்த்து போராடக்கூடிய வலிமை அதற்கு உண்டு. இரத்தப் புற்றுநோய், இரத்தம் தொடர்பான வேறு நோய்கள் போன்றவைகளால் அவதிப்படும் குழந்தைகளுக்கு, பச்சிளம் குழந்தைகளின் இரத்தத்தை செலுத்தினால் விரைவில் குணமாகும். இன்றைக்கு உலகத்தில் ஒரு சில மருத்துவமனைகளில் இதுபோன்ற பரிசோதனைகள் நடந்து கொண்டிருக்கின்றன.

தொப்புள்கொடி இரத்தமாற்று சிகிச்சை என்று இதற்கு பெயர் வைத்திருக்கிறார்கள்.

இந்தப் புரட்சிகரமான மருத்துவ சிகிச்சை மூலமாக பல குழந்தைகள் இப்போது காப்பாற்றப்படுகின்றனர்.

இரத்தபுற்றுநோய் கண்ட, பெரியவர்களையும் கூட இந்த இரத்தம் காப்பாற்றுகிறது என்று இப்பொழுது கண்டுபிடித்திருக்கிறார்கள்.

தொப்புள்கொடியிலிருந்து எடுக்கப்பட்ட இரத்தத்தை ஒரு போத்தலில் செலுத்தி நோய்வாய்ப்பட்ட குழந்தைக்கு ஏற்றுவது தான் தற்போதைய சிகிச்சை முறை.

இந்தத் தொப்புள்கொடி இரத்தம் எட்டு வயதுக்கும் குறைவாக உள்ளன. குழந்தைகளின் உடம்பில் செலுத்தப்படும்போது அது சாதாரண இரத்தமாக மாறிவிடுகிறது என்கிறார் அந்த மருத்துவமனையிலுள்ள டாக்டர்.

பச்சிளம் குழந்தையின் இரத்தத்தில் உள்ள ஸ்டெம்செல்கள் சுத்தமானவை. கருப்பையில் எந்த நோய்த்தாக்குதலுமின்றி பாதுகாப்பாக இருந்து வந்திருக்கும்.

அதனால் அது நோயாளிகளின் உடம்பிலுள்ள நல்ல செல்களையோ எலும்புமச்சையையோ தாக்காது அவைகளோடு பொருந்திவிடும்.

எல்லாவற்றையும் விட முக்கியமான செய்தி நம்பிக்கையில்லாத பல்வேறு சிகிச்சை முறைகளுக்குப் பதிலாக முதன் முறையாக இரத்தப் புற்றுநோய்க்கு சாத்தியமான ஒரு நல்ல சிகிச்சை முறை கிடைத்திருக்கிறது என்பதுதான்.

எமிலி என்ற அந்தக் குழந்தை பிறந்தவுடனேயே அந்தக் குழந்தையின் தாயிடம் (மாண்டி) இப்படி ஒரு யோசனையை டாக்டர்கள் சொன்னார்களாம். உடனே அந்த அம்மா சம்மதம் கொடுத்தாராம்.

"என் குழந்தை தானம் செய்யும் இரத்தத்தால் உயிருக்குப் போராடும் இன்னொரு குழந்தை காப்பாற்றப்படும் என்ற நினைப்பே எனக்கு பரவசம் தந்தது" என்கின்றார் அந்த அம்மா. அதுவும் தொப்புள்கொடியில் இரத்தம் கேகரிப்பது மிகவும் எளியமுறை.

நம் உடம்பில் எடுப்பதுபோன்று இரத்தக்குழாயை தேடிப் பிடித்து ஊசியால் குத்தி நம்மைப் பயமுறுத்தி போத்தலில் சேகரிப்பது போலல்ல. இது பரவசமூட்டக் கூடிய இரத்ததானம். இந்த உலகத்திற்கு வந்து சேர்ந்தவுடனேயே முதலில் ஒரு நல்ல காரியம் செய்வதற்கு இது ஒரு சந்தர்ப்பம்.

இந்தக்காலத்தில் இரத்ததானம் செய்வதற்கு எவ்வளவு பிரசாரம் செய்யவேண்டியிருக்கிறது. சிபாரிசு செய்ய வேண்டியிருக்கிறது.

நம்ம ஆள் ஒருத்தன் இரத்ததானம் செய்வதற்கு மிகவும் பயந்து கொண்டிருந்தான். ஒருத்தன் துணிந்து சென்றான்.

டாக்டரின் அறைக்கு நுழைந்தான் .

சிறிது நேரத்தில் வேகமாக வெளியில் வந்தான்.

"ஏனப்பா வந்துவிட்டாய்? இரத்ததானம் செய்யவில்லையா?" என்று கேட்டார்கள்.

"இல்லை. செய்யவில்லை?" என்றான்.

"ஏன்?" என்றார்கள்.

"இரத்தத்தைக்கண்டால் மயக்கம் வந்துவிடும்" என்றான் பயந்து கொண்டே.

"அப்ப ஏன் இவ்வளவு தூரம் வந்தாய்? "என்றார்கள்.

"ஐயோ...அது எனக்கில்லை. இரத்தத்தைக் கண்டால் டாக்டருக்கு மயக்கம் வந்துவிடுமாம். அதுதான் வெளியில் வந்துவிட்டேன்" என்றார்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# சட்டக்கல்லூரியின் கற்கைநெறிகளுக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது

(கிளிநொச்சி)

இலங்கைச் சட்டக்கல்லூரியில் 2012ஆம் ஆண்டிற்கு மாணவர்களை அனுமதிப்பதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பப் பத்திரங்களை கொழும்பு 12 இல் அமைந்துள்ள இலங்கைச் சட்டக்கல்லூரியில் எதிர்வரும் ஏப்ரல் 7ஆம் திகதி வரை அலுவலக நாட்களில் காலை 9 மணி தொடக்கம் நண்பகல் 12 மணிவரையும் பிற்பகல் 1.30 மணி தொடக்கம் பிற்பகல் 3 மணிவரையும் பெற்றுக்கொள்ளலாம்.

க.பொ.த. (உ/த) பரீட்சையில் புதிய பாடத் திட்டத்தின் கீழ் ஒரே அமர்வில் 3 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

க.பொ.த. (உ/த) பரீட்சையில் பழைய பாடத்திட்டம் எனில் ஒரே அமர்வில் 4 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும் எனவும் க.பொ.த. (சா/த) அல்லது தே.க. பொ.த. பரீட்சையில் ஆங்கிலம், தமிழ் ஆகிய பாடங்களில் திறமைச் சித்தி பெற்றிருத்தல் வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள் ளது.

பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்களை அதிபர், இலங்கை சட்டக்கல்லூரி, இலக்கம் 244, புதுக்கடைத்தெரு, கொழும்பு 12 என்னும் முகவரிக்கு எதிர்வரும் ஏப்ரல் 12ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பதிவுத்தபாலின் மூலம் அனுப்பி வைக்குமாறும் விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதி நாள் அன்று 18 வயதுக்குக் குறையாமலும் 35 வயதிற்கு மேற்படா மலும் இருத்தல் வேண்டும்.

மேலதிக விபரங்களை சட்டக் கல்லூரியின் இணையத்தளமான www. sllc.ac.lk மூலமாகவும் அறிய முடியும்.

(ஸ்ரீ-3-30)

# அமைச்சு வாகனம் மோதி ஒருவர் பலி

(கொழும்பு)

பிரதியமைச்சர் ஒருவரின் மனைவி பயணித்ததாக கூறப்படும் வாகனம் அவிசாவளையில் விபத்துக்குள்ளானதில் ஒருவர் பலியாகியுள்ளதுடன் மூவர் காயமடைந்துள்ளனர். இந்த விபத்து நேற்று முன்தினம் இரவு எட்டு மணியளவில் அவிசாவளையில் உள்ள உக்வத்த சந்தியில் இடம்பெற்றுள்ளது.

எனினும் பிரதியமைச்சரின் மனைவி வாகனத்தில் இருந்தார் என்பதை மறுத்துள்ள அவிசாவளைப் பொலிஸார் அமைச்சுக்கு சொந்தமான வாகனம் விபத்துக்குள்ளானதில் ஒருவர் பலியாகியுள்ளதுடன் மூவர் காயமடைந்துள்ளதாக தெரிவித்தனர். (ஸ்ரீ-2)

# உள்ளூராட்சி மன்றத் தேர்தலை முன்னிட்டு பாடசாலை விடுமுறை

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை முன்னிட்டு வாக்களிப்பு நிலையங்களாக செயற்படும் பாடசாலைகள் நாளையும் நாளை மறுதினமும் மூடப்படும் என்று கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

இதேவேளை உள்ளூராட்சி தேர்தல் வாக்கெண்ணும் நிலையங்களாக பயன்படுத்தப்படும் மூன்று கல்வியற்கல்லூரிகள், 11 தேசியப்பாடசாலைகள் மற்றும் 12மாகாண சபை பாடசாலைகளுக்கு ஏற்கனவே விடுமுறை வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இப்பாடசாலைகள் எதிர்வரும் 18ஆம் திகதி வெள்ளிக்கிழமையும் மூடப்படும் என்று மேலும் அறிவிக்கப்பட்டுள்ளது.

(ஸ்ரீ)

## குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | மருதனார்மடம் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | சாவகச்சேரி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 120 | 100 | 150 | 150 |
| உருளைக்கிழங்கு | 70 | 70 | 80 | 70 |
| பச்சைமிளகாய் | 200 | 200 | 200 | 240 |
| தக்காளி | 140 | 150 | 160 | 130 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 50 | 60 | 50 |
| கோவா | 80 | 80 | 110 | 100 |
| கரட் | 160 | 180 | 200 | 180 |
| பூசணி | 70 | 70 | 80 | 60 |
| புடோல் | 80 | 80 | 100 | 80 |
| வாழைக்காய் | 60 | 50 | 80 | 50 |
| சின்ன வெங்காயம் | 70-100 | 90 | 100 | 110 |
| பெரிய வெங்காயம் | 70 | 60 | 80 | 70 |
| பாகற்காய் | 120 | 120 | 160 | 150 |
| வெண்டிக்காய் | 120 | 120 | 160 | 150 |
| கருணைக் கிழங்கு | -- | 70 | 120 | 100 |
| பயற்றங்காய் | 90 | 120 | 160 | 170 |
| லீக்ஸ் | 160 | 130 | 150 | 140 |
| பீற்றூட் | 80 | 50 | 80 | 60 |
| கறிமிளகாய் | 160 | 150 | 200 | 180 |
| முருங்கைக்காய் | -- | 500 | 600 | 500 |
| போஞ்சி | 120 | 120 | 160 | 150 |
| கத்தரிதம்புள்ள | 100 | 80 | 140 | 130 |
| கீரை - 1 பிடி | 20 | 20 | 20 | 20 |
| தேசிக்காய் | 60 | 50 | 80 | 60 |
| தேங்காய் (ஒன்று) | 30-60 | 50 | 60 | 50 |

## இராசி பலன்

*15.03.2011*
*(பங்குனி 01, செவ்வாய்க்கிழமை)*
*சூரிய உதயம் காலை 6.18 மணிக்கு*
*தசமி முற்பகல் 10.37 மணிவரை*
*புனர் பூசம் பிற்பகல் 3.54 மணிவரை*
*இராகுகாலம் 3.21-4.51 மணிவரை*
*சுபநேரம் 10.51-12.21 மணிவரை*

**மேடம்** பெற்றோர் நலனில் கூடிய அக்கறை எடுப்பீர்கள், புதிய பொருட்கள் வாங்கும் எண்ணம் மேலோங்கும், தொலைபேசி மூலம் இனிய செய்திகள் வந்து சேரலாம்.

**இடபம்** குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை அமையும், அரசு வழி சலுகைகள் கிடைக்கும், சகோதரர்கள் உங்கள் முன்னேற்றத்திற்கு உறுதுணை புரிவர், பண வரவு திருப்தி தரும்.

**மிதுனம்** மாமன்- மைத்துனர் வழியில் நல்ல செய்திகள் வந்துசேரும், பொருள் வரவிற்கு அத்திவாரமிடுவீர்கள், புதிய நட்பால் பொருளாதார நலன்விருத்தியடையும்.

**கடகம்** அம்பிகை வழிபாட்டால் அமைதி காண வேண்டிய நாள், நண்பர்கள் சந்திப்பு இடம்பெறலாம், பக்குவமாகப்பேசி காரியங்களைச் சாதிப்பீர்கள்.

**சிங்கம்** திடீரெனக் கேட்கும் செய்திகளால் வியப்படையலாம், ஆலய வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், சிந்தித்துச் செயற்பட வேண்டியநாள், காரிய அலைச்சல்கள் ஏற்படலாம்.

**கன்னி** குடும்பத்தில் உங்கள் செல்வாக்கு மேலோங்கும், நல்ல தகவல்கள் வந்து சேரும், திடீர் பணவரவு மனதிற்கு சந்தோசத்தைக் கொடுக்கும், போசன சுகமுண்டு.

**துலாம்** ஆற்றல் மிக்கவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், எதிர்பாராத வகையில் பணவரவுகள் வந்து சேரலாம், கொடுத்த வாக்கை காப்பாற்றி மகிழ்வீர்கள், போசன சுகமுண்டு.

**விருச்சிகம்** வியக்கும் செய்தி வீடு வந்து சேரும், எதிர்பார்த்த காரியமொன்று இன்று நடைபெறலாம், பயணங்களால் பலனுண்டு, தொழில் வளர்ச்சிக்கு பெண்வழிஉதவிகள் கிட்டும்.

**தனுசு** காரிய வெற்றிக்கு கந்தனை வழிபட வேண்டிய நாள், பயணத்தால் மன உளைச்சல்கள் ஏற்படலாம், கொடுக்கல்- வாங்கல்களில் கவனம் தேவை, மனச்சஞ்சலங்கள் ஏற்படலாம்.

**மகரம்** இனத்தொடர்புகள் அதிகரிக்கும், மனதிற்கு இனிய சம்பவங்கள் நடைபெறலாம், குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும், கொடுக்கல்- வாங்கல்கள் ஒழுங்காகும்.

**கும்பம்** உடல் நலம் சீராகி உற்சாகம் அடைவீர்கள், உள்ளொன்று வைத்து புறம் ஒன்று பேசுபவர்களை இனம் கண்டு கொள்வீர்கள், ஒப்படைத்த பொறுப்புக்கள் நல்லபடியாக நடைபெறும்.

**மீனம்** பொருளாதார நிலை உயர்வடையும், சுபசெய்திகள் வந்து சேரலாம், பூர்வ புண்ணிய கருமங்களில் ஈடுபடலாம், பெற்றோர் நலனில் அக்கறை எடுப்பீர்கள்.

வலம்புரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புகுஷிமா அணு உலையின் 3 ஆவது பிரிவும் வெடித்து சிதறியது

## 3இலட்சம் பேர் வெளியேற்றம்

ஜப்பானின் புகுஷிமா அணு உலை யின் 3 ஆவது பிரிவும் நேற்று காலை வெடித்து சிதறியது. அணு உலையில் அதிக நைதரசன் வெளியேறி வருவதாக ஜப்பான் அரசாங்கம் தெரிவித்துள்ளது. 3 ஆவது பிரிவில் குளிரூட்டி செயற்படாததால் அணு உலை வெடித்து சிதறியதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அணு உலை வெடித்துள்ளதால் 3 இலட்சத்திற்கு மேற்பட்டோர் வெளியேற்றப்பட்டுள்ளனர். இதனிடையே ஹிரோஷினாவை போன்று மீண்டும் பெரும் அழிவு ஏற்படுமா என்ற அச்சத்தில் ஜப்பான் மக்கள் உள்ளனர்.

இதனிடையே 19 பேர் கதிர்வீச்சால் பாதிக்கப்பட்டிருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. மேலும் 100 பேர் கதிர்வீச்சால் பாதிக்கப்பட்டிருக்கலாம் எனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை ஜப்பானில் நேற்று காலை மீண்டும் சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது.

ரிக்டர் அளவு கோலில் இது 6.3 புள்ளிகளாக பதிவாகியுள்ளது. இதனால் மக்கள் பெரும் அச்சத்தில் உள்ளனர். நிலநடுக் கத்தை தொடர்ந்து பின் அதிர்வுகளும் தொடர்ந்து நீடித்து வருவதால் மக்கள் வீதிகளில் தஞ்சம் அடைந்துள்ளனர்.

நிலநடுக்கத்தால் சுனாமி ஏற்பட வாய்ப்பில்லை என ஜப்பான் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இதனால் மக்கள் நிம்மதி அடைந்துள்ளனர். (ஸ்ரீ)

## பெரிய புராணம் முற்றோதல்

அகில இலங்கை திருமுறை மன்றம் ஈழத்திருநாட்டு மக்கள் சாந்தி, சமாதானம் நிம்மதியாக வாழ வேண்டும் என பிரார்த்தித்து வருடம் முழுவதும் மாதம் ஒரு கோயில், மாதம் ஒரு திருமுறை முற்றோதல் என 12 மாதமும் 12 திருமுறை முற்றோதி வருகின் றன.

அந்த வகையில் இன்று செவ்வாய்க்கிழமை காலை 9 மணியளவில் யாழ்ப்பாணம் வண்ணை ஸ்ரீ வாலாம்பிகா சமேத ஸ்ரீ வைத்திய நாதசுவாமி தேவஸ்தானத்தில் இருந்து (கடையிற்சுவாமி சிவன்கோயிலில் இருந்து) அழகிய சுந்தர முத்துப்பல்லக்கில் எழுந்த ருளி கிரிமலை ஸ்ரீ நகுலாம்பிகை சமேத ஸ்ரீ நகுலேஸ்வரர் தேவஸ்தானத்தை (கிரிமலைச் சிவன்கோயிலை) சென்றடைந்து 12 திருமுறை (பெரியபுராணம்) முற்றோதல் ஆரம்பமாகி தினமும் காலைப் பூசையுடன் தொடர்ந்து நடைபெறும் அடியார்கள் தினமும் பங்குபற்றி பயன்பெறுமாறு மன்றப் பொருளாளர் க.கு.க.சிவபாலன் அறியத்தருகின்றார். (ஸ்ரீ)

# பொலனறுவையில் இடம்பெற்ற பஸ் விபத்தில் 30 பேர் காயம்

(கொழும்பு)

பொலனறுவை ஹிங்குராகொடை பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் 30 பேர் காயமடைந்துள்ளனர்.

பொலனறுவையிலிருந்து ஹிங் குராங்கொடையை நோக்கி சென்று கொண்டிருந்த பேருந்து ஹத்தமுனை என்ற இடத்தில் பாதையை விட்டு விலகி 15 அடி பள்ளத்தில் விழுந்து விபத்துக்குள்ளானது என ஹிங்குராங்கொட பொலிஸார் தெரிவித்தனர்.

பேருந்து வண்டியில் ஏற்பட்ட தொழில்நுட்ப கோளாறே இவ்விபத்துக்கு காரணம் என பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தில் காயமடைந்தவர்கள் பொலனறுவை மற்றும் ஹிங்குராங்கொடை வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (ஸ்ரீ-2)

# ஓமந்தை புகையிரத நிலையம் அடுத்த வாரம் திறப்பு

ஓமந்தை புகையிரத நிலையம் எதிர்வரும் 26ஆம் திகதி திறந்து வைக்கப்படவுள்ளதாக அரசாங்கத்தின் தகவல் வட்டாரங்களிலிருந்து தெரியவருகின்றது.

எதிர்வரும் 26ஆம் திகதி ஓமந்தை புகையிரத நிலையத் திறப்பு விழாவை பாரிய வைபவமாக நடாத்த அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக அறியக் கிடைத்துள்ளது. அதனையடுத்து அன்றைய தினம் தொடக்கம் யாழ். தேவியின் புகையிரத சேவை ஓமந்தை வரை நீடிக்கப்படவுள்ளது.

தற்போதைக்கு யாழ்தேவி புகையிரத சேவை தாண்டிக்குளம் வரை மட்டுமே இடம் பெறுகின்றது. தாண்டிக்குளத்திற்கு அப்பாலான புகையிரத பாதை இன்னும் சீரமைக்கப்படாமையே அதற்கான காரணமாகும்.

அத்துடன் தற்போது வவுனியாவிலிருந்து பகல் 3.30 மணியளவில் கொழும்புக்குப் புறப்படும் யாழ்தேவி ரயில் ஓமந்தை புகையிரத நிலையம் திறந்து வைக்கப்பட்டதன் பின் ஒரு மணி நேரம் முன்னதாகவே புறப்படும் வகையில் (அதாவது பகல் 2.30 மணிக்கு புறப்படும் வகையில்) நேரமாற்றம் செய்யப்படவுள்ளது. (ஸ்ரீ)

# போலி விசா மூலம் டுபாய் ஊடாக கனடா செல்ல முற்பட்டவருக்கு பிணை

(கொழும்பு)

போலி விசா மூலம் டுபாய் ஊடாக கனடா செல்ல முற்பட்ட கொழும்பு வாசிக்கு பிணையில் செல்ல நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.

போலி விசாவின் மூலம் டுபாய் ஊடாக கனடா செல்ல முற்பட்ட நிலையில் டுபாயிலிருந்து நாடுகடத்தப்பட்ட பிரஸ்தாப நபர் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார்.

தற்போது அவருக்கு பதினைந்தாயிரம் ரூபா ரொக்கப் பிணையிலும் இரண்டு இலட்சம் ரூபா சரீரப் பிணையிலும் செல்ல அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

வத்தளையைச் சேர்ந்த நபரொருவரே தனக்கு போலி விசா தயாரித்துக் கொடுத்ததாகவும் அதற்காக இருபது இலட்சம் தொகை கட்டணமாகக் கோரப்பட்டிருந்தாகவும் சந்தேக நபர் நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

தனது உண்மையான கடவுச்சீட்டு மூலமாக டுபாய் சென்றிருந்த அவர் அங்கிருந்து போலி கனடா விசாவைத் தனது கடவுச் சீட்டில் ஒட்டிக் கொண்டுள்ளார். ஆயினும் டுபாய் விமான நிலைய அதிகாரிகள் அதனைக் கண்டுபிடித்து அவரை நாடு கடத்தியிருந்தனர். (ஸ்ரீ)

# உள்ளூராட்சிமன்ற தேர்தல் கடமைகளுக்காக 70 ஆயிரம் இராணுவத்தினர் ஈடுபடுத்தப்படவுள்ளனர்

(கொழும்பு)

நாளை மறுதினம் நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தல் கடமைக்காக 70 ஆயிரம் படையினர் ஈடுபடுத்தப்படவுள்ளனர்.

பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் தேர்தல் கடமைகளுக்காக ஈடுபடுத்தப்படவுள்ளதாக குறிப்பிடப்படுகின்றது.

நேற்று நள்ளிரவுடன் தேர்தல் பிரசார நடவடிக்கைகள் முடிவுறுத்தப்பட வேண்டுமென தேர்தல்களுக்குப் பெறுப்பான பிரதி பொலிஸ் மா அதிபர் காமினி நவரட்ன தெரிவித்துள்ளார்.

50 ஆயிரம் பொலிஸ் உத்தியோகத்தர்களும் 15 ஆயிரம் முப்படையைச் சேர்ந்தவர்களும் 5 ஆயிரம் விசேட அதிரடிப்படைப் பிரிவைச் சேர்ந்தவர்களும் கடமையில் ஈடுபடுத்தப்படவுள்ளனர்.

இதேவேளை நாளையும் நாளைமறுதினமும் மற்றும் 18 ஆம் திகதிகளிலும் பாதுகாப்புப் படையினர் கடமையில் ஈடுபடுத்தப்படவுள்ளதாக குறிப்பிடப்படுகின்றது.

இதேவேளை தேர்தல் சட்டங்களை மீறிய 578 சம்பவங்கள் பதிவாகியுள்ளதாகவும் மூன்று படுகொலைச் சம்பவங்கள் உள்ளிட்ட பல்வேறு முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ஸ்ரீ-2)

# இலங்கை- இந்திய மீனவர்கள் பிரச்சினை முதற்கட்ட பேச்சுவார்த்தை இந்தியாவில்

இலங்கை- இந்திய மீனவர்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கான முதற்கட்ட பேச்சுவார்த்தை இந்தியாவில் நடைபெறவுள்ளது.

இது தொடர்பாக இரு நாடுகளுக்கிடையில் மேற்கொள்ளப்படவுள்ள புரிந்துணர்வு ஒப்பந்தம் பற்றிய முதற்கட்ட பேச்சுவார்த்தையை நடத்த இலங்கையின் உயர் மட்டக் குழுவொன்று எதிர்வரும் 27 ஆம் திகதி புதுடில்லி செல்லவுள்ளது.

வெளிநாட்டமைச்சு, கடற்றொழில் நீரியல் வள அமைச்சு மற்றும் கடற்படை அதிகாரிகளும் இக்குழுவில் இடம்பெறவுள்ளதாக அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

இது தொடர்பில் அடுத்த வாரம் இலங்கையிலுள்ள இந்திய உயர்ஸ்தானிகருடனும் பேச்சுவார்த்தையொன்றையும் மேற்கொள்ளவுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார். (ஸ்ரீ-2)

# நல்லிணக்க ஆணைக்குழு கண்டி மக்களிடம் சாட்சியம்

கற்றறிந்த பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு கண்டி மக்களிடம் சாட்சியங்களை திரட்டுவதற்கு தீர்மனித்துள்ளது.

மலையக பெருந்தோட்ட மக்களிடமும் நல்லிணக்க ஆணைக்குழு சாட்சியங்களை திரட்ட உள்ளதாக ஆணைக்குழுவின் ஊடக ஆலோசகர் லக்ஸ்மன் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

மலையக மக் களை பிரதிநிதித்துவப்படுத்தும் அமைப்புக்கள் மற்றும் கிராம மக்களிடம் சாட்சியம் திரட்டப்படவுள்ளது.

இதன்படி எதிர்வரும் 20 ஆம் திகதி கண்டியில் நல்லிணக்க ஆணைக்குழு சாட்சியங்களை திரட்டும் என தெரிவிக்கப்படுகிறது.

மலையக மக்கள் சாட்சியங்களை அளிப்பதற்கு ஏற்கனவே சந்தர்ப்பம் அளிக்கப்பட்டதாக அவர் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# மெய்வல்லுநர் போட்டி

யா/கலட்டி மெதடிஸ்த மிஷன் தமிழ் கலவன் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் திறனாய்வு போட்டி இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பாடசாலை மைதானத்தில் அதிபர் க.இரவீந்திரராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக மக்கள் வங்கிக் கிளைமுகாமையாளர் ஆ.சத்தியமூர்த்தி, சிறப்பு விருந்தினர்களாக பழைய மாணவியும் யா/பெரியபுலம் மகாவித்தியாலய ஆசிரியையுமான திருமதி உ.மனோகரி, மல்ரிபாம் உரிமையாளர் பீ. ஜெயந்திஜரன் நெனின் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (ஸ்ரீ)


**கரைச்சி புளியம்பொக்கணை நாகதம்பிரான்**
**ஆலய பொங்கல்விழாவை முன்னிட்டு**
**பக்தர்களுக்கான பாதுகாப்புப் பிரிவினரின் அறிவித்தல்**

நாகதம்பிரான் ஆலய பங்குனி உத்தர பொங்கல் விழாவுக்கு வருகைதரும் பக்தர்கள் குறிப்பாக பெண் பக்தர்கள் தயவு செய்து தங்கள் பாதுகாப்புக்கருதி தங்க ஆபரணங்கள் அணிந்து வருவதை தவிர்த்துக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

இவ்வண்ணம்
ஆலய பரிபாலன சபை

(சி-2688)

**கரைச்சி புளியம்பொக்கணை நாகதம்பிரான்**
**ஆலய பொங்கல்விழாவை முன்னிட்டு தண்டல்**
**ஒழுங்குகள் பற்றிய அறிவித்தல்**

மேற்படி நாகதம்பிரான் ஆலய பொங்கல்விழா எதிர்வரும் 19.03.2011 சனிக்கிழமை வழமைபோல நடைபெறவுள்ளது. இதனை முன்னிட்டு உழவியந்திர சகிதம் ஆலய சின்னம் பொறிக்கப்பட்ட பிரசுரங்களுடன் 13.03.2011 ஞாயிறு தொடக்கம் 17.03.2011 வியாழன் வரை வட்டக்கச்சி, இராமநாதபுரம், கல்மடுநகர், விசுவமடு, பிரமந்தனாறு, புன்னை நீராவி, மயில தர்மபுரம், திருவையாறு போன்ற பகுதிகளுக்கு வருகைதரவுள்ளார்கள் என்பதை மகிழ்வுடன் அறியத்தருகின்றோம்.

இவ்வண்ணம்
ஆலய பரிபாலன சபை

(சி-2689)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காசநோய் சமூக அணுகுமுறை

## 06 காசநோயும் புகைத்தலும்



Dr.சி.யமுனானந்தா, MBBS,DTCD
மாவட்ட காசநோய்க் கட்டுப்பாட்டு அதிகாரி,
மார்புநோய் சிகிச்சை நிலையம்,
பண்ணை,யாழ்ப்பாணம்.

புகைப்பிடிப்பவர்களில் காசநோய் ஏற்படும் நிகழ்தகவு சாதாரணமானவர்களை விட 2.6 வீதம் அதிகம் ஆகும். புகைத்தலைக் கைவிட்டால் சமூகத்தில் காச நோய் ஏற்படும் நிகழ்தகவு குறைவாகும். காச நோயாளிகளில் சுமார் 25 வீதமானோர் புகைப்பிடிக்கும் பழக்கத்தினை உடையவர்களாவர்.

வீட்டினுள் உள்ள காற்று மாசடைதலும், காசநோய் ஏற்படும் நிகழ்வினை 1.5 வீதத்தினால் அதிகரிக்கின்றது. காசநோயாளிகளில் 25 வீதமானோரில் வீட்டினுள் புகை மாசு காணப்படுகின்றது. "பகை புகை மிகை நகை" என்ற சொற்றொடரும் "தீயில் தீயவர் வாய்தனில் தீதனை நயப்பர்" என்ற வார்த்தையும் புகைத்தல் விலத்தலை வலியுறுத்துகின்றது.

### காசநோயும் மதுபானமும்

மதுபானத்தினை தினமும் 100 மில்லிலீற்றர்40 வீதத்தில் சாராயத்தினை பாவிப்பவர்களிற்கு அல்லது தினமும் 2 போத்தல் பியர் குடிப்பவர்களிற்கு காசநோய் ஏற்படும் சார்பு அபாயநிலை சாதாரணமானவர்களை விட 2.6 வீதம் அதிகம் ஆகும். காச நோயாளிகளில் 13 வீதம் மதுபானம் உபயோகிப்பவர்களாக உள்ளனர்.

அநேகமான மருந்துகளை இடையில் கைவிடும் காசநோயாளிகளில் பலர் மதுபானம் உபயோகிப்பவர்களாக உள்ளனர். மதுபானம் ஈரற்கலன்களைப் பாதிப்படையச் செய்யும். இதனால் காசநோய்க்கு அளிக்கப்படும் மருந்துகளின் பக்க விளைவு அதிகரிக்கும். எனவே, மதுபான்ம் உபயோகிப்பவர்கள் காசநோய்க்கு உட்படும் போது மதுவிலக்கல் சிகிச்சையும் மிகவும் அவசியம்.

"வடி குடி மடி-கடிநீ" என்பது மதுவால் ஏற்படும் இழப்பு குறித்து விழித்து நிற்கின்றது.

### காசநோயும் போசாக்கும்

போசாக்கும் காசநோயும் ஒன்றுடன் ஒன்று பின்னிப் பிணைந்தவை. போசாக்கு குறைபாடு உடையோரில் காசநோய் இலகுவாகத் தொற்றிக்கொள்ளும்.காச நோய் ஏற்பட்டோரில் போசாக்கு குறைபாடு ஏற்படலாம். புரதக்கலோரிக் குறைபாட்டால் காச நோய் ஏற்படலாம்.உடற்திணிவுச் சுட்டி20 இற்கு மேல் இருத்தல் நல்லது. உடற்திணிவுச் சுட்டி 18 இனைவிடக் குறைவாயின் காசநோய்த் தொற்றல் நிகழ்வு அதிகம். நுண் போசணைக் குறைபாட்டால், அதாவது விற்ற மின்A,C,D மற்றும் நாகம் செலனியம் குறை பாட்டாலும் காசநோய் தொற்று ஏற்படும் சாத்தியம் அதிகம்.

*காசநோய்க்கு நாளொன்றுக்கான உணவு*

*சைவ போசனம்*

| உணவு | அளவு(கிராம்) |
|---|---|
| தானியம் | 200 |
| பருப்பு | 50 |
| கச்சான் | 50 |
| பால் | 1.5லீற்றர் |
| பச்சைஇலைகள் | 50 |
| காய்கறிகள் | 50 |
| கரட் | 50 |
| பழங்கள் | |
| வாழைப்பழம், மாம்பழம், | |
| பப்பாசிப்பழம் | 100 |
| தாவர எண்ணெய் | 40 |
| சீனி | 80 |

*அசைவபோசனம்*

| உணவு | அளவு(கிராம்) |
|---|---|
| தானியம் | 200 |
| பருப்பு | 30 |
| கச்சான் | 30 |
| பால் | 1 லீற்றர் |
| முட்டை | 1 |
| இறைச்சி/மீன் | 50 |
| இலைக்கறி | 50 |
| காய்கறி | 50 |
| கரட் | 100 |
| பழங்கள் | |
| வாழைப்பழம், மாம்பழம், | |
| பப்பாசிப்பழம் | 200 |
| எண்ணெய் | 30 |
| சீனி | 80 |

### காசநோயாளிகளிலே போசணைத் தேவை அதிகரிக்கக் காரணங்கள்

1.கிருமித்தொற்றலுக்கு எதிரான உடலின் செயற்பாடுகளினால் சக்தித் தேவை அதிகரித்தல்.

2.கிருமியின் தாக்கத்தினால் போசணைக் கூறுகள் அழிதல்.

3.கிருமித்தாக்கத்தினால் உடல் இழையங்கள் அழிக்கப்படல்.

4.காய்ச்சல் காரணமாக அதிசக்தி இழப்பு ஏற்படுதல்.

5.பசிக்குறைவு காரணமாக உள்ளெடுக்கும் உணவின் அளவு குறைவடைதல்.

6. நோய்க்கு பாவிக்கும் ஐசோ நியசிட் மருந்தினால் விற்றமின் Bகுறைதல்.

எமக்குக்கிடைக்கும் மலிவான போசணைப் பொருட்களாக அவரை, பருப்பு, உழுந்து, சோளம் என்பன சேர்ந்த மா வகைகளான ஜீவாகாரம், சமபோசா என்பவற்றினை உபயோகிக்கலாம். மேலும் காச நோயாளிகளிற் பசிக்குறைவு இருந்தால் தங்கள் உணவினை மூன்று வேளைகளிற்குப் பதிலாக சிறுசிறு பகுதிகளாக ஆறு வேளை உட்கொள்ளலாம்.

☛ மேலும் பசியைத் தூண்டக்கூடிய வகையில் மணம், சுவை உடையதாக உணவு தயாரிக்கலாம். உணவில் போதிய காபோவைதரேற்றும் புரதமும் அடங்கி இருத்தல் அவசியம்.

☛ ஒவ்வொரு நாளும் குறைந்தது நான்கு வேளை பாலினை உள்ளெடுப்பதன் மூலம் போதிய விற்றமின் D இனையும் கல்சியத்தினையும் பெற்றுக்கொள்ளலாம்.

☛ ஒவ்வொருநாளும் மூன்று வேளை பழரசம் அருந்தினால் நல்லது. பப்பாசி, வாழைப்பழம், மாதுளம்பழம் என்பனவற்றை உண்ணலாம். ஈரல், தானியங்கள் உணவில் அடங்க வேண்டும்.

☛ மீனெண்ணைக்குளிசை மூலம் விற்றமின் Aயினையும் D யினையும் பெறலாம். மது அருந்துவதைத் தவிர்த்தல் வேண்டும்.

☛ தகரத்தில் அடைக்கப்பட்ட மீன், மாசிக் கருவாடு உண்ணக் கூடாது. அவை ஒவ்வாத்தன்மையினை ஏற்படுத்தலாம்.

☛ கூடிய நீராகரம் அருந்த வேண்டும். ஒரு நாளைக்கு 5-6 வேளை நீர் அருந்துதல் வேண்டும்.

☛ பச்சைத் தேயிலைத் தேநீர் அருந்துவது காசநோயாளிகள் மருந்திற்கு குணமடைதலைக் துரிதப்படுத்துகின்றது.

போசாக்கின்மை 27 வீதம் காசநோய் ஏற்படுவதற்கு காரணமாக உள்ளது. காசநோயாளிகளிற்கு போசாக்கு மிகவும் இன்றியமையாதது. முதல் 2 மாதங்களில் 5 வீதம் நிறையதிகரிப்பு மீளவும் காசநோய் ஏற்படும் நிகழ்தகவைக் குறைக்கும்.

(தொடரும்)

# நாடு முழுவதிலுமுள்ள முக்கிய இடங்களில் பாதுகாப்பு கமராக்கள்

## பாதுகாப்பு அமைச்சு திட்டம்

நாடு முழுவதிலுமுள்ள முக்கிய இடங்களில் பாதுகாப்புக் கமராக்களைக் பொருத்துவதற்கான திட்மொன்றை பாதுகாப்பு அமைச்சு திட்டமிட்டு வருவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

தற்போது கொழும்பில் முக்கிய இடங்களில் பொருத்தப்பட்டுள்ள கண்காணிப்புக் கமராக்கள் மூலம் கொழும்பு பிரதேசத்தில் குற்றச்செயல்கள் பெருமளவில் குறைந்திருப்பதாக பாதுகாப்புத் தரப்பினர் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் கொழும்பு நகரில் சிறியசிறிய குற்றங்களில் ஈடுபடுவோர் மற்றும் போக்குவரத்துச் சட்டங்களை மீறுவோரையும் எளிதில் கண்காணித்துக் கைதுசெய்ய இலகுவாக இருப்பதாகவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரசாந்த ஜயகொடி தெரிவித்துள்ளார்.

அதன் காரணமாக நாட்டின் ஏனைய பகுதிகளிலும் அவ்வாறு குற்றச் செயல்களை மட்டுப்படுத்தும் நோக்கில் கண்காணிப்புக் கமராக்களைப் பொருத்துவது குறித்து தற்போது பாதுகாப்பு அமைச்சு ஆலோசித்து வருவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. (ஶ்ரீ-2)

# இலங்கையின் பொருளாதாரத்திற்கு பாரிய பாதிப்பு ஏற்படலாம்

## ரணில் தெரிவிப்பு

(கொழும்பு)

ஜப்பானிய சுனாமியினாலும் மத்திய கிழக்கில் நிலவும் அமைதியற்ற நிலைமையும் இலங்கையின் பொருளாதாரத்தில் பாரிய பாதிப்பை ஏற்படுத்தலாம் என எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க கூறியுள்ளார்.

மேற்குலகுடன் அரசாங்கம் முரண்பாட்டை கொண்டுள்ளமையே இதற்குக் காரணம் எனவும் அவர் கூறியுள்ளார்.

பெப்பிலியானவில் நேற்று முன்தினம் நடைபெற்ற பொதுக்கூட்டமொன்றில் உரையாற்றிய ரணில் விக்கிரமசிங்க, மத்திய கிழக்கில் நிலவும் அமைதியற்ற நிலை காரணமாக அந்நாடுகள் இலங்கைக்கு உதவ முடியாதிருக்கும். அதேவேளை ஜப்பானில் ஏற்பட்ட இயற்கை அனர்த்தம் காரணமாக ஜப்பானினாலும் இலங்கைக்கு உதவ முடியாதிருக்கும் என கூறினார். (ஶ்ரீ-2)







முழங்காவில் மகா வித்தியாலயத்தின் இல்லமெய்வல்லுநர் போட்டி அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் அதிபர் எஸ்.கணபதிப்பிள்ளை மற்றும் விருந்தினர்கள் அமர்ந்திருப் பதையும் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட கிளிநொச்சி வலயக்கல்விப்பணிப்பாளர் த.குருகுலராஜா உரையாற்றுவதனையும் மாணவர்களின் இசையும் அசைவும் நிகழ்வினையும் படங்களில் காணலாம்.

(படங்கள்:-பூநகரி செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இடம்பெயர் மக்கள் வாக்களிக்க சந்தர்ப்பம் வழங்கப்படவேண்டும்

## அமைச்சர் ஹக்கீம் தெரிவிப்பு



(கொழும்பு)

இடம்பெயர் மக்களுக்கு வாக்களிப்பதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டும் என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி யின் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

குறிப்பாக புத்தளம் மாவட்டத்தில் தங்கியிருக்கும் முஸ்லிம் இடம்பெயர் மக்கள் வாக்களிப்பதற்கு ஆவன செய்யப்பட வேண்டும் என ஹக்கீம் தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸாநாயக்கவிடம் கோரியுள்ளார்.

தேர்தல் ஆணையாளருக்கும் கட்சியின் தலைவருக் கும் இடையில் நடைபெற்ற சந்திப்பின் போது இந்த விடயம் வலியுறுத்தப் பட்டுள்ளது.

அரசியல் வாதிகளின் அழுத்தங்கள் இன்றி சுயாதீன மாக வாக்களிப்பதற்கு இந்த மக்களுக்கு சந்தர்ப்பம் வழங் கப்பட வேண் டும் என கோரிக்கை விடுத்துள்ளார். (ஸ்ரீ-2)

# களனிப் பிரதேச செயலர் உள்ளிட்ட அதிகாரிகளை வீட்டுச்சிறையில் அடைப்பேன்

## அமைச்சர் மேர்வின் எச்சரிக்கை



(கொழும்பு)

களனியின் பிரதேச செயலாளர் உள்ளிட்ட அனைத்து அரச அதிகாரிகளையும் வீட்டுச் சிறையில் அடைப்பேன் என்று அமைச்சர் மேர்வின் சில்வா பகிரங்கமாக எச்சரித் துள்ளார்.

எதிர்வரும் சிங்கள- தமிழ்ப்புத்தாண்டுக்கு முன்பதாக களனியின் அனைத்து வீடுகள்தோறும் வீட்டுத் தோட்டங் கள் உருவாக்கப்படவேண்டும். அரச அதிகாரிகள் அனை வரும் அந்த விடயத்தில் தீவிர கவனத்துடன் நடவடிக்கை களை மேற்கொள்ள வேண்டும்.

திவிநெகும (வாழ்க்கை மேம்படுத்தல்) நிகழ்ச்சித்திட்டத்தின் களனித் தொகுதிக்கான அங் குரார்ப்பண நிகழ்வு நேற்று முன்தினம் நடைபெற்ற போதே அதில் கலந்து கொண்ட அமைச் சர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவ்வாறு தவறும் பட்சத்தில் களனி பிரதேச செயலாளர், விவசாயத்திணைக்கள அதிகாரிகள் என அனைத்து அரச அதிகாரி களையும் வீட்டுச் சிறையில் அடைத்து விடு வேன். அவர்கள் அவ்வாறு வீட்டு சிறைக்குள் அடைப்பட்ட நிலையில் தான் புத்தாண்டைக் கொண்டாட நேரிடும்.

ஏற்கனவே டெங்கு ஒழிப்பு விடயத்தில் கடும் நடவடிக்கை எடுத்ததற்காக ஒரு மாதம் வரை என் அமைச்சுப் பதவி இடை நிறுத் தப்பட்டிருந்தது. இம்முறையும் அது போல நடந்தாலும் நான் அச்சப்படமாட்டேன்.

நான் யாருக்கும் எந்தக் கட்டத்திலும் பயந்தவன் அல்ல. எனக்கு சரி என்று பட் டதை மட்டுமே நான் செய்வேன். எதிர் காலத்தை உணரும் ஆற்றல் எனக்குண்டு. அதன்படியே நான் செயற்படுகின்றேன் என் றும் அமைச்சர் மேலும் குறிப்பிட்டார். (ஸ்ரீ-2)

# ஜப்பானுக்கு இலங்கை அரசு 11 கோடி ரூபா நன்கொடை

## மருத்துவக் குழுவையும் அனுப்ப தீர்மானம்

(கொழும்பு)

சுனாமியால் பாதிக்கப்பட்ட ஜப்பானுக்கு இலங்கை ஒரு மில்லியன் அமெரிக்க டொலரை நன்கொடையாக வழங்குகின் றது.

இவ்வாறு ஜப்பானிய மக்களின் நலனுக் காக பத்து இலட்சம் அமெரிக்க டொலரை (கிட்டத்தட்ட 11 கோடி ரூபா) நன்கொடையாக வழங்குவதற்கான தீர்மானித்தை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ எடுத்துள்ளார்.

இது குறித்து நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சின் செயலாளர் பி. பீ ஜயசுந்தரவு க்கு ஜனாதிபதி நேற்று முன்தினம் பணிப் புரை விடுத்துள்ளார்.

சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட் டுள்ள ஜப்பானிய மக்களின் வாழ்க்கை தர த்தை மீண்டும் கட்டியெழுப்புவதற்காக விசேட மருத்துவக் குழுவொன்றையும் விசேட பயிற்சி பெற்ற முப்படை அணியொன்றை யும் ஜப்பானுக்கு அனுப்பிவைக்கவும் தீர் மானித்துள்ளார். (ஸ்ரீ-2)

# ஆனையிறவில் உப்பு உற்பத்தி ஆரம்பம்

(கொழும்பு)

நீண்ட காலமாக செயலிழந்து இருந்த ஆனையிறவு உப்பளத்தின் உற்பத்திகளை ஆரம்பிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன.

இதற்கமைய முன்னர் ஆனையிறவு உப்பளத்தில் பணியாற்றிய ஊழியர்களின் விபரங்கள் தற்போது சேகரிக்கப்பட்டு வருகின்றன.

இந்த உப்பளம் இயங்கத் தொடங்கியதன் பின்னர் கணிசமான நுகர்வோரின் உப்புத் தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியும் என நம்பப்படுகின்றது. (ஸ்ரீ-2)

# விலங்கு விசர்நோய் தடுப்பு மருந்தேற்றல்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகரசபை எல்லைக்குட்பட்ட குருநகர் பொதுச் சுகாதார பிரிவு பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர் நோய் தடுப்பூசி ஏற்றப் படவுள்ளது.

இதற்கமைய நாளை புதன்கிழமை காலை 9மணி முதல் 12.30 மணிவரை சீநோர் கடற்றொழிற்சாலை முன்பாகவும் காலை 9 மணி முதல் 12 .30 மணிவரை கடற்கரை வீதி,தண்ணீர் தாங்கிச் சந்தியிலும் (செபஸ்ரியார் கோயில் முன்பாக) வைத்து வழங்கப்படவுள்ளது.

எனவே இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி தமது வளர்ப்பு நாய்களுக்கு மேற்குறித்த ஊசியினை ஏற்றிக்கொள்ளுமாறு யாழ். மாநகர சபை சுகாதார வைத்திய அதிகாரி பாக் டர் ம.மரியதாசன் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-9)

# இலங்கை புகலிடக்கோரிக்கையாளர்களுக்கு உதவுவது குறித்து அவுஸ்திரேலியா கவனம்

(கொழும்பு)

தாய்லாந்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இலங்கைப் புகலிடக் கோரிக்கையாளர்க ளுக்கு உதவுவது குறித்து அவுஸ்திரேலியா கவனம் செலுத்தி வருகின்றது.

தாய்லாந்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இலங்கையர்களை மீள தாய் நாட்டுக்கு அனுப்பி வைப்பதற்கு நிதி உதவிகளை வழங் குவது குறித்து அவுஸ்திரேலியா கவனம் செலுத்தி வருவதாகத் தெரிவிக்கப்படுகி றது.

190 இலங்கையர்கள் தாய்லாந்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப் படுகிறது.

தாய்லாந்து குடிவரவு- குடியகல்வுச் சட் டங்களை மீறிய குற்றச்சாட்டின் பேரில் குறித்த இலங்கையர்கள் கைது செய்யப்பட் டுள்ளனர்.

மூன்றாம் நாடுகளில் புகலிடம் பெற்றுக் கொள்ளும் நோக்கில் பலர் இவ்வாறு தாய் லாந்துக்கு சென்றுள்ளதாகத் தெரிவிக்கப் படுகிறது. (ஸ்ரீ-2)

# எரிபொருட்களின் விலை அதிகரிக்கப்படமாட்டாது

(கொழும்பு)

மத்திய கிழக்கில் ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடி நிலைமையினால் மசகு எண் ணெயின் விலையில் மாற்றங்கள் ஏற்படு கின்ற போதிலும் உள்நாட்டில் எரிபொருட் களின் விலை அதிகரிக்கப்படமாட்டாது என பெற்றோலியத்துறை அமைச்சு விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதா வது,

லிபியா உள்ளிட்ட மத்திய கிழக்கு நாடுக ளில் ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடியி னால் மசகு எண்ணெய் விலையும் நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே செல்கின்றது.

மசகு எண்ணெய் பரல் ஒன்று தற்போது 115 டொலருக்கு கொள்வனவு செய்யப்படு கின்றது.

மசகு எண்ணெய் அதிகரிக்கப்பட்டுள்ள போதிலும் ஜனாதிபதி தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங் கம் ஈரான் அரசாங்கத்துடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தின் பிரகாரம் பழைய விலையி லேயே எண்ணெயை இன்றும் கொள்வனவு செய்கின்றது.


தூரநோக்கில் சிந்தித்து செயற்பட்டமையி னால் எரிபொருட்களின் விலைகளை ஓரள வுக்குக் கட்டுப்படுத்த முடிந்துள்ளது என தெரி விக்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)





யாழ். கொற்றாவத்தை அ.மி.த.க.பாடசாலையின் வருடாந்த இல்லமெய்வல்லுநர் போட்டி அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட பாடசாலை முன்னாள் அதிபர் பா.வெற்றிவேல்,அதிபர் செல்வானந்தன் ஆகியோர் அழைத்துவரப்படுவதையும் மாணவிகளின் உடற்பயிற்சி நிகழ்வையும் வெற்றியீட்டிய மாணவிக்கு பிரதம விருந்தினரின் பாரியார் திருமதி ரதி வெற்றிவேல் பரிசில் வழங்குவதையும் படங்களில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கள்ளிக்காட்டு இதிகாசம்



64



கவிப்பேரரசு வைரமுத்து

வாரிக்குழி மாடுக ரெண்டும் ஓரக் கண்ல பீழை ஒழுக ஒண்ண ஒண்ணு பாத்து அழுகுதுக.

"நான் பெறந்த பூமி-வளந்த பூமி-ஆண்டு அனுபவிச்ச பூமி-ஆத்தாளப் பொதச்ச பூமி- தண்ணியில போகப் போகுதுன்னு பல்லுமொளைக்காத பக்கியெல்லாம் பேசுதே... நெசந்தானா யப்பே?"

"நெசந்தான் தாயி"

அவ 'ஓ'ன்னு அழுதா. ரெண்டு கையாலயும் மாருலயும் மூஞ்சியிலயும் மாத்திமாத்தி அடிச்சுக்கிட்டே அழுதா.

"ஏ இதென்னம்மா இது? சின்னக்கழுத மாதிரி அழுதுக்கிட்டு? நம்ம நெலமும் நம்ம வீடும் மட்டுமா தண்ணியில போகுது? ஊரே முங்குது; அதுல ஓரத்துல நம்ம நெலமும் முங்குது. ஊருக்கு மழை பேஞ்சா நம்மளுக்கும் நாலு கொடம் தண்ணி கெடைக்கும்; ஊரே தீப்புடிச்சா நம்ம வீடும் எரியத்தான் செய்யும்."

"யப்பே! வெட்டுக்கட்ட மேல வெட்டருவா பட்டுக்கிட்டேயிருக்கிற மாதிரி நீ பெறந்தன்னைக்கிருந்து ஒங்கெட்டநேரம் ஒங் கொமட்லேயே குத்திக்கிட்டிருக்கே... நீ ஏன் பெறந்த? ஏன் எங்களப் பெத்த?"

அவ மூஞ்சியத் தொடச்ச சேலையில் வேர்வை உப்பும், கண்ணீர் உப்பும் ஒண்ணாக் கலந்துச்சு.

"ஆத்தா செல்லத்தாயி! தோலாப் பெறந்திட்டு ஊசிக்குப் பயப்பட்டா எப்படி? நம்மள விடுதாயி. பசுக்காரன்பட்டி கருத்தராசு இருக்காரே அவருக்கு ஏகப்பட்ட பூமி. பறவை பறந்தாலும் கடக்க முடியாமப் பாதியிலேயே கால்கடுத்து ஒக்கார்ற பூமி. நம்ம சொக்கனூரு அழகுமாயி பூமி இருக்கே... வெதைச்சுவிட்டு வீட்டுக்கு வந்தா அடுத்தமாசம் வந்து அறுத்தக்கன்னு அதாக் கூப்பிடும்; அப்பிடி ஒரு பூமி; பவுன்வெளையிற பூமி. அவக நெலமே இல்லேன்னு போறப்ப பொட்டக்காட்ட வச்சுக்கிட்டு மொட்டக் கெணற வெட்டியிருக்கிற நம்ம பூமி போனா என்னம்மா பண்ணமுடியும்? ஊருக்கே உண்டானது நமக்கு"

முந்தானையில முடிஞ்சு கொண்டாந்திருந்த மொச்சப் பயற அவுத்து, அதை அப்பன் கையில கொட்டுனா செல்லத்தாயி. அதை ரெண்டுகையிலயும் வாங்கி வலதுகையி மொச்சப் பயற அவளுக்கும் கொஞ்சம் கொடுத்திட்டு, தானும் திங்க ஆரம்பிச்சாரு. இடதுகையி மொச்சப்பயற இறுக்கி மூடிக்கிட்டாரு. தண்ணி வெலக்கிக்கிட்டிருக்கிற மொக்கராசு தவிச்சுப்போயி வருவானில்ல. அவனுக்கும் ஒருவாய் குடுத்தாக் கடைவாயில் கொஞ்சம் எச்சி ஊறிக்கிருமில்ல.

"பொறந்த ஊரு இல்லேன்னு ஆகப்போகுது. பொட்டிசட்டியத் தூக்கிட்டு எந்த ஊருக்குப் போயிப் பொழைக்கிறது? பேசாம எங்ககூட வந்துட்டா நான் காலமெல்லாம் கஞ்சி ஊத்த மாட்டனா?"

மக சொன்னதக் கேட்டதும் மொச்சைப் பயற மென்னுக்கிட்டேயிருந்த வாய் நின்னுபோச்சு. கண்ணுல இருந்து நீர் கடகடன்னு கொட்ட ஆரம்பிச்சிருச்சு.

"ஆம்பளப் புள்ளயா பொம்பளப் புள்ளையான்னு பாத்தா-காலம் போன கடைசியில கைதாங்கிப் புடிக்கிறது பொம்பளப் புள்ள தானப்பா"

அரைச்ச மொச்சப் பயற வாயில வச்சுக்கிட்டே அவராப் பேசிக்கிட்டாரு.

"எங்க தாயி போயிப் பொழைக்கிறது? தண்ணியில்லாத காட்ல இருந்தோம்; தண்ணி வந்திருச்சு; இன்னொரு தண்ணியில்லாத காடு தேட எனக்கு நல்லாத்தெரியும். இருந்தா ஒனக்கு வச்சு மூடத்தெரியாது. எடுத்துக் குடுத்திருவே"

"நெசந்தான் மகளே! நெலம் மட்டும் தண்ணியிலபோகமா இருந்தா ஒங்கடன நான் அடுத்த வருஷமே தீத்திருப்பேன் தாயி"

"இந்த வருஷமும் ஒண்ணும் கெட்டுப்போகல"

அவசொன்ன சொல்லு, ஆகாயத்துல தூக்கியெறிஞ்சு மறுபடியும் பூமியில போட்டுட்டுப் போயிரிச்சு பேயத்தேவரை."யாத்தே! இவ எங்க கூடி எங்க வாரான்னு தெரியலயே? அஞ்சு சொட்டுக்கண்ணீரைச் சிந்திட்டு அரைக்காப்படி ரத்தம் கேக்கிறாளா? இல்லமொச்சப்பயறத் திங்கக் குடுத்திட்டு மூச்சப் புடிக்கிறாளா?"

"என்னம்மா சொல்ற?"- பதர்றாரு பேயத்தேவரு.

"இல்ல. வீடு காடெல்லாம் கூட்டிக்கழிச்சுப் பாத்தாலும் சர்க்காரு காசு பேயத்தேவர் கையில அஞ்சு ஆறு பெரிய ரூவா நிக்குமின்னு பட்டிதொட்டியெல்லாம் பேசிக்கிறாகளே..."

"ஆமா.. அதுக்கு என்ன இப்ப?"... நடுங்கி ஒடைஞ்சது பேயத்தேவர் குரல்.

"சர்க்காரு குடுக்கிற காசுல-எனக்குன்னு வேண்டியதுதான்"

"யப்பே! ஒன்ன நெனச்சா நிம்மதியில்லே. நீட்டிப்படுத்தா ஒறக்கம் வருதில்லை. மண்ணக் கிண்டிக்கிட்டே கெடந்து உழுகிறபோது கொழுவுல சாகுற புழுவு மாதிரி மண்ணோட மல்லுக்கட்டியே ஒம் பாதி உசுரு போச்சப்பே. இதுக்கு மேலயும் கல்லோட முட்டிமுட்டித்தான் கஞ்சி குடிப்பேன்ங்கிறியே"

"யம்மா செல்லத்தாயி... கஞ்சி குடிக்க மட்டுந்தானா மனுசன் செம்மம் எடுத்திருக்கான்? மனுசனாப் பொறந்தா நாலுபேருக்குக் கஞ்சி ஊத்த ணும்மா. நான் நாக்கு ருசிக்குக் கஞ்சிகுடிச்சு நாளாச்சு தாயி. உசுரு ஒட்டியிருக்கணும் ஒடம்போட; அதுக்குத்தான் கஞ்சி குடிக்கிறேன்.கடங்காரனாயிருக்கேன்; கடனக் கட்டணுமா இல்லையா? ஒனக்கு-ஒந்தங்கச்சி மின்னலுக்கு-அந்த எச்சிக்கலநாயி ஒங்க அண்ணனுக்கு -நீ பெத்துப் போட்டுட்டுப் போயிட்டியே அந்தக் கருவாப்பய மொக்கராசுக்கு-நம்மள அண்டிப் பொழைக்கவந்த அப்பாவிச் சிறுக்கி முருகாயிக்குக் கடன்பட்ருக்கன்ல... கடன்கழிஞ்சாக் கண்ணமூடிடுவேன்"

தணிஞ்ச குரல்ல அப்பன் அடிமனசிலயிருந்து சொல்லவும் முந்தானைச் சீலய மூஞ்சியில வச்சு சர்ருசர்ருன்ன மூக்கச் சிந்திக்கிட்டு அவளாக் கொஞ்சநேரம் அழுது முடிச்சு எச்சிய ஒரு முழுங்கு முழுங்கிட்டு, தொண்டையையும் செருமிக்கிட்டு, "மக்கமார் மேல பாசம் உள்ள தகப்பன் ஒன்னப் போல ஊர்ல உண்டுமா... அதுலயும் இந்தச் செத்த நாயி செல்லத்தாய எப்பவும் மறக்கமாட்டேன்னு உண்டான எம்பங்குல- அந்த மிச்ச சொச்ச நகையச் செஞ்சு போட்டீன்னா எம் புருசங்கிட்ட நாயே பேயேன்னு பேச்சு வாங்காம நல்ல பொழப்புப் பொழச்சிக்கிருவேன்."

வெட்டருவா எடுத்து வெலாவில வெட்டியிருந்தாக்கூட இந்த வலி வலிச்சிருக்காது பேயத்தேவருக்கு. காலம் போன கடைசியில கைதாங்கிப் புடிக்கிறது பொம்பளப் புள்ள தான்னு இப்பத்தான நெனச்சேன்? நெனச்ச நெனப்பு நெஞ்சுக்குழியை விட்டு அழியுறதுக்குள்ள சங்கக் கடிச்சு ரத்தம் குடிக்கிறாளே மகளா வந்து வாச்சவ! இந்த ஊர விட்டு எங்க போயிப் பொழைக்கிறதுன்னு நானே புத்திமாறிப் பொலம்பிக்கிட்டிருக்கேன். தண்ணியில இருக்கிற மீனு தரைக்கு வாரதுக்குள்ளேயே தலைப்பக்கம் எனக்கு- வால்பக்கம் ஒனக்கு -நடுத்துண்டம் நமக்குன்னு ஆளாளுக்கு பங்கு போட்டா இன்னொரு குளத்துக்கு இந்த மீனு எங்கபோயிச்சேர? மனிசனாப்பொறந்தாக் காசு வேணுமப்பா! பொணத்துக்குக் கூட நெத்திக்காசு வைக்கலேன்னா சுத்திநிக்குற கூட்டம் சுடுகாடு வரைக்கும் வராதப்பா.


ஒரு பதிலும் சொல்லாம, உள்ளங்கையில மண்ண அள்ளி அள்ளி அதை ஒழுக விட்டுக்கிட்டே கைசெய்யுற வேல மூளைய எட்டாம, வெறிச்ச பார்வ வெறிச்ச மேனிக்கு ஓணான் ஒண்ணு அவர் வேட்டியில தவ்வி வெளியேர்ற வரைக்கும் அப்படியே ஒக்காந்திருந்தாரு பேயத்தேவர்.

(வளரும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காங்கிரஸ் பொதுச் செயலர் ராகுல்காந்திக்கு தமிழருவி மணியன் எழுதும் கடிதம்



அகில இந்திய காங்கிரஸ் பொதுச் செயலாளர் ராகுல் காந்தி அவர்களுக்கு... வணக்கம். வளர்க நலம்! மூத்து முதிர்ந்து தளர்ந்த நிலையில் தள்ளாடும் காங்கிரஸுக்கு இளைய இரத்தம் பாய்ச்சத் துடிக்கும் உங்களுக்கு, நான் கடிதம் வரைவதற்கு ஒரு காரணம் உண்டு!

ஏனெனில், உள்ளாட்சித் தேர்தலில் ஓர் உறுப்பினரைக் கூடச் சுயமாகத் தேர்வு செய்து அறிவிக்க முடியாத உள்ளூர் காங்கிரஸ் தலைவர்களுக்கு எழுதுவதால் எந்தப் பயனும் நேராது.

'2016இல் தமிழ்நாட்டை காங்கிரஸ் ஆள வேண்டும் என்பதுதான் என் கனவு' என்ற ஆர்வத்தின் உந்துதலில் அறிவித்தவர் நீங்கள். ஒரு வித்தியாசமான அரசியல் தலைவராகத் தன்னை வடிவமைத்துக் கொள்ள விரும்பும் உங்கள் மீது இளைஞர்களுக்குக் கொஞ்சம் நம்பிக்கை கனிந்திருப்பதும் உண்மை!

உங்கள் அரசியல் பிரவேசம் 2004இல் நிகழ்ந்தது. உங்கள் தந்தையின் அமேதி தொகுதியில் நின்று ஒரு இலட்சம் வாக்குகள் வித்தியாசத்தில் வென்று நாடாளுமன்றத்துக்குள் நுழைந்தீர்கள்.

2007 செப்டம்பரில் அகில இந்திய காங்கிரஸ் பொதுச் செயலாளராகப் பொறுப்பேற்றீர்கள். 2009இல் நடந்த நாடாளுமன்றத் தேர்தலில் 3 இலட்சம் வாக்கு வித்தியாசத்தில் வெற்றியைத் தழுவியதில் உங்களது வளர்ச்சி வெளிப்பட்டது.

'நான் பிரதமராவதைவிட, ஏழைகளுக்கும் பணக்காரர்களுக்கும் இடையில் உள்ள இடைவெளியைக் குறைப்பதையே முதன்மைப் பணியாகக் கருதுகிறேன்' என்று நீங்கள் அறிவித்தபோது, பலருடைய விழிகள் வியப்பால் விரிந்தன. 'ஏழையின் குடிசைக்குள் நுழையும்போதும் செருப்பைக் கழற்றிவைத்துச் செல்லும் ஒரே அரசியல்வாதி' என்று உங்களுக்குப் பத்திரிகைகள் புகழாரம் சூட்டுகின்றன. அரியானாவில் உள்ள மிர்ச்பூர் கிராமத்தில் தலித்கள் உயிரோடு எரிக்கப்பட்டபோது, எந்தவித ஆர்ப்பாட்டமும் இல்லாமல், நேரில் சென்று நீங்கள் ஆறுதல் வழங்கியதும், உறவினர்களின் கண்ணீரில் கரைந்து போனதும் என்னை நெகிழச்செய்தது!

'வேற்று மாநிலத்தவர் மும்பையில் இருந்து வெளியேற வேண்டும்' என்று சிவசேனாவின் பால்தாக்கரே சீறியபோது, 'இந்தியாவில் உள்ள யாரும் எங்கு வேண்டுமானாலும் சென்று உழைத்துப் பிழைக்கலாம். அதற்கு யார் தடை விதித்தாலும், நான் பார்வையாளனாகப் பார்த்துக்கொண்டு இருக்கமாட்டேன்!' என்று நீங்கள் மும்பைக்கு நேரில் சென்று முழங்கியதை யாரும் மறக்க முடியாது.

## நீங்கள் செய்கிற தீர்ப்பின்படியே நீங்களும் தீர்ப்புப் பெறுவீர்கள்!

'டான்' பத்திரிகை 2009ஆம் ஆண்டுக்கான 'இந்தியாவின் சிறந்த மனிதர்' என்று உங்களைத் தேர்ந்தெடுத்து மகிழ்ந்தது. சச்சின் பைலட், தீபேந்தர் சிங், கனிஷ்கா சிங், அசோக் தன்வர் போன்ற இளைஞர்களின் கூட்டுறவில் காங்கிரஸுக்கு நீங்கள் புதிய வண்ணம் தீட்டப் புறப்பட்டு இருப்பது புரிகிறது. ஆனால் உங்கள் முயற்சி விழலுக்கு இறைத்த நீராகப் போவது நிச்சயம்!


டில்லியில் நடந்து முடிந்த காங்கிரஸ் மாநாட்டில் ஊழலுக்கு எதிராக நீங்களும் உங்கள் அன்னையும் போர்ப் பிரகடனம் செய்ததைப் படித்தபோது, கலைஞரின் ஏமாற்று அரசியல் பாதையில் இருவரும் இணைந்து நடப்பதைப் புரிந்துகொள்ள முடிந்தது.

'சாதாரண மக்களின் வளர்ச்சிக்கான வாய்ப்புகளை ஊழல் தட்டிப் பறித்துவிடுவதால், ஊழல்வாதிகளுக்கு மிகக் கடுமையாகத் தண்டனை தரவேண்டும்' என்று நீங்கள் உணர்ச்சிமயமாக உரை நிகழ்த்தினீர்கள். உங்கள் அன்னையோ ஊழல் ஒழிப்புக்கு 5 அம்சங்களைப் பின்பற்ற வேண்டுமென்ற பாடம் போதித்தார். சாத்தான் வேதம் ஓதினால், யார்தான் செவி கொடுத்துக் கேட்க முடியும்?

இந்திராகாந்தியின் நகர்வாலா ஊழல், ராஜீவின் ஃபோபர்ஸ் ஊழல், நரசிம்மராவின் ஹர்ஷத் மேத்தா-பங்குப் பத்திர ஊழல், மன்மோகன் சிங் ஆட்சியின் ஸ்பெக்ட்ரம், கொமன் வெல்த், ஆதர்ஷ் ஊழல்கள் எதுவும் உங்கள் அன்னைக்கும், உங்களுக்கும் நினைவில் நிழலாடவில்லையா?

மராட்டிய மாநில முதல்வராக இருந்தபோது, ஒரு கந்துவட்டிக்காரருக்காக அதிகார அத்துமீறல் நடத்திய விலாஸ்ராவ் தேஷ்முக் மீது உச்ச நீதிமன்றம் கண்டனம் தெரிவித்த பின்னும், அவர் மத்திய அமைச்சராக நீடிப்பது தார்மீக நியாயமா? ஊழல் வழக்கில் இமாச்சலப் பிரதேச நீதிமன்றம் குற்றப்பட்டியல் வாசித்த பின்பும் வீர்பத்திரசிங் மத்திய அமைச்சரவையில் தொடர்வது எந்த வகையில் ஏற்புடையது? 2 ஜி அலைக்கற்றை முறைகேடுகள் உச்ச நீதிமன்றத்தின் பார்வைக்கு வராமல் பதுங்கியிருந்தால் 'கூட்டணி தர்மம்' ஆ. ராசாவைத் திகார் சிறைக்கு அனுப்பியிருக்குமா?

ஆ. ராசாவின் முறையற்ற செயல்களால் நாட்டுக்கு 1.76 இலட்சம் கோடி நட்டம் ஏற்பட்டுவிட்டதாக மத்திய கணக்குத் தணிக்கை அதிகாரி அறிக்கை தந்த பின்பும், 'இந்த நாட்டில் என்ன தான் நடக்கிறது?' என்று உரத்த குரலில் உச்ச நீதிமன்றம் தன் வேதனையை வெளிப்படுத்திய பின்னரும், உங்கள் மத்திய அமைச்சர் கபில் சிபல் 'ஒரு பைசாகூட இழப்பு இல்லை' என்ற அரிச்சந்திரன் வாரிசாய் சத்தியம் செய்தபோதும்... நீங்கள் என்ன செய்து கொண்டு இருந்தீர்கள்?



ஸ்பெக்ட்ரம் ஊழல் குறித்து இன்று வரை உதடு திறந்து ஒரு வார்த்தை நீங்கள் உரைத்தது உண்டா ராகுல்? உங்கள் அன்னை சோனியாவிடம் இருந்து ஒரு சொல் வந்ததுண்டா? காங்கிரஸ் கைகளில் படிந்து இருக்கும் ஊழல் கறைகளை, உலகின் எந்தப் புண்ணிய நதியில் கழுவிக் கரைப்பீர்கள்?

ஆ. ராசாவின் ஊழல் நடவடிக்கைகளால் 50ஆயிரம் கோடி நாட்டுக்கு நட்டம் என்று சி.பி.ஐ. நாடாளுமன்றப் பொதுக் கணக்குக் குழுவிடம் வாக்குமூலம் வழங்கியது. மத்திய அமுலாக்கப் பிரிவும் புலனாய்வுத் துறையும், ஆ.ராசா 3000கோடி இலஞ்சம் பெற்றிருப்பதாகக் கண்டுபிடித்தன. தேசம் முழுவதும் ஸ்பெக்டரம் ஊழலின் ஆழம் கண்டு அதிர்ந்து போனது.

ஆனால் மத்திய நிதியமைச்சர் பிரணாப் முகர்ஜி, மதுரையில் நடந்த மு.க.அழகிரியின் மகன் மணவிழாவில் பங்கேற்றுப் பேசியபோது, 'இந்தியாவின் மூத்த அரசியல்வாதியாக தி.மு.க. தலைவர் கருணாநிதி திகழ்கிறார்.

நாட்டின் அரசியல் மற்றும் சமூக மாற்றங்களில் அவருடைய பங்களிப்பு பாராட்டத்தக்கது. எங்கள் அனைவரையும் வழிநடத்திச் செல்லும் கருணாநிதியை நான் மிகவும் மதிக்கிறேன். அவருக்கு என் பாராட்டுகளைத் தெரிவிக்கிறேன்' என்று புகழ் பூத்த மொழியில் பூ மாரிப் பொழிந்தது உங்களுக்கு உடன்பாடானதா?

இன்று உச்ச நீதிமன்றத்தில் நீதியரசர்கள் கங்குலியும் சிங்வியும் நீதியின் மாண்பை உயர்த்திப் பிடித்திருப்பதுபோல், 1975இல் இந்திரா காந்தி தேர்தல் வழக்கில் நீதி தேவதையின் பெருமையைக் காத்தவர் அலகாபாத் உயர் நீதிமன்ற நீதியரசர் ஜக்மோகன்லால் சின்ஹா.

தேர்தல் முறைகேடுகளில் ஈடுபட்டதற்காக இந்திராவின் வெற்றி செல்லாது என்று அறிவித்ததுடன், 6ஆண்டுகள் அவர் தேர்தலில் நிற்கத் தடைவிதித்தார் ஜக்மோகன். தன்னுடைய சொந்த நலன் பாதிக்கப்பட்டதும், நாட்டு நலன் பாதிக்கப்பட்டதாகப் பொய்யுரைத்து தன்னால் நியமிக்கப்பட்ட குடியரசுத் தலைவர் பக்ருதீன் அலி அகமதுவின் கையொப்பத்துடன் நெருக்கடி நிலையைப் பிரகடனம் செய்தார் நேருவின் மகள். அப்போது ஜனநாயகம் எப்படி புதைக்கப்பட்டது என்று கலைஞரிடம் கேளுங்கள்... கண்ணீர்க் கதைகள் கரை புரண்டு ஓடிவரும்! நெருக்கடி நிலைக் கொடுமைகள் 19 மாதங்கள் நீடித்தன.

(வளரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





பகவான் ஸ்ரீராம கிருஷ்ணரின் 176ஆவது ஜென்மதினம் பருத்தித்துறை ஸ்ரீராம கிருஷ்ண சாரதா சேவாச்சிரமத்தில் அண்மையில் அனுஷ்டிக்கப்பட்டது. இந்நிகழ்வில் கிளிநொச்சி புனித திரேசா பெண்கள் கல்லூரிக்கு சேவாச்சிரமம் சார்பில் மக்கள் வங்கி முகாமையாளர் மு.சிவனேசன் நீர் இறைக்கும் இயந்திரம் ஒன்றை அதிபர் திருமதி ஜெயந்தி தனபாலசிங்கத்திடம் கையளிப்பதையும் கலந்துகொண்ட மாணவிகளையும் படங்களில் காணலாம்.

## லண்டனிலிருந்து வந்தவரிடம் 14 இலட்சம் ரூபாய் பணமோசடி

லண்டனில் இருந்து இலங்கை வந்த ஒருவரிடம் 14 இலட்சம் ரூபாய் பணம் மோசடி செய்த நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இது குறித்து தெரிய வருவதாவது, லண்டனில் இருந்து ஒருவர் புதிய கார் ஒன்றினை இலங்கைக்குள் கொண்டு வந்துள்ளார். அந்தக் காருக்குச் சுங்கக் கட்டணம் செலுத்தத் தேவையில்லை என சந்தேக நபர் தெரிவித்துள்ளார்.

சந்தேக நபர் லண்டனில் இருந்து வந்தவரிடம் காரிற்கு சுங்கவரி செலுத்தத் தேவையில்லை. அதற்கான ஏற்பாடுகளை தான் செய்து வருவதாகக் கூறியுள்ளார்.

தான் ஜனாதிபதி செயலகத்தில் பணி புரிவதாகவும் ஜனாதிபதியைத் தனக்குத் தெரியுமெனவும் சுங்கக் கட்டணமின்றி வாகனத்தைப் பெற்றுக் கொள்ளலாம் எனக் கூறி அவரிடமிருந்து 14 இலட்சம் ரூபாவை ஏமாற்றிப் பெற்றுள்ளார்.

லண்டனில் இருந்து வந்தவருக்குக் குறித்த நபர் மீது சந்தேகம் ஏற்பட பாதுகாப்பு அமைச்சிடம் முறையிட்டுள்ளார். இதனையடுத்து குற்றத்தடுப்பு பொலிஸார் சந்தேக நபரைக் கைது செய்துள்ளனர். (ஸ்ரீ-2)

## இடம்பெயர்ந்தவர்கள் வாக்களிப்பதற்கு வசதியாக விசேட போக்குவரத்துச்சேவை

நடைபெறவுள்ள உள்ளூராட்சி சபைத் தேர்தலில் இடம்பெயர்ந்தவர்கள் வாக்களிப்பதற்கு வசதியாக போக்குவரத்து சேவையை வழங்க இலங்கை போக்குவரத்து சபை ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளது.

தேர்தல் ஆணையாளரால் மேற்கொள்ளப்பட்ட அறிவுறுத்தலுக்கு அமையவே பேருந்துகளை சேவையில் ஈடுபடுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக சபையின் தலைவர் எம்.டி.பந்துசேன தெரிவித்துள்ளார்.

இதனடிப்படையில் இடம்பெயர்ந்தவர்கள் தங்கியுள்ள இடங்களில் இருந்து தேர்தல் வாக்களிப்பு நிலையங்களுக்கு மக்கள் மயப்படுத்தப்பட்ட பேருந்துகள் சேவையில் ஈடுபடுத்தப்படவுள்ளன. வவுனியா மற்றும் புத்தளம் மாவட்டங்களில் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் வாக்களிப்பதற்கு 7 ஆயிரம் பேர் தகுதி பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)

## வளிமண்டலவியல் திணைக்களத்தை நவீன மயப்படுத்த தீர்மானம்

உலகநாடுகளில் இயற்கை அனர்த்தங்கள் ஏற்படும் போது உடனடியாகத் தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்கு ஏதுவாக வளிமண்டலவியல் திணைக்களத்தினை நவீனமயப்படுத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய திணைக்களத்திற்குப் புதிய தொழில்நுட்ப வசதிகளைப் பெற்றுக்கொடுக்க அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்துள்ளதாக இடர் முகாமைத்துவ அமைச்சர் மஹிந்த அமரவீர கூறியுள்ளார்.

இதற்கான நிதியைப் பெற்றுக் கொள்வது தொடர்பில் வெளிநாட்டு வளங்கள் அமைச்சுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். (ஸ்ரீ-9)

## தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் இடம்பெற்ற கல்வீச்சு சம்பவத்தில் இருவர் படுகாயம்

மட்டக்களப்பு மாவட்டத்தின் காத்தான்குடி நகரசபைத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களை ஆதரித்து இடம்பெற்ற இரு தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் ஏற்பட்ட குழப்பத்தையடுத்து மேற்கொள்ளப்பட்ட கல் வீச்சு சம்பவத்தில் இருவர் படுகாயமடைந்துள்ளனர்.

கடந்த 12ஆம் திகதி பிற்பகல் காத்தான்குடி நகரசபைத் தேர்தலில் போட்டியிடும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி மற்றும் தொப்பி சின்னத்தில் சுயேட்சைக் குழுவாகப் போட்டியிடும் நல்லாட்சிக்கான மக்கள் இயக்கம் ஆகியவற்றின் ஊர்வலம் இடம்பெற்றுக்கொண்டிருந்தது.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி பிரசார ஊர்வலத்தில் பிரதியமைச்சர் எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாவும் கலந்துகொண்டிருந்த வேளையிலேயே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

மட்டக்களப்பு கல்முனை பிரதான வீதியால் ஊர்வலம் மீரா பாளிகா மகா வித்தியாலயத்தின் முன்பாகச் சென்ற போது அங்கு இரு தரப்பு ஊர்வலங்களும் சந்தித்தபோதே இந்தக் கல்வீச்சு சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதில் நல்லாட்சிக்கான மக்கள் இயக்கத்தின் ஆதரவாளர் ஒருவரும் வேறொருவரும் படுகாயமடைந்த நிலையில் காத்தான்குடி ஆதார வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

காத்தான்குடி பொலிஸார் சம்பவ இடத்திற்கு விரைந்து நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளதுடன் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஸ்ரீ-2)

## 2011.03 15 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

☆ கிமு44 -ரோமன் குடியரசின் மன்னன் யூலியஸ் சீசர் மார்க்கஸ் புரூட்டாஸ் மற்றும் பல ரோமன் செனட்டர்களால் குத்திக் கொல்லப்பட்டான்.

☆ 933 - பத்தாண்டுகள் அமைதிக்குப் பின்னர் ஜேர்மனிய மன்னன் முதலாம் ஹென்றி ஹங்கேரிய இராணுவத்தை ரியாட் என்ற இடத்தில் இடம்பெற்ற போரில் தோற்கடித்தான்.

☆ 1493 - கொலம்பஸ் அமெரிக்காவுக்கான தனது முதலாவது பயணத்தை முடித்துக் கொண்டு ஸ்பெயின் திரும்பினார்.

☆ 1776 - தெற்கு கரோலினா பிரித்தானியாவிடம் இருந்து விடுதலையை அறிவித்தது. பிரித்தானியாவிடம் இருந்து விடுதலை பெற்ற முதலாவது அமெரிக்கக் குடியேற்ற நாடு இதுவாகும்.

☆ 1802 - இலங்கையின் முதலாவது அரசு வர்த்தமானி வெளியிடப்பட்டது.

☆ 1815 - நேப்பில்ஸ் மன்னன் ஜோக்கிம் முராட் ஆஸ்திரியா மீது போர் தொடுத்தான்.

☆ 1848 - ஹங்கேரியில் புரட்சி வெடித்தது. ஹாப்ஸ்பேர்க் ஆட்சியாளர்கள் சீர்திருத்தக் கட்சியின் முக்கிய நிபந்தனைகளை ஏற்றுக்கொள்ள வேண்டியதாயிற்று.

☆ 1877 - முதலாவது தேர்வுத் துடுப்பாட்டம் இங்கிலாந்துக்கும் அவுஸ்திரேலியாவுக்கும் இடையில் மெல்பேர்னில் ஆரம்பமானது.

☆ 1917 - ரஷ்யாவின் இரண்டாம் நிக்கலாஸ் த்சார் மன்னன் முடி துறந்தான்.

☆ 1922 - எகிப்து ஐக்கிய இராச்சியத்திடம் இருந்து முறையாக விடுதலை அடைந்த பின்னர் முதலாம் ஃபுவாட் எகிப்தின் மன்னனானான்.

☆ 1943 - இரண்டாம் உலகப் போர் : நாசி ஜேர்மனியப் படைகள் உக்ரேனின் ஹார்க்கொவ் நகரை சோவியத் இராணுவத்திடம் இருந்து கைப்பற்றினர்.

☆ 1961 - தென்னாபிரிக்கா பொதுநலவாய நாடுகளில் இருந்து வெளியேறியது.

☆ 1970 - எக்ஸ்போ - 70 உலகக் கண்காட்சி ஜப்பானின் ஒசாக்கா நகரில் ஆரம்ப மானது.

☆ 1985 - முதலாவது இணைய டொமைன் பெயர் (symbolics.com) பதியப்பட்டது.

☆ 1988 - ஈராக்கியப் படைகள் குருதிய நகரான ஹலப்ஜா மீது இரசாயன நச்சுக் குண்டுகளை வீச ஆரம்பித்தது. 5 ஆயிரம் பேர் கொல்லப்பட்டனர்.

☆ 1990 - பிரித்தானிய ஊடகவியலாளர் பர்சாட் பாசொஃப்ட் ஈராக்கில் தூக்கிலிடப்பட்டார்.

☆ 1990 - மிக்கைல் கொர்பச்சோவ் சோவியத் ஒன்றியத்தின் முதலாவது நிறைவேற்று ஜனாதிபதியாகத் தெரிவானார்.

☆ 1991 - இரண்டாம் உலகப் போரின் பின்னர் ஜேர்மனியின் ஆதிக்க நாடுகளான ஐக்கிய இராச்சியம், பிரான்ஸ், ஐக்கிய அமெரிக்கா, சோவியத் ஒன்றியம் ஆகியவற்றிடம் இருந்து ஜேர்மனி முழுமையான விடுதலையைப் பெற்றது.

☆ 2007 - இந்தியாவின் சட்டீஸ்கர் மாநிலத்தில் தண்டவத்தா பகுதி காவல் நிலையம் மீது தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில் 55 காவல்துறையினர் கொல்லப்பட்டனர்.

### பிறப்புகள்

☆ 1767 - ஆன்ட்ரூ ஜாக்சன், ஐக்கிய அமெரிக்காவின் 7வது குடியரசுத் தலைவர் (இ. 1845)

☆ 1830 - பவுல் ஹெயிஸ், நோபல் பரிசு பெற்ற ஜேர்மனிய எழுத்தாளர் (இ. 1914)

☆ 1854 - எமில் பேஹரிங்க், நோபல் பரிசு பெற்ற ஜெர்மனியர் (இ. 1917)

☆ 1915 - அழகு சுப்பிரமணியம் ஆங்கில இலக்கியத்துறையில் புகழ் பெற்ற இலங்கையர் (இ. 1973)

☆ 1920 - டொன்னல் தோமஸ், நோபல் பரிசு பெற்ற அமெரிக்கர்

☆ 1930 - அல்ஃவியோரவ், நோபல் பரிசு பெற்ற ரஷ்ய இயற்பியலாளர்


### இறப்புகள்

★ கிமு44 -யூலியஸ் சீசர், ரோமன் குடியரசின் மன்னன் (பி. கிமு 100)

☆ 1897 - ஜேம்ஸ் சில்வெஸ்டர், கணிதவியலாளர் (பி. 1814)

☆ 1962 - ஆர்தர் கொம்ப்டன், நோபல் பரிசு பெற்ற அமெரிக்கர் (பி. 1892)

☆ 2004 - ஜோன் போப்பில், நோபல் பரிசு பெற்ற ஆங்கிலேயர் (பி. 1925)



**2004 - சூரியக் குடும்பத்தில் அதி வேகமான பொருள் 90377 செட்னா கண்டுபிடிக்கப்பட்டது.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனவை நனவாக்குங்கள்!

இளமையாக இருந்தபோது, பின்னாளில் எப்படி இருக்க வேண்டும் என்று உங்களுக்கு நிறையக் கனவுகள் இருந்தன. உங்கள் வாழ்க்கையை எப்படி அமைத்துக்கொள்ள வேண்டும் என்று லட்சியங்கள் இருந்தன. பதினெட்டு இருபது வயதில் கண்ட கனவுகள் எல்லாம் பிரமாண்டமாக இருந்தன. இருபத்தைந்து வயதில் வாழ்க்கைக்கைக்கு அவசியமானவை பற்றி மட்டும் கனவுகள் தொடர்ந்தன. முப்பது வயதில் கனவுகள் எல்லாம் வரண்டு போய், 'பெரிதாக எதையும் சாதிக்க வேண்டியதில்லை. இருப்பதைப் பிடுங்கிக்கொள்ளாமல் விட்டால் சரி!' என்று சமாதானம் செய்து கொள்ளத் தயாராகிவிட்டீர்கள்.

கேட்டால், வயது ஏற ஏற நடைமுறை வாழ்க்கையைப் புரிந்து கொண்டுவிட்டதாகச் சொல்வீர்கள். இல்லை, உண்மையில் கனவு காண்பதற்குக்கூட நெஞ்சில் ஒரு துணிச்சல் வேண்டும். அதை இழந்து விட்டீர்கள். அப்படியே கனவு கண்டாலும் அதைக் கையகப்படுத்தும் தைரியமின்றி, கோளை களாகி விட்டீர்கள். எந்தக் கனவுமே, அது நிறைவேறுமா, நிறைவேறாதா என்ற சந்தேகத்துடன் தான் உங்களால்ள கவனிக்கப்படுகிறது. அதனால் உங்கள் முயற்சிகள் முழுமையாக இருப்பதில்லை. சீனாவில் ஒரு ஜென் குரு இருந்தார். அவர் தன் சீடனை அழைத்தார்.

"நான் குளிப்பதற்குத் தொட்டியில் தண்ணீர் நிரப்பு" என்றார். கிணற்றிலிருந்து தண்ணீரை இறைத்த சீடன், மர வாளிகளில் நிரப்பி தோள்களில் சுமந்துபோய் குளிக்கும் தொட்டியில் கொட்டினான். வாளியின் அடியில் மிச்சமிருந்த சிறிது நீரை கீழே விசிறிவிட்டு அடுத்த தடவை நீரைக் கொண்டுவர கிணற்றடிக்குப் போனான்.

குரு ஒரு பிரம்பை எடுத்தார். சீடனைப் 'பொளேர்' என்று அடித் தார். "எதற்காகத்தண்ணீரை வீணடித்தாய்? அதைச் செடிக்காவது ஊற்றியிருக்கலாமே?" சீடன் வலியும் கண்ணீருமாக வார்த்தைகளில் கோபத்துடன் நிமிர்ந்தான்? "கீழே கொட்டியது ஒரு டம்ளர் தண்ணீர்கூட இருக்காது. அதை ஊற்றுவதால் செடி வானம் வரை வளர்ந்து விடப்போகிறதா?" என்றான்.

"முட்டாள்! நான் செடியின் வளர்ச்சிக்காகவா சொன்னேன்? அரைத்துளியானாலும் அதைக் கேவலமாக நினைக்காமல், அதற்கும் மதிப்புக் கொடுத்து வீணடிக்காமல் இருந்தால் தான், நீ வளர முடியும்! ஜென்குரு சொன்னது தன் சீடனுக்கு மட்டுமல்ல... உங்களுக்கும் சேர்த்துத்தான். உங்கள் கனவு நனவாக வேண்டுமானால் மிகச் சிறிய சந்தர்ப்பத்தைக்கூட அலட்சியம் செய்யாமல் பயன்படுத் திக்கொள்ள தயாராக இருக்க வேண்டும். கனவுக்கு உரம்போட்டு வளர்த்து சாதனையாக்கிக் கொள்ள தெரிந்தவர்கள் தான் வாழ்கிறார்கள். மற்றவர்கள் இந்த உலகில் சும்மா வசிக்கிறார்கள்.


ஒரு தலை முறையே கனவு காண்பதை நிறுத்தி விட்டால் சமூகத்தில் என்ன அற்புதங்கள் நடத்தப்பட்டாலும் அவை எல்லாம் வீண்தான். வாழ்க்கையை ரசித்து அனுபவிக்கத் தெரியாமல் வறண்டுவிட்டவர்களுக்கு எதைக்கொண்டு போய்க் கொடுத்தாலும் அர்த்தமில்லை.

சுதந்திரத்துக்கு முன் நம் தேசத்தில் எல்லோரிடமும் கனவு இருந்தது. அதை நனவாக்கிப்பார்க்க தங்கள் வாழ்கையையே விருப்பத்தோடு பணயம் வைக்கத் தயாராக இருந்தார்கள். அவ்வளவு தீவிரத்துடன் இருந்ததால்தான் சுதந்திரக்கனவு நனவானது. இப்போது தீவிரமாக, வளர்ச்சிக்கான கனவுகள்காண ஆட்கள் இல்லையென்பதுதான் வேதனை. உங்கள் பிச்சைப்பாத்திரத்தில் இன்று என்ன விழுமோ என்று மற்றவர்களை அண்ணாந்து பார்த்துக்கொண்டு ஏன் உட்கார நினைக்கிறீர்கள்? உங்கள் கனவை நனவாக்கிக் கொள்ள முழுமையான அர்ப்பணிப்புடன் செயல்படுங்கள். ஆச்சரியமான உயரங்களை உங்களால் தொடமுடியும்!

ரஷ்யாவில் பலே நடனம் பிரபலம். லின்கின்ஸ்கீ என்ற கலைஞர், பலே நடனத்துக்காக தன்னையே அர்ப்பணித்திருந்தவர். அவர் பங்குபெறும் நடன நிகழ்ச்சிகளில் சுழன்று ஆடித் துள்ளிக்குதிப்பார். புவியீர்ப்பு விசை எல்லோர்க்கும் பொதுவானதுதான் ஆனால், லின்கின்ஸ்கீ துள்ளிக்குதிக்கும்போது, விஞ்ஞானத்தின் விதிகளை மீறி அசாதாரண உயரங்களுக்குப் போய் வருவதை பலர் பார்த்து வியந்திருக்கிறார்கள். அவரிடம் இது பற்றிக் கேட்டபோது, அவர் சொன்னார்: 'என்னால் முடியுமா என்று நான் யோசிக் ாத தருணங்களில் என்னை யும் றிய ஒரு சக்தியோடு செயல்படு வதை உணர்கிறேன்.'

லின்கின்ஸ்கீ சொல்வது உண்மை தான் நூறு சதவிகித ஈடுபாட்டுடன் முயற்சி செய்யும்போது, உங்களையும் மீறியதொரு சக்தி பிறக்கும்! முழுமையான ஆற்றல் வெளிப்படும்.எதுவும் சாத்தியமாகும்! உங்கள் கனவை நிஜமாக்க என்ன செய்ய வேண்டும்? முதலில்அடுத்த ஐந்து வருடங்களில் நீங்கள் என்ன சாதிக்க நிகைக்கிறீர்கள் என்று தீர்மானியுங்கள். அதைநோக்கி திட்டமிட்டு அடியெடுத்து வையுங்கள் ஒவ்வொரு ஐந்து வருடங்களிலும் உங்கள்கனவு விரிவடைந்து கொண்டே போகட்டும்

உச்சியை அடைய நினைத்தால், ஏறித்தான் ஆகவேண்டும். கால்கள் வலிக்கும். களைப்பாகும். 'இதெல்லாம் உங்களுக்குச் சாத்தியமில்லை!' என்று மனம் அச்சுறுத்திப்பார்க்கும். 'ஓய்வெடுத்துக்கொள்' என்று சபலம் காட்டும். தளராதீர்கள். செய்வதை முழுமையான விருப்பத்துடன் செய்தால், எந்த வலியும் வேதனைதராது. உச்சியை அடைந்ததும். அத்தனை களைப்பும் சுகமாகும்!



ஆன்மீகம் 45

சத்குரு ஜக்கி வாசுதேவ்

# தமிழ் நாவல்கள் சில நோக்கங்கள்

10



துப்பறியும் நாவல்களிலும் மொழி பெயர்ப்பு நாவல்களிலும் தழுவல் நாவல்களிலும் தம்மை ஈடுபடுத்தி வந்த வாசகர்களை இந்த மண்ணின் மணத்தை நுகரவைக்கும் முயற்சியில் கொழுகொம்பு பிறந்துள்ளது.

"கொழும்பில் நடைபெற்ற சர்வ தேச தமிழ் எழுத்தாளர் மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுக்கட்டுரை"

1956-களில் ஈழத்தில் வெளிவந்த இன்னொரு நவீன நாவல் தேவன்-யாழ்ப்பாணம் எழுதிய 'கேட்டதும் நடந்ததும்' ஆகும். மற்றது 'வாடா மலர்' அமரர் தேவன் யாழ்ப்பாணம் சிறுகதை ஆசிரியர், நாவலாசிரியர். நாடக ஆசிரியர். மொழி பெயர்ப்பாளர். பேச்சாளர். 'தென்னவன் பிரமராஜன்' அவருடைய நூலுருப் பெற்ற நாடகம். அவருடைய சிறுகதைகள் 'தேவன் யாழ்ப்பாணம் சிறுகதைகள்' என்ற தொகுப்பாக வெளிவந்துள்ளது. 1954-1955களில் ஈழகேசரியில் தொடர்கதையாக 'கேட்டதும் நடந்ததும்' வெளிவந்த போது பலராலும் விதந்து பேசப்பட்டது.

கேட்டதும் நடந்ததும் என்ற இந் நாவல் இரண்டு பக்கங்களைக் கொண்டது. முதற்பாகம் காது என்றும் இரண்டாம் பாகம் கண் என்றும் வகுக்கப் பட்டன. நாவலின் தலைப்பிற்கு ஏற்ப காது, கண் என பாகங்களாகப் பிரிக்கப் பட்டன. இந்த நாவலுக்கு முன்னுரை எழுதிய ஆனந்த விகடன் ஆதவன் இப்பாகப் பிரிவுகளை வியந்திருப்பதுடன் இப்படியான ஒரு நாவலைத் தான் எழுதத் திட்டமிட்டிருந்ததாகவும் தெரிவித்துள்ளார். 'காது' என்ற முதல் பாகத்தில் பதினைந்து அத்தியாயங்கள் இருக்கின்றன. 'கண்' என்ற இரண்டாம் பாகத்தில் பதினாறு அத்தியாயங்கள் உள்ளன. 1951ஆம் ஆண்டு மத்தியில் இந்த நாவலைத்தான் எழுத ஆரம்பித்ததாக தேவன் குறிப்பிடுகின்றார். தன் வாழ்க்கையோடு இணைந்த மூவரை இந்த நாவலில் பாத்திரங்களாக்கியுள்ளார்.

ஈழத்து நாவல் வரலாற்றில் 1950-1960 ஆகிய பத்தாண்டுகளில் வெளிவந்த 47நாவல்களில் இளங்கீரனின் தென்றலும் புயலும், சொர்க்கம் எங்கே?, புயல் அடங்குமா, மனிதர்கள், நீதியே நீ கேள்?, மண்ணில் விளைந்தவர்கள் ஆகிய ஆறுநாவல்களைப் படைத்தளித்துள்ளார் அவரின் இந்த நாவல்களும் சிற்பியின் 'உனக்காக, கண்ணே!' என்ற நாவலும் இவ்விடத்தில் நயத்தலுக்குரிய நாவல்களாக உள்ளன.

ஈழத்து நாவல் இலக்கியத்துறையில் இளங்கீரனின் இடத்தினைக் குறைத்து மதிப்பிடுவதற்கில்லை. நாவலிலக்கியத்தினை மதிப்பிடுகின்றவர்களும் இளங்கீரனின் நாவல் பங்களிப்புக் குறித்து குறைத்து மதிப்பிடுவதில்லை. பேராசிரியர் கைலாசபதி தொட்டு பேராசிரியர் சுப்பிரமணியம் வரை நாவலிலக்கியத்தில் அவருக்கான இடத்தினை ஒதுக்கித் தந்துள்ளனர். 'ஐம்பதுகளில் ஈழத்துத் தமிழ் நாவலுக்குப் புதிய பரிமாணத்தைக் கொடுத்தவர் என்ற வகையில் இளங்கீரன் வரலாற்று முக்கியத்துவ முடயவராகிறார்' என்பது சுப்பிரமணியத்தின் கருத்து. இளங்கீரன் பதினாறு நாவல்களை எழுதியுள்ளார். அவற்றைவிடக் காதல் உலகிலே கலாராணி,நீதிபதி, ஆணும் பெண்ணும், பாரதிகண்ட சமுதாயம் முதலான பல்சுவை நூல்களையும் ஆரம்பகாலத்தில் எழுதியுள்ளார்.

ஈழத்துத் தமிழ்நாவல் இலக்கியத்தினைச் சரியான தடத்தில் திருப்பிவிட்ட பெருமை இளங்கீரனையே சாரும்.. ஈழத்தின் ஆரம்கால நாவல்களில் பெரும்பாலானவை கற்பனாவாதத்தின் உச்சங்களைத் தொடுவனவாகவும் ஆங்கில நாவல்களையோ தமிழக ஆரம்ப நாவல்களையோ படித்ததன் அருட்டுணர்வில் எழுதப்பட்டவையாகவும் அமைந்தன. 1950 களில் நாவல் துறைக்கு இளங்கீரன் பிரவேசித்ததும் நாவல் பயிருக்குப் புதுநீர் பாய்ச்சப் பட்டது. அவரை ஆரம்பத்தில் திராவிடமுன்னேற்றக்கழகப் பெரியாரின் பகுத்தறிவுக் கொள்கைகள் வசீகரித்திருந்தன. பின்னர் மார்க்சிய இலக்கியக் கொள்கைளின் வசப்பட்டார். பேராசிரியர் கைலாசபதி, கணேஸ், அ.ந.கந்தசாமி போன்றோரின் தொடர்புகள் அவரது இலக்கியச் செல்நெறியை நிர்ணயித்தன.


'சமூகப் பிரச்சினைகளுக்கான அடிப்படைகளை அணுகித் தீர்வு கூற விழைந்த முதல் நாவலாசிரியர் என்ற வகையிலும் ஈழத்துத் தமிழ் நாவலுக்குத் தேசியச்சாயல் தர முயன்ற முதல்வர் என்ற வகையிலும் இவருக்கு சிறப்பானதோர் இடமுண்டு' என நா. சுப்பிரமணியன் குறிப்பிட்டுள்ளார். அவர்கூற்றில் ஒரு திருத்தம் செய்யலாம். தமிழ் நாவ லுக்குத் தேசியச்சாயல் தர முயன்ற வரல்லர். தந்தவர் எனலாம். இளங் கீரனின் நாவல்களில் சாதியம், வர்க் கம் ஆகிய இரண்டும்இயல்பாக சித்தரிக்கப்பட்டுள்ளன. தென்றலும் புயலும், நீதியேநீகேள் ஆகிய இரண்டு நாவல்களும் இவற்றிற்குத் தக்க உதாரணங்களாக விளங்குகின்றன. தென்றலும் புயலும் நாவலில் யாழ்ப்பாணச் சாதிய வேறுபாடுகளை சுட்டிக் காட்டுவதோடு இறுதியில் திருமண உறவின் மூலம் தீர்வு வைக்கிறார். (தொடரும்)

கலாநிதி செங்கைஆழியான்
க.குணராசா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீரிழிவுநோய் வந்தபின் கட்டுப்படுத்த ③

கடந்த அத்தியாயத்தில் நீரிழிவு நோய் வராமல் இருப்பவர்களுக்கான ஆலோசனைகளைக் கூறினீர்கள். அதனால் எங்க




ளுக்கு எந்தப் பயனும் இல்லை. காரணம் ஏற்கனவே எங்களுக்கு நீரிழிவு நோய் வந்துவிட்டது. அதை எப்படிக்கட்டுப் படுத்துவது என்பது பற்றி கூறுங்கள் என கேட்கிறீர்களா?

மிகவும் எளிய 5 வழிமுறைகள் உள்ளன.

உடற்பயிற்சி,உணவு முறை,எடை குறைத்தல்,சுயமாக உங்களை நீங்களே கவனித்துக்கொள்ளுதல் மற்றும் மருந்து மாத்திரைகளை தவறாமல் எடுத்துக்கொள்ளுதல்.

நீரிழிவு வியாதியால் அதிக சிக்கல்கள் வரக்கூடாது என்று விரும்புபவர்கள் இரத்த சீனியின் அளவு எப்போதும் சரியான கட்டுப்பாட்டுக்குள் இருக்குமாறு பார்த்துக் கொள்ள வேண்டும்.

நீரிழிவுநோய்தானே.... பார்த்துக் கொள்ளலாம் என இருந்தால் பிரச்சினைகள் ஏவுகணை வேகத்தில் வந்து விடும்.

இதனால் குறிப்பிட்ட காலத்திற்கு முன்பே இறந்து விடுதல்,உடல் உறுப்புக்கள் செயற்படாமல் முடங்கி விடுதல், கண்கள் ,சிறுநீரகம், இதயம் போன்ற உள் உறுப்புக்கள் பாதிக்கப்படுதல்,பக்கவாதம் மற்றும் நரம் புத்தளர்ச்சி போன்ற நோய்களால் பல்வேறு இன்னல்களை அனுபவிக்க வேண்டியிருக்கும்.

பிறவியில் இருந்தே நீரிழிவு நோய் இருந்தால் மருந்து மாத்திரைகள் தான் கதி. இடையில் வந்திருந்தால் உடற்பயிற்சி மற்றும் உணவு முறையின் மூலமே கட்டுப்படுத்தலாம்.

இடையில் நோய் ஏற்பட்டு மருந்து மாத்திரைகளைச் சாப்பிட்டால் கணையம் இன்சுலினை உற்பத்தி செய்யும். ஆனால் சீனியின் அளவு அதிகமாக இருந்தால் மருந்து மாத்திரைகள் எதிர்பார்த்த பலனைத் தராது. அத்தகைய சூழலில் இன்சுலின் மருந்தை மட்டுமே நம்பியிருக்க வேண்டியிருக்கும். நீங்கள் நோய்யைக் கட்டுப்படுத்தி விட்டால் வாய்வழி மருந்தை எடுத்துக்கொள்ளலாம்.

நீரிழிவு நோய் கட்டுப்படாமல் தொடர்ந்து கொண்டிருந்தால் காலமெல்லாம் அதற்கான சிகிச்சையை பெற வேண்டியிருக்கும்.

## ஒரு முற்றுப்புள்ளி

ஒரு கட்டத்தில் சலித்துப்போய் சிகிச்சை முறைகளை நீங்களே கைவிட்டுவிடுவீர்கள்.

விளம்பரங்களில் வரும் பொருட்களில் மயங்கி இவை நீரிழிவு நோயைக் கட்டுப்படுத்தும் என நம்பி விலை கொடுத்து வாங்கிப் பயன்படுத்தி ஏமாறும் நிலைகள் ஏற்படும்.

நீரிழிவு நோயை காலமெல்லாம் கட்டுப்பாட்டில் வைத்துக்கொள்வதற்கு அறிவு பூர்வமாக சிந்தித்துச் செயற்பட வேண்டும். அதற்கான மிக முக்கிய வழிகள்.

**இரத்த சீனியின் கட்டுப்பாடு**

விரதம் அல்லது பட்டினியாக இருக்கும் போது இரத்த சீனியின் அளவு 90-130 மில்லிகிராம் இருக்க வேண்டும். சாப்பிட்ட இரண்டு மணி நேரத்திற்குப் பின்னர் 180 மில்லி கிராமிற்குள் இருத்தல் வேண்டும்.



**கிளைகோசிலேட்ட் ஈமோகுளோபின்** (எச்பிஏ1 சி) 7 சதவீதத்திற்கும் குறைவாக இருத்தல் வேண்டும்.

**இரத்த அழுத்தம்**

இரத்த அழுத்தம் 130 /80க்கும் குறைவாக இருக்குமாறு பார்த்துக்கொள்ள வேண்டும்.

**எடை குறைத்தல்**

இடுப்பின் சுற்றளவு 32 சென்ரி மீற்றருக்கும் குறைவாக இருக்குமாறு குறைத்துக் கொள்ளல் வேண்டும்.

**கொழுப்பு அளவைக் குறைத்தல்**

எல்டிஎல் கொழுப்பு 100 மில்லி கிராமிற்கும் குறைவாக

பேராசிரியர்
டாக்டர் டி.காமராஜ்,
M.D.,P.G.D.C.G.,D.M.R.,
சென்னை.

டிகிளிசரைட் 150 மில்லி கிராமிற்குக் குறைவாக

எச்டிஎல் கொழுப்பு 40 மில்லி கிராமிற்கு அதிகமாக இருக்குமாறு பார்த்துக் கொள்ள வேண்டும்.

இவற்றையெல்லாம் மருத்துவரின் நேரடி மேற்பார்வையில் செய்து வந்தால் நீரிழிவு நோயை முழுமையான கட்டுப்பாட்டிற்குள் வைத்துக்கொள்ளலாம். (தொடரும்)




# கண்களைக் காப்போம் ①

கண்களில் தோன்றும் குறைபாடுகளை இரண்டு வகையாகப் பிரிக்கலாம். பிறவி கண் குறைபாடு. மற்றையது பின் நாட்களில் வரும் குறைபாடு. பிறவிக்கண் குறைபாட்டில் பிறக்கும் போதே பார்வையின்றி இருப்பது பிறவியில் வரும் கண்புரை , பிறவியில் வரும் கண் அழுத்தம் போன்றவை அடங்கும். இவையன்றி மற்றக் கண் குறைபாடு அனைத்தும் இடையில் தோன்றும் கண் குறைபாடுகள் ஆகும்.

**கண்ணில் தோன்றும் குறைபாடுகள்**

- மாறுகண் (ஸ்குயின்ட்)
- கண்புரை (கற்றாக்ட்)
- கண் அழுத்த நோய் (கிளாக்கோமா)
- விழித்திரைநீரிழிவு நோய் (ரெடினோபதி
- மெட்ராஸ் ஐ
- விபத்தினால் ஏற்படும் கண்பாதிப்புக்கள்
- குறும்பார்வை,நீள்பார்வை குறைபாடுகள்
- மைனஸ் 20 இற்கு அதிகமாக பார்வைக் குறைபாடு

மேலே காணப்பட்ட குறைபாடுகள் தான் மிக மிக முக்கியமான கண் குறைபாடுகள் ஆகும். இந்தக் கண்கோளாறுகள் அனைத்தையும் இன்றைய நாட்களில் மிகமிக துல்லியமாக விஞ்ஞான முறையில் நோயிலிருந்து குணப்படுத்தலாம் என்பது தான் மகிழ்ச்சிக்குரிய செய்தியாகும்.

**கண்புரை(கற்றாக்ட்)**

நம் கண்களில் உள்ள லென்ஸ் கமராவில் உள்ள லென்ஸ் போன்று நிறமில்லாத ஒளி ஊடுருவும் தன்மை கொண்டது. இதன் வழியாக விம்பங்களிலிருந்து வரும் ஒளியானது ஊடுருவி ஒளித்திரையை அடைந்து பின்னர் நரம்பு மூலம் மூளைக்குச்சென்று இயற்கையாகப் பார்க்கும் தன்மையை உண்டாக்கிறது.

கண்ணில் உள்ள விழி லென்சின் புரதத் தன்மையையும் மாற்றம் ஏற்பட்டு ஒளிபுகாத நிலையை அடையும். இதனைத்தான் கண்புரை (கற்றாக்ட்) என்று அழைக்கிறோம்.

***கண்புரையின் அறிகுறிகள்***


பார்வை மங்களாகிவிடும்


பிரகாசமான வெளிச்சத்தைப் பார்த்தால் கண்கூசும்.

தூரத்திலுள்ள பொருட்கள் இரண்டு அல்லது மூன்றாகத் தெரியும். இந்தப் பார்வைக் குறைபாடு உள்ளவர்கள் அடிக்கடி மூக்குக் கண்ணாடியை மாற்ற வேண்டியிருக்கும்.

***கண்புரை வரக் காரணங்கள்***

கண்புரை என்பது வயது முதிர்ச்சியினால்





வரும் குறைபாடாகும். வயதாவதால் சருமத்தின் சுருக்கம்,முடி நரைப்பது போன்று கண்புரையும் முதுமையில் ஏற்படும். இந்தக் கண்புரையை கண் சொட்டு மருந்தினால் குணப்படுத்த முடியாது. கண்புரையை நீக்க அறுவைச் சிகிச்சைதான் நிரந்தரமான தீர்வாகும்.


இந்தக் கண் பாதிப்பு 50 அல்லது 60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு ஏற்படும். இந்தக் கண்பாதிப்பு வயது முதிர்ச்சியினால் வரும் என்றாலும் நீரிழிவு நோய் உள்ள நபர்களுக்கு வெகு சீக்கிரத்தில் வந்து விடும் வாய்ப்பு உண்டு. இன்னும் சிலருக்கு கண்ணில் விபத்து ஏற்படுவதன் காரணமாகவும் கண்புரை ஏற்படலாம்.

கி.மு. 5 ஆம் நூற்றாண்டில் இந்திய மருத்துவ மேதை சுஸ்ருதா கண்புரை நீக்க அறுவைச் சிகிச்சையை ஆரம்பித்தார். அப்பெருமைக்கேற்ப இன்னும் பெருமளவில் கண்புரை நீக்க அறுவைச் சிகிச்சை இந்தி யாவில் தான் அதிகம் செய்யப்படுகின்றது. பெருமளவில் லென்ஸ் உற்பத்தி செய்யப்படுவதும் இந்தியாவில் தான் அதிகம். முன்பு கண்ணில் 12 முதல் 14 மில்லி மீற்றர் கீறல் வரை அறுவைச் சிகிச்சை செய்து கண்புரை நீக்கப்பட்டது.

இவ்வாறு அறுவைச் சிகிச்சையை செய்து கொண்டவர்கள் தங்கள் கண்ணில் புண் ஆறுவதற்கு இரண்டு மாதம் வரை காத்திருக்க வேண்டியிருந்தது. சிகிச்சைக்குப் பின்னரும் சரியான அளவு பார்வை கிடைக்காததால் சிகிச்சை செய்து கொண்டவர்கள் தடிப்பான மூக்குக் கண்ணாடி அணிவது அவசியமாக இருந்தது. ஆனால் தற்போது நவீன முறையில் பேக்கோ எமல்சிபிக்கேஸன் முறையில் கண்புரை நீக்கம் செய்யப்பட்டு செயற்கை 'விழிலென்ஸ்' பொருத்தப்படுவது நடைமுறையாகி விட்டது.

***நவீன கண்புரை அறுவை சிகிச்சை***

கண்ணில் கண்புரைக்கான அறிகுறிகள் தெரிந்தால் கண்மருத்துவரிடம் சென்று புரையின் அளவு அதிகரிக்கும் முன்பே சிகிச்சை பெறுவது அவசியம். கண்புரையை நீக்கும் பேக்கோ எமல் சிபிகேஸன் முறையில் சிறிய துவாரம் வழியாக கண்புரையை சிதைத்து திரவமாக உறிஞ்சி எடுக்கப்படும். பின்னர் விழிலென்ஸ் பொருத்தப்படும். இந்த லென்ஸிக்கு இன்ராகுலர் லென்ஸ் என்று பெயர். இதில் இரண்டுவகை லென்சுகள் உள்ளன.



ஒன்று மடிக்க முடியாதலெனஸ்- இதனைப் பொருத்த துளையிடும் அளவு சற்றுக் கூடுதலாக இருக்கும். மற்றையது மடிக்கக் கூடிய லென்ஸ்- கண்புரை நீக்கப்பட்டு லென்ஸ் பொருத்திய நபர் வழக்கமான பார்வையை உடன் பெறலாம்.

கண்ணில் போடப்பட்ட துவாரத்தினால் ஏற்பட்ட புண்ணாற அதிகபட்சமாக இரண்டு நாட்கள் தான் தேவைப்படும். இதில் மற்றொரு வகையான Sovereign White Star என்கிற அதி நவீன கருவி மூலம் கண்புரை அகற்றினால் புண்ணாற 6 மணி நேரம் தான் ஆகும். சிகிச்சை முடிந்ததும் நோயாளியே வாகனத்தை ஓட்டிச் செல்லும் அளவிற்கு துரித கதியில் பார்வையில் முன்னேற்றம் ஏற்படும். கண்புரை நீக்க அறுவைச் சிகிச்சையின் போது முன்பு போல் இப்போது ஊசிபோடப்படுவதில்லை. சொட்டு மருந்து மூலம் கண்ணை மரக்கடித்து பேக்கோ எமல்சிபிக்கேஸன் கருவி மூலம் அல்ரா சவுண்ட் சக்தியைப் பயன்படுத்தி ஒரு விநாடிக்கு 45 ஆயிரம் அதிர்வுகளில் பழுதுபட்ட லென்சை திரவப் பொருளாக மாற்றி உறிஞ்சி வெளியே எடுக்கப்பட்டு உடனடியாக செயற்கை லென்ஸ் பொருத்தப்படும்.

இவை எல்லாமே மூன்று நிமிடங்களில் செய்து முடிக்கப்பட்டு விடும். இந்த முறையில் மயக்க மருந்து, ஊசி, தையல், கட்டு

கண் சிகிச்சை நிபுணர்
டாக்டர் என் அருள்மொழிவர்மன்,MS.,DO.,
சென்னை-6

எதுவும் தேவையில்லை. நோயாளி இரண்டு தினங்களில் வழக்கம் போல் செயற்படலாம். இந்த முறையில் 2.5 மில்லி மீற்றர் கீறல் செய்து கண்புரை நீக்கப்பட்டு செயற்கை விழிலென்ஸ் பொருத்தப்படுகின்றது. (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழினத்தின் ஈழக்கனவை சிதைத்ததினூடாக பெரும் வரலாற்றுத்தவறை இந்தியா செய்துவிட்டது

## சண்டே இந்தியனுக்கு சீமான் செவ்வி

கை சின்னத்தை எதிர்த்து இரட்டை இலையும் சுயேட்சையும் நின்றார்கள் என்றால், சுயேட்சைக்கு ஓட்டுப் போடுங்கள் என்று சொல்லமுடியாது. சுயேட்சைக்குச் சொல்வதற்குப் பதிலாக நானே ஒரு வேட்பாளரை நிற்க வைத்துவிடலாம். அது எதிரியின் வாக்குகளைப் பிரிக்குமே தவிர, அந்த எதிரியின் தோல்வியை உறுதிப்படுத்த முடியாது. இரட்டை இலைக்குப் போட்டால் தான் கை சின்னம் தோற்கும் பம்பரத்திற்கு, கதிர் அரிவாள் சுத்தியலுக்குப் போட்டால் தான் கை சின்னம் தோற்கும்.

இவ்வாறு நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளரும் இயக்குநருமான சீமான் அவர்கள் சண்டே இந்தியன் இதழுக்கு அளித்த பேட்டியில் தெரிவித்துள்ளார்.

சீமான் அவர்களின் செவ்வியின் முக்கிய பகுதிகளை இங்கே தருகிறோம்.

ஈழத்தமிழர் பிரச்சனைதான் எனக்கென்று ஓர் அரசியல் இல்லை என்பதை வலுவாக உணர்த்தியது. தமிழர் தேசிய இன விடுதலையை விட, அந்த இனத்திற்கு ஒரு அரசியல் இருக்கமுடியாது. அந்த அரசியலைச் செய்ய இங்கே யாரும் இல்லை. கண் முன்னே என் இனம் மரணிக்கும் போது, என்னால் ஒன்றும் செய்ய முடியவில்லையே என்று நினைக்கும்போது என்னிடம் வலிமையில்லை. அந்த வலிமை எங்கே இருக்கிறது? அரசியல் அதிகாரத்தில் இருக்கிறது. அந்த அரசியல் அதிகாரத்தைப் பெற்றவர்களிடம் இனவுணர்வு இல்லை. இனவுணர்வு இருக்கிறவனிடம் அரசியல் அதிகாரம் இல்லை. எனக்கான அரசியல் வலிமையை உருவாக்குவதுதான் இதற்கான சரியான வழி.

நாம் தமிழர் கட்சியின் கொள்கை நிலைப்பாட்டை ஒற்றை வரியில் சொன்னால், இனத்தின் நலன், இனத்தின் நலன் என்று எடுத்துக்கொண்டால், இதில்தான் சாதி ஒழிப்பு இருக்கிறது; பெண்ணிய விடுதலை இருக்கிறது; சமூக நீதி இருக்கிறது; முல்லைப் பெரியாறு பிரச்சனை இருக்கிறது; பாலாற்றுக்கு இடையிலான அணையைத் தடுக்கும் உரிமை இருக்கிறது; என் மீனவனுக்காக வாழ்வுரிமையைப் பெற்றுத்தருவது இருக்கிறது; அனைவருக்குமான கல்வி, மருத்துவம் இதில்தான் இருக்கிறது. இவையெல்லாமே இனத்தின் நலன் என்பதில் அடங்கிவிடுகிறது.

அதைத்தவிர எனக்கு வேறு நோக்கம் இல்லை. ஏழைக்கு ஒரு கல்வி, பணக்காரனுக்கு ஒரு கல்வி இருக்கக் கூடாது என்று நினைக்கிறேன். ஏழைக்கு ஓர் உயிர், பணக்காரனுக்கு ஓர் உயிர் இல்லை. ஆனால் பணம் அதிகமாகச் செலுத்துகிறவனுக்கு ஒரு மருத்துவம் கிடைக்கிறது. பணம் குறைவாகச் செலுத்துகிறவனுக்கு வேறு மருத்துவம் என்றால், இந்த நாடு சரியான ஜனநாயக நாடாக இருக்கமுடியாது.

சட்டத்தின் முன் அனைவரும் சமம். எல்லோருக்கும் எல்லாம் உண்டு. எல்லோரும் இந்நாட்டு மன்னர்களே என்ற முழக்கங்கள் எல்லாம் ஏமாற்று வார்த்தைகள். உண்மையல்ல. எல்லோரும் இந்நாட்டு மன்னர் என்று சொல்லிவிட்டு ஒருவரே ஆறுமுறை அரசாளத் துடிப்பது அயோக்கியத்தனம்.


தமிழ்த் தேசியம் என்பது திராவிடக் கட்சிகளைச் சார்ந்து இருக்கமுடியாது. எங்களுக்கு அரசியல் வலிமை இல்லாததால், நாதியற்று நிற்கிறோம். என்னை வைத்துக்கொண்டு என் நிலைப்பாட்டிலேயே பார்ப்போமே. நான் ஒரு நாதியற்றவன். நான் ஓர் அநாதை. நான் ஓர் ஆதரவற்ற பிள்ளை. எந்த இடத்திலும் போய் நிற்கமுடியவில்லை. எனக்கென்று உதவ உலகில் யாரும் இல்லை. உலகம் தழுவி நேசித்தேன். எல்லோரும் என் உறவுகள் என்று நினைத்தேன். சர்வதேசியம் பேசினேன். இந்திய தேசியம் பேசினேன். திராவிடம் பேசித் திரிந்தேன். கடைசியாக சாகும்போது எனக்கென்று யாரும் வரவில்லை என்கிற போது நான் தனித்துவிடப்பட்டேன். நான் தமிழன் என்று விட்டுவிட்டார்கள். ஆமாம், நான் தமிழன் என்பதை உணர்ந்து கொண்டேன். கருணாநிதிக்கு மாற்றாக ஜெயலலிதா இல்லை. ஜெயலலிதாவுக்கு மாற்று கருணாநிதியும் இல்லை.

இந்தச் சூழலில், என் இனம் மொத்தத்தையும் காங்கிரஸ் அழித்துவிட்டது. பாகிஸ்தானையும் சீனாவையும் பக்கத்தில் பகையாக வைத்திருக்கிறோம் காலடியில் இருக்கிற இலங்கையையும் பகையாக மாற்றவேண்டுமா என்று அது நினைக்கிறது. அது நியாயமாக செய்திருக்க வேண்டியது, தமிழீழக் குடியரசை தனியாக பிரித்துவிடுதலே. அப்படிச் செய்திருந்தால், எப்போதுமே அது இந்தியாவை தந்தையர் நாடாகக் கருதி, நட்பு நாடாக பாதுகாப்பு அரணாக இருந்திருக்கும். அதைச் செய்யாத பெரும் வரலாற்றுப் பிழையை இந்தியா செய்துவிட்டது.

இச்சூழலில் எங்கள் வலிமையை உணர்த்துவதற்கு இந்தத் தேர்தல் களத்தைப் பயன்படுத்துகிறோம். எங்கள் கட்சியின் கொள்கை முடிவு... ஒற்றைக் கட்சி ஆட்சிமுறை இந்த தேசம் முழுமைக்கும் இருக்கக்கூடாது ஒரே கட்சி நாட்டை ஆளக்கூடாது. எந்த மொழி வழி தேசிய இனத்துக்கும் தேசிய கட்சியின் தலையீடு இருக்கக் கூடாது என்று நினைக்கிறோம். காங்கிரஸோ பா.ஜ.க.வோ எனக்கு வேண்டாம்.

ஈழப்பிரச்சனையில் காங்கிரஸ் மட்டுமல்ல தி.மு.க.வும்தான் குற்றவாளி. ஆனால் இறுதிக்கட்டப் போரின்போது சர்வதேச நாடுகள் நெருக்கிய நிலையில், இந்தியாவைக் கேட்டுக்கொண்டுதான் முடிவெடுக்கமுடியும் என்று இலங்கை அரசு அறிவித்தது. போரை நடத்தியதே இந்தியா தானே. காங்கிரஸ் தலைமையில் ஆளுகிற அரசுதானே. பதவி ஆசைக்காக கூடவே துணையிருந்து தி.மு.க. செய்தது துரோகம். மத்தியில் ஆட்சிக்கு ஆதரவளித்த அனைத்துக் கட்சிகளுமே குற்றவாளிகள்தான் நாங்கள் காங்கிரஸ் நிற்கும் தொகுதிகளில் தி.மு.க.வை எதிர்த்து உறுதியாகப் பேசுவோம்.

அ.தி.மு.க.வை ஆதரிப்பது என்றால் அக்கட்சி நிற்கும் எல்லாத் தொகுதிகளிலும் போய் பிரசாரம் செய்ய வேண்டும். அப்படி செய்யவில்லை. காங்கிரஸ் நிற்கும் தொகுதிகளில் மட்டுமே பிரசாரம் செய்யப்போகிறோம். அது அ.தி.மு.க. ஆதரவு என்பதாகாது காங்கிரஸை எதிர்க்கும் ஒரு வலுவான கட்சிக்கு வாக்கு கேட்க வேண்டும். அது அ.தி.மு.க.வாக இருக்கிறது. எதிரியின் தோல்வியை உறுதிப்படுத்த அக்கட்சியை ஆதரித்து வாக்குக் கேட்கவேண்டிய நிலையில் இருக்கிறோம்.



ஆரியத்துக்கு எதிரான திராவிடம் என்பதை ஆதரிக்கிறேன். ஆனால் நான் ஒரு திராவிடன் என்பதை மறுக்கிறேன். நான் ஒரு தமிழன். இந்தியா ஒரு தேசியம் என்பதே இல்லை. மொழிவழி தேசிய இனங்களின் உரிமைகளுக்கும் உடைமைகளுக்கும் பாதுகாப்பு கிடைக்கும்போதுதான் அது சாத்தியமாகும். இந்திய தேசிய ஒருமைப்பாடு என்பது பிரிட்டிஷ் காரர்களின் துப்பாக்கி முனையில் உருவாக்கப்பட்டது என்று கார்ல் மார்க்ஸ் குறிப்பிட்டார். அதுதான் உண்மை. திராவிடம் என்பது தெலுங்கு, கன்னடம், மலையாளம் என எல்லோரையும் அடக்கியதாக இருந் தது. இங்குயாரும் திராவிடர்கள் இல்லை. நான் இனத்தால் மொழி யால் தமிழனாக இருக்கிறேன்.

எமது அரசியலைப் பின்தொடரும் இளைஞர்களின் எதிர்காலம் பாதிக்கப்படாது. பாதிக்கப்படுவதற்கு ஏன் இந்த வேலைகளை நாங்கள் செய்கிறோம்? பாதிக்கப்பட்ட பிள்ளைகள் தானே ஒன்றிணைந்துள்ளோம். திரைப்படம் என்பது இழிவான ஊடகம் அல்ல. அது உன்னதமான விஞ்ஞானம். எனக்கான ஊடகமாக அதை மாற்றாமல் விட்டதால் ஏற்பட்ட பின் விளைவுகள் இவை.

தலைவர் பிரபாகரன், அதையொரு இராணுவப் பிரிவாகத்தான் கருதுவார். இதுவரைக்கும் நடந்த ஈழப் போராட்டத்தை பிரேவ் ஹார்ட், சிண்ட்லர்ஸ் லிஸ்ட் மாதிரி படங்களாக எடுத்து உலகத்தரத்துக்கு கொண்டுபோக முடியவில்லையே என்ற வருத்தம் அவருக்கு இருந்தது. எந்த வேலையைச் செய்தாலும் அந்த இடத்திலிருந்து வெளியே வரக்கூடாது என்று வருத்தம் அவருக்கு இருந்தது. எந்த வேலையைச் செய்தாலும் அந்த இடத்திலிருந்து வெளியே வரக்கூடாது என்று அறிவுறுத்தினார். நாங்கள் வெறும் உணர்ச்சிவசப்பட்டு பேசுகிறவர்களாக இருந்தால், இத்தனை இலட்சம் மக்களை எங்களுடன் இணைக்க முடியாது.

அறிவுபூர்வமாக சிந்தித்து, அதை ஜனநாயகப் பூர்வமாக முடிவெடுத்து, அதை உணர்வுபூர்வமாகச் செயற்படுத்துவோம். நாங்கள் உண்மையைப் பேசுவது, உரக்கப் பேசுவது, உங்களுக்கு உணர்ச்சி பூர்வமாகப் படுமேதவிர, நாம். அறிவார்ந்த கருத்துக் களைத்தான் உணர்வுபூர்வமாகச் சொல்கிறோம். அதனால் எந்த இளைஞனின் எதிர்காலமும் பாதிக்கப்படுவதற்கு இடம் கிடையாது.

நாம் தமிழர் கட்சி ஒரு அரசியல் கட்சிதான். மே 18. 2010 இல் அரசியல் கட்சியாக அறிவித்தோம். மாபெரும் அரசியல் சக்தியாக நாம் தமிழர் இயக்கம் வளர்ந்துகொண்டிருக்கிறது. எங்கள் பக்கம் திரண்டு வருகிற மக்களை, அவர்கள் முன்னால் நாங்கள் பேசுகிற பேச்சுக்களை ஊடகங்கள் மக்களிடம் எடுத்துக்கொண்டு போகவில்லை. இந்த மாற்றத்துக்கு ஆறு ஆண்டுகள் வைத்திருக்கிறோம். ஆனால் ஆறு ஆண்டுகள் தேவைப்படாது. ஊடகங்களின் வழியாக மக்களிடம் எடுத்துச் சென்றால் ஆறு மாதங்கள் போதுமானது. இப்போது இல்லை. 2016 இல் தேர்தலில் நிற்பது பற்றி யோசிப்போம்.

விஜய்யுடன் இணைந்து பகலவன் படம் இயக்குவதான முயற்சிகள், ரொம்ப நாட்களுக்கு முன்பே பேசி முடிவுசெய்யப்பட்டு விட்டது. இந்த வேலைகளைத் தொடங்கும் காலகட்டத்தில் சிறைப்பட்டுவிட்டேன். நான் விடுதலையாவதற்கு நாளாகும் என்று தம்பி விஜய் வேறு வேறு படங்களை ஒப்புக் கொண்டார். இப்போது உறுதி செய்துவிட்டோம். தயாரிப்பாளர் தாணு அண்ணன். எனக்கும் தேர்தல் வேலைகள் இருக்கின்றன. அவருக்கும் பல பணிகள் இருக்கின்றன. அதற்குப் பிறகு படத்திற்கான வேலைகளைத் தொடங்குவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜப்பானில் சுனாமிக்கு பலியானோர் எண்ணிக்கை 12 ஆயிரத்தை தாண்டியது

(டோக்கியோ)

ஜப்பானில் ஏற்பட்ட பயங்கர பூகம்பம் மற்றும் சுனாமி காரணமாக உயிரிழந்தோர் எண்ணிக்கை 12ஆயிரத்தை தாண்டியுள்ளது. மியாகி மாநிலத்தில் மட்டும் 10 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் பலியாகியுள்ளனர்.

ஜப்பானின் வட கிழக்குப் பகுதியில் உள்ள பசுபிக் கடலில் கடந்த 11ஆம் திகதி பயங்கர பூகம்பம் ஏற்பட்டது. ரிக்டர் அளவுகோலில் இது 8.9 ஆக பதிவானது. இதைத்தொடர்ந்து கடற்கரை நகரங்களை சுனாமி தாக்கியது. இது தேசிய பேரழிவாக அறிவிக்கப்பட்டுள்ளது.



குறிப்பாக சுனாமி பேரலைகளின் கோரத் தாண்டவத்துக்கு மியாகி மாநிலம் செண்டாய் மற்றும் மினாமிசன்ரிக்கு நகரங்கள் சின்னாபின்னமாகி உள்ளன. இதுவரை 2ஆயிரத்திற்கும் மேற்பட்ட உடல்கள் மீட்கப்பட்டுள்ளன.

இலட்சக்கணக்கானவர்கள் வீடுகளை இழந்துள்ளதுடன் குடிநீர் கூட கிடைக்காமல் திண்டாடி வருகின்றனர்.

இந்நிலையில் மீட்புப் பணி யில் கூடுதல் இராணுவ வீரர்களை ஈடுபடுத்த ஜப்பான் பிரதமர் நவோடோ கான் உத்தர விட்டுள்ளார். உயிர் தப்பிய பலர் இன்னமும் உதவிக்காக காத்திருப்பதாகக் கூறப்படுகின்றது. எனவே அவர்களை மீட்க முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது.

உயிர் இழந்தவர்களின் சடலங்களை மீட்கும் பணியும் விரைவு படுத்தப்பட்டுள்ளன. கடற்கரைகளில் ஆங்காங்கே குவியல் குவியலாக சடலங்கள் கிடப்பதாக பொலிஸாரும் , இராணுவ வீரர்களும் தெரிவித்துள்ளனர். இந்த நகரில் வசித்த சுமார் 20 ஆயிரம் பேரில் 10 ஆயிரம் பேர் பலியாகியுள்ளனர். மேலும் பலி எண்ணிக்கை அதிகரிக்கலாம் என அஞ்சப்படுகின்றது.

நாடு முழுவதும் மொத்தம் ஒரு இலட்சம் இராணுவ வீரர்கள் மீட்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக பாதுகாப்பு அமைச்சர் டோஷிமி கிட்ட சவா தெரிவித்துள்ளார்.

இது மொத்த இராணுவ வீரர்களில் 40 சதவீதம் அமெரிக்கா,சீனா,நியூசிலாந்து உள்ளிட்ட உலகின் பல்வேறு நாடுகளும் மீட்புப் பணியில் ஈடுபட்டுள்ளனர். (ஸ்ரீ-2)

# அணு உலையை குளிர்விக்க கடல்நீரை அனுப்புவது ஆபத்து

## அமெரிக்க நிபுணர்கள் கருத்து

(வோஷிங்டன்)

ஜப்பானில் சுனாமி தாக்கியதில் பாதிக்கப்பட்டுள்ள அணு உலையின் வெப்பத்தைத் தணிக்க கடல் நீரைப் பயன்படுத்துவது ஆபத்தானது என்று அமெரிக்க நிபுணர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

ஜப்பானில் இப்போது ஏற்பட்டுள்ள நிலைமையானது. ரஷ்யாவின் செர்னோபோலில் ஏற்பட்ட அணு உலை விபத்து போன்றது என்றும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.



வீடியோ கொன்பரன்ஸ் மூலமான கூட்டத்தில் செய்தியாளர்களுக்குப் பேட்டியளித்த அமெரிக்க நிபுணர்கள் புகுஷிமா பகுதியிலுள்ள அணு மின் நிலையத்தில் ஏற்பட்டுள்ள வெடிப்பு மிகப்பெரும் பாதிப்பை ஏற்படுத்தக் கூடியது. இங்குள்ள முதலாவது அணு உலையில் ஏற்பட்டுள்ள வெடிப்பு மிகவும் அபாயகரமானது. இப்போதுள்ள சூழலில் உலையின் வெப்பத்தைக் குளிர்விக்க கடல்நீரைப் பயன்படுத்துவது தவறான முடிபு.

மின் நிலையத்தில் மின்னுற்பத்தி நிறுத்தப்பட்டு இப்பகுதி முழுவதும் இருளில் மூழ்கியுள்ளது. இதனால் குளிர்சாதனக் கருவிகள் இயங்காத நிலை ஏற்பட்டுள்ளது. இது மிகவும் துரதிர்ஷ்டமான சூழலாகும் என்று அவர் குறிப்பிட்டார். பொதுவாக விபத்து ஏற்பட்டால், அணுக்கதிர் வீச்சைத் தடுக்கவும் வெப்பநிலை உயராமல் தடுக்கவும் நடவடிக்கை எடுப்பதற்காக டீசல் ஜெனரேட்டர்கள் மூலம் குளிர்விப்பான்களை இயக்க முடியும். ஆனால் இப்போது அதற்கும் வழியில்லாத நிலை ஏற்பட்டுள்ளது. அணு உலை இயக்கம் நிறுத் தப் பட்டாலும் அதிலிருந்து வெளியாகும் வெப்பத்தைக் கட்டுப்படுத்துவதுதான் இப்போதுள்ள மிகப்பெரும் பிரச்சினையாகும். அணு உலை குளிர்விக்கப் படா விடில் மூலப்பகுதியிலிருந்து வெளியாகும் வெப்பத்தால் அணு உலையின் சுற்றுப்பகுதி உருகி அணுக்கதிர் வெளியேறும். செர்னோபில் அணுமின் நிலைய அணு உலை பாதுகாப்புச் சுவர்களைவிட இது வலுவானதாக இருக்கும் என நம்பலாம். அதே சமயம் அமெரிக்காவின் 3 மைல் தீவில் இருந்த அணு மின் நிலைய சுவர்களை விட வலுக்குறைங்ககாக இருக்கலாம். இது எங்களவுக்கு உறுதியானது என்பதை இப்போதைக்குக் கூற முடியாது என்று அமெரிக்க அணுசக்தி கட்டுப்பாட்டு ஆணைய முன்னாள் உறுப் பினர் பீற்றர் பிராட்போர்ட் தெரி வித்தார்.

ஒருவேளை கட்டுப்படுத்த முடியாத அளவுக்குப் போனால் மணல், சீமெந்து ஆகியவற்றைப் போட்டு செர்னோபில் ஆலையை மூடியதைப் போல மூடிவிட வேண்டியது தான் என்றும் அவர் குறிப்பிட்டார்.

1986இல் உக்ரைனில் உள்ள செர்னோபில் அணு உலையில் வெடிப்பு நிகழ்ந்தது.

இதேபோல 1979ஆம் ஆண்டு அமெரிக்காவின் பென்ஸில்வேனியா மாகா ணத்தின் மூன்று மைல் தீவில் உள்ள அணு உலையில் வெடிப்பு நிகழ்ந்தது.

இவ்விரு சம்பவங்களிலும் அணு உலையின் மூலப் பகுதி வெப்ப மடைந்தது. இதனால் இவை மூடப்பட்டன. இப்போதைய சூழலில் அணுக் கதிர்வீச்சு பரவாமல் தடுக்க வேண்டியது மிகவும் அவசியம் என அவர்கள் தெரிவித்தனர். (ஸ்ரீ)

## சுனாமியில் சிக்கிய முதியவர் மீட்பு

(டோக்கியோ)

ஜப்பானை கடந்த சனிக்கிழமையன்று தாக்கிய சுனாமி பேரலையில் சிக்கிய 60 வயது ஹிரோமிட்சு ஷிங்கவா என்பவரை 15 கி.மீ தொலைவிற்கு இழுத்து சென்று விட்டது.

இதில் அவர் இரண்டு நாளாக வீட்டுக் கூரையின் மீது ஏறி நின்று இருந்த போது அவ்வழியாக ஜப்பான் இராணுவ வாகனத்தில் மீட்பு குழுவினர் வந்த போது சிவப்பு துணியை அடையாளம் காட்டியதால் இராணுவத்தினர் அவரை உயிருடன் மீட்டனர்.

இது குறித்து ஷிங்கவா கூறியதாவது,

சுனாமி பேரலை தாக்கிய போது நானும் எனது மனைவியும் வெளியில் சென்று விட்டு வீடு திரும்பிக் கொண்டிருந்தோம். அப்போது தான் சுனாமி பேரலையால் நான் கொண்டு செல்லப்பட்டேன். எனது மனைவியை இழுத்து சென்ற பேரலை எங்கு கொண்டு சென்றது என்பது தெரியவில்லை என வருத்தத்துடன் தெரிவித்தார்.

இது குறித்து இராணுவ அதிகாரி குறிப்பிடுகையில், ஷிங்கவா அதிர்ஷ்டசாலி என்றும் இரண்டு நாட்கள் தன்னம்பிக்கையோடு தன்னை காப்பாற்றி கொண்டுள்ளார் எனவும் தெரிவித்தார். (ஸ்ரீ)




# சவுதி அரேபியாவிலும் புரட்சி

(ரியாத்)

சவுதி அரேபியாவில் மாற்றத்தை விரும்பும் இதுவரை அமைதிப்புரட்சி நடத்தி வந்த ஷியா முஸ்லிம்கள் தற்போது அரசுக்கு எதிராக வெளிப்படையான கிளர்ச்சியில் இறங்கியுள்ளனர். உலகின் எண்ணெய் இருப்பின் 20 சதவீதத்துடன் முன்னணியில் இருக்கும் நாடு சவுதி அரேபியா லிபிய அரசியல் நெருக்கடியால் குறைந்துள்ள எண்ணெய் ஏற்றுமதியை,சவுதி அரேபியா ஈடுசெய்து வருகிறது. மத்திய கிழக்கு மற்றும் வட ஆபிரிக்க நாடுகளில் ஏற்பட்ட மக்கள் கிளர்ச்சியின் பாதிப்பால் ,கடந்த 4 ஆம் திகதி சவுதி அரேபியாவில் அரசுக்கு எதிராக மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இதுவரை சவுதியில் அரசு ஆதரவுடனோ அல்லது தனிப்பட்ட முறையிலோ ஆர்ப்பாட்டங்கள் நடந்ததில்லை.

1930ஆம் ஆண்டில் இருந்து அந்நாட்டில் ஆர்ப்பாட்டங்களுக்குத் தடை விதிக்கப் பட்டுள்ளது. கடந்த 4ஆம் திகதி பேஸ்புக் இணையத்தளத்தின் மூலம் ஆர்ப்பாட்டத்திற்கு பிரசாரம் மேற்கொள்ளப்பட்டது. லிபியாவைப் போலவே சவுதியிலும் இளைஞர் பட்டாளம் அதிகரித்து விட்டது. போதிய வேலை வாய்ப்பு இல்லை. பெண்கள் தனியாக கார் ஓட்டிச் செல்லக்கூடாது. கணவரின் அனுமதி இல்லாமல் மனைவி வெளிநாடுகளுக்குப் பயணிக்கக்கூடாது போன்ற கடுமையான சட்ட விதிகளால் மக்கள் கோபத்தில் உள்ளனர். சவுதியில் 14முதல் 24 வயதிற்குட்பட்ட 40 சதவீதம் பேர் வேலைவாய்ப்பு இல்லாமல் உள்ளனர். நாட்டின் 70 சதவீத மக்கள் தொகை, 20 வயதிற்குக் கீழ் உள்ளது. இவர்களின் வேலைவாய்ப்புக்கு அரசு என்ன உத்தரவாதம் வைத்திருக்கிறது என்பது மக்களின் கேள்வி.

சட்டப்படியான மன்னராட்சி,தேர்ந்தெடுக்கப்பட்ட பாராளுமன்றம், சட்டத்திற்குட்பட்ட பொறுப்பான அதிகாரிகள் சவுதி அரேபியாவிற்கு தேவை என்ற செய்தி,இணையத்தளம் வாயிலாகப் பரவியது. அமைதியான வழியில் சவுதி மக்கள் தங்கள் கருத்துக்களைக் கூறியிருந்தாலும்,உடனடியாக இந்த இணையத்தளங்கள் முடக்கப்பட்டன.

கடந்த 11ஆம் திகதி பெரும் எண்ணிக்கையில் திரண்டு ஆர்ப்பாட்டம் நடத்த இணையத்தளங்களில் அழைப்பு விடுக்கப்பட்டது. அதனால் ,உஷாரடைந்த சவுதி அரசு பொலிஸ் பாதுகாப்பை [illegible]காக்கியது. மேலும் , கூட்டம் கூடினால் அதில்,பயங்கரவாதிகள் தங்கள் கைவரிசைகளைக் காட்டி விடுவர் என்றும் பயமுறுத்தியது. அதனால் ஆர்ப்பாட்டம் ,தோல்வியில் முடிந்தது.

மன்னர் அப்துல்லா சமீபத்தில், சலுகைகளை அள்ளி வீசிய போது, அவர் ஒதுக்கிய நிதியை விட தேவைகள் அதிகமாகவுள்ளன. என்று மக்கள் வெளிப்படையாக தெரிவித்தனர்.

நாட்டின் கிழக்கில் எண்ணெய் வளம் அதிகம். இப்பகுதியை தங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர சவுதியின் 10 சதவீத ஷியாக்கள் மறைமுகக் கிளர்ச்சியில் ஈடுபட்டுள்ளனர்.

கடந்த வாரம் குவாதி நகரப் வீதிகளில் இறங்கிய ஷியாக்கள் போராட்டம் நடத்தினர். பொலிஸார் கையாண்ட அடக்குமுறையில் 3 பேர் காயமடைந்ததாக கூறப்பட்டது. சவுதி அரசு எந்தவித குற்றமும் செய்யாத ஷியாப் பிரிவு மக்களை சிறையில் அடைத்துள்ளது என்பது மக்களின் குற்றச்சாட்டு. தற்போது, 14 ஆண்டுகளாக எவ்வித குற்றச்சாட்டுகளும் இல்லாமல் சிறையில் அடைக்கப்பட்டுள்ள 9 ஷியாப் பிரிவு கைதிகளை விடுவிக்க கோரி வருகின்றார். (ஸ்ரீ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈராக் மற்றும் இலங்கையில் மனித அவலங்களை தடுக்க ஐ.நா. பாதுகாப்பு சபை தவறிவிட்டது

## ஜான் ஏகலாண்ட் தெரிவிப்பு



இறுதித் தசாப்தங்களில் ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபை பல மனித அவலங்களைத் தடுப்பதிலிருந்து தவறிவிட்டது. 1990 காலப் பகுதியில் றுவாண்டா மற்றும் பொஸ்னியாவிலும் இறுதியாக ஈராக் மற்றும் இலங்கையிலும் உரிய நடவடிக்கைகளை எடுப்பதில் இருந்து பாதுகாப்புசபை தவறிவிட்டது என நோர்வே வெளியுறவு ஆய்வு மையத்தின் தலைவர் ஜான் ஏகலாண்ட் அண்மையில் எழுதிய கட்டுரையொன்றில் தெரிவித்துள்ளார்.

கடாபியை எவ்வாறு தடுத்து நிறுத்துவது என்ற தலைப்பில் நோர்வேயின் பத்திரிகையான அவ்ரன் போஸ்ரனில் இக்கட்டுரை வெளியாகியுள்ளது.

அக்கட்டுரையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

சதாம் உசேன் போன்ற மோசமான சர்வாதிகாரிகளை எதிர்கொள்வதற்கான கருத்தொருமைப்பாட்டை அடைவதில் வல்லரசுகள் எப்போதும் தோல்வி கண்டு வந்துள்ளன. ஏனெனில், பயங்கரவாதிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கும் ஆட்சியாளர்களிடமிருந்து எந்தவித கேள்விகளுமின்றிஅவர்கள் கூறுவதை ஏற்றுக்கொள்ள வல்லரசுகள் தயாராக இருக்கின்றன. அல்லது தமது சொந்த நாட்டு மக்கள் தவிர்ந்த ஏனைய நாட்டு மக்களின் உயிர்களைக் காப்பதற்கு வளங்களைப் பயன்படுத்துவதற்கான விருப்பமும் அக்கறையும் அவர்களிடத்தில் இல்லை எனவும் கொள்ளலாம்.

சர்வதேச அரசியலுக்கு சாதகமான விதிவிலக்காக லிபியா அமையக்கூடும். முவம்மர் கடாபிக்கும் அவரைச் சாந்த வட்டத்திற்கும் எதிரான தடை நடவடிக்கைகள் தொடர்பாக ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபை விரைவான உடன்பாட்டினை எட்டியுள்ளது.

ஆயுதத்தடை, பொருளாதார மற்றும் நிதி வளங்களை முடக்குதல் , பயண உள்நுழைவு அனுமதிக்கான (விசா) தடை மற்றும் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் என கடாபி ஆட்சிபீடத்திற்கு எதிரான தீர்மானங்கள் எடுக்கப்பட்டுவிட்டன.

கடாபியின் போர் மீறல்கள் தொடர்பான விசாரணை நடவடிக்கைகள் ஏலவே தொடங்கப்பட்டு விட்டன. லிபியாவுக்கு ஏதிரான பொருளாதாரத் தடைகள் ஐரோப்பிய ஒன்றியம் விரிவுபடுத்தியுள்ளது. பர்மாவின் ஜெனரல்களுக்கு (இராணுவ ஆட்சியாளர்களுக்கு) எதிராக இதுபோன்ற நடவடிக்கைகளுக்கு அருகில் கூட சர்வதேச சமூகம் செல்லவில்லை.

இதிலுள்ள சிக்கல் யாதெனில், இந்நடவடிக்கைகள் செயல்வடிவம் பெறுவதற்கு காலம் எடுக்கும் என்பதாகும். இதேவேளை பொதுமக்களுக்கும் புரட்சியாளர்களுக்கும் எதிரான அரசாங்கப் படையினரின் தாக்குதல்களால் பெரும் இரத்த ஆறு ஓடப்போகிறது. எனவே, விமானப்பறப்பு அற்ற வலையம் மற்றும் கடாபியின் படைகளுக்கு எதிரான இராணுவ ரீதியிலான திட்டங்கள் வகுக்கப்பட வேண்டும்.

### நடவடிக்கைகளை எடுப்பதில் முரண் நிலை

மேற்குலக தேசங்களே விமான பறப்பு அற்ற வலையத்தை ஏற்படுத்தும் திட்டத்தினை நடைமுறைப்படுத்தக்கூடியவை. ஆனால் ஈராக், ஆப்கானிஸ்தான் மற்றும் பாலஸ்தீனம் (காசா) ஆகிய தேசங்களில் மேற்குலகம் கொண்டிருக்கும் அணுகுமுறை மற்றும் கடாபிக்கான ஆயுத விற்பனை போன்ற விவகாரங்களால் உலகக் காவற்றுறையாக செயற்பட்ட மேற்குலகம் அரபு நாடுகளில் நம்பகத் தன்மையை இழந்து விட்டது.

சர்வதேச ஆயுதத் தடை திட்டமிடப்படும் போது செயற்திறன் கொண்டதாகத் தென்படுவதோடு லிபிய ஆட்சி பீடத்தின் ஆதரவு நாடுகளை பின்வாங்கச் செய்யும் என்றே கருதலாம். திட்டத்தினை நடைமுறைப்படுத்தும் போது பொதுமக்களின் உயிரிழப்புக்கள் தொடர்பான கண்டனங்கள் எழுப்பப்படுவதோடு இராணுவ நடவடிக்கைக்குரிய நிபந்த னைகளும் அதிகரிக்கும்.

விமானப் பறப்பற்ற வலையம் மற்றும் புரட்சியார்களுக்கான ஆயுத உதவி போன்ற விடயங்களின் அங்கீகாரம், செயல் வேகம், செலவீனங்கள் மற்றும் அனைத்துலகின் படை நடவடிக்கை பற்றிய வெளிப்படையான விவாதம் மக்களின் அவலம் தொடர்பான கவனத்தை குன்றச் செய்து விடக்கூடியது. பாதுகாப்பு சபையிலும் நேட்டோவிலும் இராணுவ நடவடிக்கை தொடர்பான தெளிவின்மை நீடிக்குமானால் கடாபியின் படைகள் பின்வாங்குவதற்குரிய காரணங்கள் அற்றுப் போய்விடும்.

இவ்வாறான பொறுப்புகள் சார்ந்த முரண் நிலைகளுக்கு அப்பால் இவ்வாண்டு மேலாதிக்கத்தை நிலைநாட்டும் சர்வாதிகாரத்திற்காக பொதுமக்கள் கொன்றழிக்கப்படுவதை எமது தலைவர்கள் கையறு நிலையில் பார்த்திருப்பதை அனுமதிக்கலாகாது. கடாபிக்கெதிரான அழுத்தம் இறுக்கமடைய வேண்டும். விமானப் பறப்பற்ற வலையத்தை உருவாக்குவதிலும் கடற்போக்குவரத்து தடையை ஏற்படுத்துவதிலும் பாதுகாப்புச் சபை விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும்.

எமது லிபிய சகோதர மக்களின் இரத்தம் பெருக்கெடுத்தோடும் போது அரபு லீக்கைகளைக் கட்டிப் பார்த்திருக்காது என அரபு லீக்கின் பொதுச் செயலர் அம்றி மௌசா ஏலவே அறிவித்துள்ளார்.

எனவே, லிபிய விவகாரத்தில் அரபு நாடுகள் ஆதரிக்கும் நடவடிக்கைகளை ரஷ்யா மற்றும் சீனா தடுக்கப்போவதில்லை. இந்நிலையில் ஐ.நா. ஆணையுடன் அரபு-மேற்குலக கூட்டு நடவடிக்கை அரசியல் ரீதியில் பலமானதாக அமையும். இறுதித் தசாப்தங்களில் ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபை பல மனித அவலங்களைத் தடுப்பதிலிருந்து தவறிவிட்டது. கடந்த 1990 காலப்பகுதியில் ருவாண்டா மற்றும் பொஸ்னியாவிலும் இறுதியாக ஈராக் மற்றும் இலங்கையிலும் உரிய நடவடிக்கைகளை எடுப்பதிலிருந்து பாதுகாப்பு சபை தவறி விட்டது.

தேசிய அரசுகள் தமது சொந்த மக்களை இன அழிப்பு, போர்க் குற்றமீறல்கள், இனத்துடைப்பு மற்றும் மனிதத்திற்கு எதிரான மீறல்களிலிருந்து பாதுகாக்கத் தவறும் பட்சத்தில் நாங்கள் ஒருமித்தும் விரைவாகவும் வலுவானதுமான நடவடிக்கைகளை முன்னெடுப்போம் என 2005 இல் இடம்பெற்ற ஐ.நா உயர்மட்டக் கூட்டத்தில் 190 நாடுகள் உறுதியெடுத்தன .

இதை விடத் தெளிவாகக்கூற முடியாது. லிபிய பொதுமக்களைக் பாதுகாப்பது அமெரிக்கா முதல் நோர்வே வரையான அரசாங்கத் தலைவர்களினதும் இத்தாலி முதல் சீனா வரையான தலைவர்களினதும் கடமையாகும் என கூறப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)

## ஆனையிறவு உப்பளத்திற்கு பணியாளர்களை இணைத்துக் கொள்வதற்கு நடவடிக்கை

(கிளிநொச்சி)

மிகவிரைவில் ஆரம்பிக்கப்படவுள்ள ஆனையிறவு உப்பளத்திற்கு பணியாளர்களை இணைத்துக்கொள்வதற்கு பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

இதற்கமைய வடமாகாண உப்பளங்களில் பணிபுரிந்த சகல தரத்திலுமான பணியாளர்கள் முழுப்பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம், பிறந்த திகதி, இறுதியாக தொழில் செய்த இடமும் பதவியும், கல்வித் தகைமைகள், உப்பளம் சார்ந்த அனுபவம் என்பவற்றுடன் தங்கள் விண்ணப்பப் படிவங்களை இம்மாதம் 20ஆம் திகதிக்கு முன்னர் செயலாளர், பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சு, 780, மருதானை வீதி, கொழும்பு-10 என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு அவ்வமைச்சு தெரிவித்துள்ளது.

பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தாவின் பெருமுயற்சியால் ஆனையிறவு உப்பளம் மிக விரைவில் ஆரம்பிப்பதற்கான செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-3-30)

## பாக். ஊடகவியலாளர் கைதாகி விடுதலை

பாகிஸ்தானைச் சேர்ந்த ஊடகவியலாளர் ஒருவர் இலங்கையில் கைது செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அமெரிக்காவின் நியூயோர்க் டைம்ஸ் சதுக்கத்தில் கார்க் குண்டொன்றை வெடிக்கச் செய்ய முயற்சித்த சந்தேக நபரின் பெயரையுடைய ஊடகவியலாளர் ஒருவரை இலங்கை அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.

பைசல் சாசட் என்ற இஸ்லாமாபாத்தைச் சேர்ந்த ஊடகவியலாளரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார். குறித்த ஊடகவியாளர் ஒருநாள் தடுத்து வைக்கப்பட்டிருந்ததாகவும் பாகிஸ்தான் உயர்ஸ்தானிகராலயத்தின் தலையீட்டினால் குறித்த ஊடகவியலாளர் விடுவிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

விசாரணைகளுக்காக குறித்த ஊடகவியலாளரைக் கைதுசெய்ததாக புலனாய்வுப் பிரிவினர் அறிவித்துள்ளனர். உலகக் கிண்ணப் போட்டித்தொடர் குறித்த செய்தி சேகரிப்பிற்காக இலங்கை வந்தவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் குறித்து அரசாங்கம் கருத்து எதனையும் வெளியிடவில்லை. (ஸ்ரீ)



தாளையடி றோ.க.த.க.பாடசாலையின் இல்ல மெய்வன்மைப் போட்டி அண்மையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் மாணவர்களின் அணிவகுப்பு மரியாதையை பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட மருதங்கேணி கோட்டக்கல்வி அதிகாரி க. பொன்னையா, சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட வடமராட்சி ஈழமக்கள் ஜனநாயகக் கட்சிப் பொறுப்பாளர் ஐ.ஸ்ரீரங்கேஸ்வரன்,கௌரவ விருந்தினராக கலந்து கொண்ட தாளையடி பங்குத்தந்தை ஜேம்ஸ்நாதன் அடிகளார், அதிபர் நா. கண்ணதாசன் ஆகியோர் ஏற்றுக் கொள்வதையும் மாணவர்களின் இடைவேளை நிகழ்வினையும் வெற்றியீட்டிய இல்லத்திற்கு பிரதம விருந்தினர் வெற்றிக் கேடயம் வழங்குவதையும் படங்களில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

> உண்மையை உறுதியாகக் கடைப்பிடிப்பதில் இருந்துதான் வலிமை எல்லாம் கிடைக்கின்றது. -காந்திஜி

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

## ஐ.நா. செயலர் பான் கீ மூனிடம் மனக்குழப்பம் உள்ளது!

இலங்கை விவகாரம் தொடர்பில் ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ மூன் கடுமையாகக் குழம்பிப் போயுள்ளார். அவருடைய குழப்பத்திற்கான காரணம் என்ன என்பது புரியாமல் உள்ளது.

வன்னிப் போர் தொடர்பில் இடம்பெற்றதாக கூறப்படும் போர்க்குற்றச்சாட்டு குறித்து விசாரணைகளை மேற்கொள்வதற்காக ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ மூன் நிபுணர் குழுவொன்றை நியமித்திருந்தார்.

அவரால் நியமிக்கப்பட்ட நிபுணர் குழு இலங்கைக்கு வருகை தந்து போரினால் பாதிக்கப்பட்ட மக்களைச் சந்தித்து விசாரணைகளை மேற்கொண்டிருக்க வேண்டும்.

ஆனால் அது எதுவும் இதுவரை நடைபெறவில்லை.

ஐ.நா. நிபுணர் குழு இலங்கைக்கு வருவதாயின் ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவை மட்டுமே சந்திக்க முடியும்.

அதுமட்டுமன்றி நல்லிணக்க ஆணைக்குழுவிடம் ஐ.நா. நிபுணர் குழு தமது சாட்சியத்தை வழங்கலாம் என இலங்கை அரசு நிபந்தனை விதித்திருந்தது.

இலங்கை அரசின் நிபந்தனையானது அரசைப் பொறுத்தவரை துணிச்சலானது என்பதை ஏற்றுத்தானாக வேண்டும்.

அதேநேரம் அதன் மறுபக்கத்தில் ஐ.நா. மிகவும் பலவீனப்பட்டு விட்டதென்பதையும் மறுத்து விட முடியாது. சிறிய நாடான இலங்கையிடம் ஐ.நா. செயலாளர் கடுமையாக பயப்படுகிறார்.

ஏன்தான் அவருக்கு இந்தப் பயம்? அவரின் பயம் குறித்த பரிசோதனைகளை விக்கிலீக்ஸ் போன்ற புலனாய்வு மருத்துவர்களால் மட்டுமே கண்டறிய முடியும்.

எதுவாயினும் ஐ.நா. செயலர் பான் கீ மூன் ஈழத்தமிழர்கள் விடயத்தில் பாராமுகமாக இருப்பது தெட்டத்தெளிவாகிவிட்டது.

அவரின் ஆரம்ப நடவடிக்கைகள் அரசுக்கு சாதகமாக இருந்தன. அதற்கு சர்வதேச பொது அமைப்புகள் தெரிவித்த கண்டனங்களை அடுத்தே அவர் நிபுணர் குழுவை நியமித்திருந்தார்.

இப்போது அந்த நிபுணர் குழுவும் பெறுமானமற்றதாக மாற்றப்பட்டுள்ளது. என்ன செய்வது? எல்லாம் பொருளாசை செய்யும் அநியாயம் தான்.

## மீள் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

2002-2006 வரையான காலப் பகுதிகளில் முதலாம் அரை ஆண்டு இறுதிப் பரீட்சைகளில் சித்தியடையத்தவறிய மீள் பரீட்சார்த்தி களாக விண்ணப்பித்தவர்களுக்கான பரீட்சைகள் எதிர்வரும் 21ஆம் திகதி தொடக்கம் அடுத்தமாதம் 2ந் திகதி வரை யாழ்ப்பாண உயர் தொழில்நுட்பவியல் நிறுவனத்தில் நடைபெற உள்ளது.

அனைத்து பரீட்சார்த்திகளினதும் பரீட்சை அனுமதி அட்டைகள் தபாலில் சேர்க்கப்பட்டுள்ளது. (ந)

## கட்டாயப் பதிவு தொடர்கிறது

## நீதிமன்றில் த.தே.கூ. மீண்டும் புகார்

(கொழும்பு)

**வடக்கில் கட்டாய பதிவுகள் நிறுத்தப்படுவதற்கான பொறுப்பை சட்டமா அதிபர் நீதிமன்றில் ஏற்றிருந்த போதிலும் பாதுகாப்பு படையினர் தொடர்ந்தும் பதிவுகளை மேற்கொண்டு வருவதாக தமிழ் தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் நேற்று உயர் நீதிமன்றில் புகாரிட்டனர்.**

யாழ்ப்பாணத்திலும் கிளிநொச்சியிலும் மேற்கொள்ளப்படும் கட்டாய பதிவுகள் உடனடியாக நிறுத்தப்படுவதற்கான பொறுப்பை கடந்த 3ஆம் திகதி சட்டமா அதிபர் உயர் நீதிமன்றில் ஏற்றிருந்தார்.

இப்பதிவு நடவடிக்கைக்கு எதிராக த.தே.கூட்டமைப்பு எம்.பிக்கள் தாக்கல் செய்த மனு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது சட்டமா அதிபர் சார்பில் ஆஜரான பிரதி சொலிஸிட்டர் ஜெனரல் புவனேக அலுவிகார இதை நீதிமன்றில் தெரிவித்திருந்தார்.

அதையடுத்து மனுதாரர்களான த.தே.கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் மாவை சேனாதிராஜா, சுரேஷ் பிரேமச்சந்திரன், அப்பாத்துரை விநாயகமூர்த்தி, ஈஸ்வரபாதம் சரவணபவன், சிவஞானம் சிறிதரன் ஆகியோர் தமது மனுவை வாபஸ் பெற்றிருந்தனர்.

நீதிபதிகள் என்.ஸி. அமரதுங்க, பி.ஏ.ரட்நாயக்க, சந்திரா ஏக்கநாயக்க ஆகியோர் அடங்கிய குழாம் இவ்வழக்கு விசாரணையை முடிபுக்கு கொண்டு வந்திருந்தது.

ஆனால் கட்டாய பதிவு நடவடிக்கைகள் தொடர்பாகவும் இது நீதிமன்ற அவமதிப்பு நடவடிக்கை எனவும் த.தே.கூட்டமைப்பு எம்.பிக்கள் குற்றம் சுமத்தனர்.

இந்நிலையில் தமது மனுமீதான விசாரணையை மார்ச் 15அல்லது 16 அல்லது 17ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளுமாறு மனுதாரர்கள் நீதிமன்றை கோரியுள்ளனர். (ந-5)

## தேசிய பாடசாலைகளுக்கு 2800 ஆசிரியர் நியமனம்

(கொழும்பு)

**தேசியப் பாடசாலைகளிலுள்ள ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்புவதற்காக கல்வியியற் கல்லூரிகளில் பயிற்சி பெற்ற 2ஆயிரத்து 800 பேர் நியமிக்கப்படவுள்ளதாக கல்வி அமைச்சின் செயலாளர் எச்.எம்.குணசேகர தெரிவித்தார்.**

முஸ்லிம் சமய மற்றும் கலாசார அமைச்சின் முன்னாள் செயலாளர் எஸ்.எச்.எம். ஜெமீல் தலைமையிலான அகில இலங்கை முஸ்லிம் கல்வி மாநாட்டுப் பிரதிநிதிகளுடன் நேற்று திங்கட்கிழமை மாலை கல்வி அமைச்சில் இடம்பெற்ற சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இலங்கை முஸ்லிம்களின் கல்விப் பிரச்சினை தொடர்பாக ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிப்பதற்காக கல்வி அமைச்சினால் நியமிக்கப்பட்ட மூவர் கொண்ட குழுவினால் சிபாரிசு செய்யப்பட்ட முன்மொழிகளை அமுல்படுத்துவதற்கான செயற்றிட்ட அறிக்கை தயாரிக்கப்படவுள்ளதாகவும், குறித்த அறிக்கையின் தயாரிப்புப் பணிகள் இரண்டு மாதத்திற்குள் நிறைவு செய்யப்படும் என அவர் தெரிவித்தார்.

இதேவேளை ஆயிரம் இரண்டாம் தரப் பாடசாலைகளை அபிவிருத்தி செய்யும் திடட்டத்திற்காக தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளின் விபரம் எதிர்வரும் 23ஆம் திகதி கல்வி அமைச்சின் நாடாளுமன்ற ஆலோசனைக் குழுக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளதாக கல்வி அமைச்சின் செயலாளர் எச்.எம். குணசேகர தெரிவித்தார். (ந-5)

## ரயர் வெடித்து ஒருவர் பலி

(முல்லைத்தீவு)

உழவு இயந்திரத்திற்கு காற்று அடித்த போது ரயர் மற்றும் றிம் வெடித்துச் சிதறியதில் ஒருவர் பலியானார், மற்றொருவர் காயமடைந்தார். இச்சம்பவம் முள்ளியவளையில் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த நற்குணம் சுப்பிரமணியம் (வயது 68) என்பவரே மரணமடைந்தவராவார். த.இரத்தினலிங்கம் (வயது 33) என்பவர் காயமடைந்தார். (ந-3)

## சுவாமி விவேகானந்தரின் அறிவுரைகள்



நம் நாட்டுக் கல்வியில், ஆன்மீகக் கல்வி, உலக நடைமுறைக்கல்வி (இலௌகிகம்) எனும் இரண்டிலும் நமக்குப் பிடிப்பு, உரிமை இருக்க வேண்டும். இந்த இரண் டயும் அடித்தளமாகக் கொண்டே நம் கல்வி எழ வேண்டும். உங்களுக்குப் புரிகிறதா? சொல்லப் போனால், நாம் காணும் கனவு, பேசுகிற பேச்சு நம்முடைய எண்ணம், வேலை எல்லாமே இதைப்பற்றியதாகவே இருக்க வேண்டும். அப்படியிருந்தாலொழிய நம் இனத்திற்கு விடிவு தோன்றாது. இன்று நீங்கள் பயின்று வரும் கல்வியில் சில நல்ல கருத்துக்கள் இருக்கலாம். இருப்பினும் இக் கல்வியில் தீமைகளே பெருகியுள்ளன. எவையெல்லாம் நல்லனவோ அவையெல்லாம் அடிபட்டு அடிமட்டத்திற்குப் போய் விட்டன. முதலில் அது மனிதனை உருவாக்கும் கல்வியன்று. எதிர்மறைக் கல்வியாகவே அது முழுக்க முழுக்க அமைந்துள்ளது. எதிர்மறைக்கல்வி அல்லது எதிர்மறைப் பயிற்சி மரணத்தை விட நாசமானது.

## ஆன்மீகத் தேடலை வழிப்படுத்தும் தவக்காலம்

### நல்ல மனநிலை உள்ள சொற்கள் செபமே (மத். 6:7-15)

இறைவேண்டல் மனிதருக்கு அவசியமானது. இன்பத்திலும் துன்பத்திலும் நம்மோடு கடவுள் உள்ளார் எனவும், அவரில் நாம் நம்பிக்கை கொண்டால் ஒருநாளும் அவர் நம்மைக் கைவிடார் எனவும் நாம் உளமார ஏற்றுக் கொள்ளும்போது அங்கே இறைவேண்டல் தோன்றுகிறது. நம் வாழ்க்கை முறை கடவுளின் புகழைப் பறைசாற்ற வேண்டும். அப்போது இறை வேண்டலே வாழ்வாக மாறும்.

"நீங்கள் இவ்வாறு இறைவனிடம் வேண்டுங்கள்" என்று இயேசு சீடர்களுக்குக் கற்றுக்கொடுத்த சம்பவம் செபிப்பது எவ்வளவு கடினமான காரியம் என்பதை உணர்த்துகின்றது. மனப்பாடம் சொல்லுவதோ, செபப் புத்தகத்தை வாசிப்பதோ செபம் அல்ல. மாறாக இறைவன் மீதுள்ள நம்பிக்கையில் எழுச்சியுற்று உடலை ஒருமுகப் படுத்தி, இறைவனை நோக்கி எழுப்பி உள்ளமும் உடலும் ஒன்று சேர்ந்து இறைவனைப் போற்றிப் புகழ்வதும் அவருக்கு நன்றி செலுத்துவதும், இறை உதவியை மன்றாடுவதும், பாவ மன்னிப்பைக் கேட்பதும்தான் செபம்.

செபம் என்பது ஒரு மனநிலை என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. இறைவன் பற்றிய எம்மை, பிறரைப் பற்றிய எமது பார்வை மனநிலையே ஒரு செபம்தான். மனநிலையை சொற்களின் வழியாக வெளிப்படுத்தும் போது, அதற்கு ஒரு வடிவம் கிடைக்கிறது. நல்ல மனநிலை இல்லாத சொற்கள் செபமே அல்ல. இயேசு கூறிய பரிசேயர், வரிதண்டுவோர் இருவரின் செபம் பற்றிய உவமை(லூக்:18ல) இதை நன்கு காணலாம். அந்த மன நிலையை ஆண்டவர் இயேசு கற்றுத் தந்த "பரலோகத்தில்" என்னும்செபத்தில் கற்றுக் கொள்ளலாம். இறைவனுக்கே நாம் முதலிடம் கொடுக்க வேண்டும். பிறரை மன்னித்து ஏற்றுக் கொள்ள வேண்டும் நமது தேவைகளில் இறைவனைச் சார்ந்து வாழவேண்டும் என்பவை தாம் அந்த மனநிலைகள். இறைவனின் துணையின்றி, அவர் கற்றுத் தந்தாலன்றி, நம்மால் செபிக்க முடியாது. "தூய ஆவியால் ஆட்கொள்ளப் பட்டவரன்றி வேறு எவரும் "இயேசுவே ஆண்டவர்" எனச் சொல்ல முடியாது. (1கொரி12:3) அவர் கற்றுத் தந்தவாறு செபிப்போம். நாம் இறைவேண்டல் செய்வதற்கு முன்னரே கடவுளின் திருவருள் நம் உள்ளத்திலும் இதயத் திலும் நிறைந்துள்ளது. எனவே இறை வேண்டலின்போது நாம் அந்த இறைப் பிரசன்னத்தை உணர்ந்து கொள்வோம்.

ம. பிரான்சிஸ்,
கத்தோலிக்க சுதந்திர,
பத்திரிகையாளர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**33** இதுவரை முடிந்துள்ள ஆட்டங்கள்

**அதிக ரன் குவிப்பு**
இந்திய அணி 5 ஆட்டங்களில்

**1405**

| எதிர் | |
|---|---|
| பங்களாதேஷ் | -370 |
| இங்கிலாந்து | -338 |
| அயர்லாந்து | -210 |
| நெதர்லாந்து | -191 |
| தென்னாபிரிக்கா | -296 |

**அதிக டக்-அவுட்**
**3** கோஷே கென்யா

**அதிக சராசரி**
**175.00**
மைக்கெல் கிளார்க் அவுஸ்திரேலியா



**அதிவேக அரைச் சதம்**



**23** பந்து
பொல்லார்ட் (மேற்கிந்தியத்தீவுகள்)

**அதிவேக சதம்**
**50** பந்து
கெவின் ஓபிரையன் (அயர்)

**அதிகவேக 150**
**124** பந்து
சேவாக் (இந்தியா)

**சிறந்த இணைப்பாட்டம்**
**௨௮௨**
உபுல் தரங்க –திலகரட்ண டில்சான் (இலங்கை) எதிர் சிம்பாவே

**6/27**
சிறந்த பந்துவீச்சு
கீமர் ரோச் (மேற்கிந்தியத் தீவுகள்) எதிர் நெதர்லாந்து



**அதிக சிக்ஸ்சர்கள்**
**6** **12**
ரோஸ் ரெய்லர் நியூசிலாந்து
5 போட்டிகளில்



**அதிக பவுண்டரிகள்**
**4** **38**
சச்சின் டெண்டுல்கர் இந்தியா
5 போட்டிகளில்



# காலிறுதியில் நுழைவது யார்-யார்?

உலகக்கிண்ண கிரிக்கெட் தொடரில் நேற்று வரை 33 லீக் ஆட்டங்கள் முடிபடைந்துவிட்டன.

இந்நிலையில் ஏ பிரிவிலிருந்து காலிறுதிக்கு முன்னேறும் 4 அணிகளும் உறுதி செய்யப்பட்டுவிட்டன.

புள்ளிப்பட்டியலில் முதல் நான்கு இடங்களை வகிக்கும் நியூசிலாந்து, பாகிஸ்தான், இலங்கை, அவுஸ்திரேலிய அணிகள் காலிறுதிச் சுற்றை எட்டிவிட்டன.

இதன்மூலம் ஏ பிரிவில் கனடா, சிம்பாவே, கென்யா அணிகள் காலிறுதி வாய்ப்பை இழந்து விட்டன.

ஆனால் பி பிரிவில் தான் இடியப்பச் சிக்கல் நீடிக்கிறது. இந்திய அணி 5 ஆட்டங்களில் பங்கேற்று 3 வெற்றி, ஒரு தோல்வி, ஒரு சமநிலையுடன் 7 புள்ளிகளைப் பெற்று தனது பிரிவில் முதலிடத்தில் உள்ளது.

இன்னும் ஒரு மோதலில் இந்தியா மேற்கிந்தியத் தீவுகள் அணியை சந்திக்கவுள்ள நிலையில் காலிறுதி வாய்ப்பு உறுதிசெய்யப்பட்டுள்ளது.

ஏனைய 3 இடங்களுக்கும் தான் கடும் போட்டி நிலவுகிறது. தென்னாபிரிக்க அணி காலிறுதிக்கு முன்னேற வேண்டுமென்றால் அயர்லாந்து, பங்களாதேஷ் அணிகளுடனான லீக் போட்டிகளில் வெற்றி பெற வேண்டும்.

அத்துடன் பி பிரிவில் 5 புள்ளிகளுடன் உள்ள இங்கிலாந்து அணி காலிறுதிக்கு முன்னேற வேண்டுமென்றால் கடைசி லீக்கில் மேற்கிந்தியத் தீவுகள் அணியை கட்டாயம் வீழ்த்தியாக வேண்டும். அப்போட்டியில் தோல்வியடைந்தால் இம் முறையும் இங்கிலாந்து அணியின் கனவு பாழ்பட்டுப் போகும்.

முன்னாள் சம்பியன் மேற்கிந்தியத் தீவுகள் அணி 4 ஆட்டங்களில் விளையாடி 3 வெற்றிகளைப் பெற்று 6 புள்ளிகளுடன் உள்ளது.

அந்த அணி தனது கடைசி இரு லீக் போட்டிகளில் (இங்கிலாந்து மற்றும் இந்தியா) ஒன்றில் வெற்றி பெற்றாக வேண்டும்.

அதிர்ச்சி அளிக்கக்கூடிய அணியான பங்களாதேஷ் அணி தனது கடைசி ஆட்டத்தில் தென்னாபிரிக்க அணியை வென்றால் காலிறுதி வாய்ப்பைப் பெறலாம். எனினும் பங்களாதேஷ் அணி தென்னாபிரிக்க அணியிடம் தோல்வியடைந்தாலும் 6 புள்ளிகளுடன் இருக்கும். அப்போது இங்கிலாந்து அணி, மேற்கிந்தியத் தீவுகள் அணியிடம் தோல்வி கண்டால் பங்களாதேஷ் அணிக்கு காலிறுதி வாய்ப்புக் கிடைக்கும்.

அயர்லாந்து அணிக்கும் காலிறுதி வாய்ப்பு முழுமையாக முடிந்து விடவில்லை. எஞ்சிய இரு லீக்கில் (தென்னாபிரிக்கா மற்றும் நெதர்லாந்து) வெற்றிபெற்றால், ஒரு சில அணிகளின் முடிபையும், ஓட்ட விகித சராசரியையும் பொறுத்து வாய்ப்பு இருக்கிறது. இந்தப் பிரிவில் நெதர்லாந்து மட்டுமே தற்போது வெளியேறிஇருக்கிறது.

எனவே பி பிரிவில் காலிறுதிக்குதகுதிபெறும் அணிகள் எவை? என்பதை அறிய இன்னும் சில நாட்கள் காத்திருக்க வேண்டும்.

# தென்னாபிரிக்க அணியை அசைக்குமா அயர்லாந்து?

பயிற்சியில் ஈடுபடும் அயர்லாந்து வீரர்கள்



(கொல்கத்தா)

உலகக்கிண்ண கிரிக்கெட் தொடரில் கொல்கத்தா ஈடன்கார்டனில் இன்று நடக்கும் முதல் போட்டியில் தென்னாபிரிக்க, அயர்லாந்து அணிகள் மோதுகின்றன.

இங்கிலாந்து அணியை சாய்த்த அயர்லாந்து வலிமையான தென்னாபிரிக்காவுக்கு அதிர்ச்சி கொடுக்க வாய்ப்புள்ளது.

இந்தியா, இலங்கை, பங்களாதேஷ் ஆகிய நாடுகள் இணைந்து பத்தாவது உலகக்கிண்ண கிரிக்கெட் தொடரை நடத்துகின்றன. இன்று கொல்கத்தா ஈடன் கார்டன் மைதானத்தில் நடக்கும் பி பிரிவு போட்டியில் (பகலிரவு) தென்னாபிரிக்க அணி அயர்லாந்தை சந்திக்கின்றது.

### மிரட்டல் துடுப்பாட்டம்

தென்னாபிரிக்க அணி இது வரை மேற்கிந்திய, நெதர்லாந்து, இந்தியாவுக்கு எதிரான போட்டிகளில் வென்றுள்ளது. இங்கிலாந்துக்கு எதிராக மட்டும் அதிர்ச்சித் தோல்வியை சந்தித்தது. இன்று தனது ஐந்தாவது லீக் போட்டியில் அயர்லாந்தையும் அடித்து நொறுக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஏனெனில் இந்தியாவுக்கு எதிரான வெற்றியால் உற்சாக மனநிலையில் இருக்கும் அணியின் முன்னணி வீரர்கள் டிவில்லியர்ஸ், அம்லா, கலிஸ் ஆகியோர் இன்றும் மிரட்டல் ஆட்டத்தைத் தொடரலாம். அணித்தலைவர் சிமித், டுமினி, வான் விக், ரொபின் பீற்றர்சன், ஆகியோரும் அணிக்கு கைகொடுப்பது உறுதி.

### ஸ்ரையன் எழுச்சி

பந்துவீச்சில் வேகப்பந்து வீச்சாளர் ஸ்ரையன் இருப்பது மிகப்பெரும் பலம். இந்தியாவுக்கு எதிரான போட்டியில் கடைசி நேரத்தில் எழுச்சி கண்ட இவரது பந்துவீச்சு காரணமாகத்தான் தென்னாபிரிக்காவின் வெற்றிக்கு வித்திட்டது.

இன்றும் இவர் சாதிக்கலாம். சுழலில் ஜெகான் போத்தா, ரொபின் பீற்றர்சன், இம் முறை அயர்லாந்துக்கு சிக்கல் தரலாம். காயம் காரணமாக 10 நாட்கள் ஓய்வில் இருப்பதால் 11 விக்கெட் வீழ்த்திய இம் ரான் தாகீர் இன்று களமிறங் குவது சந்தேகமே.

### அசைக்குமா அயர்லாந்து

இத் தொடரில் மற்ற கத்துக்குட்டி அணிகள் எல்லாம் சொதப்புகின்றன. அயர்லாந்து மட்டும் இங்கிலாந்துக்கு எதிராக 328 ஓட்டங்களை பதிலெடுத்தாடி அசத்தியுள்ளது. இந்தியாவுக்கு எதிரான போட்டியில் அதிக ஓட்டங்களை எடுக்கவில்லை என்றாலும் வெற்றியை அவ்வளவு எளிதாக விட்டுத்தரவில்லை.

இன்றும் அதுபோல போராடினால் காலிறுதி வாய்ப்பை தக்கவைக்கலாம். இதற்கு முன்னணி வீரர்கள் கெவின் ஓ பிரையன், அணித்தலைவர் வில்லியம் போர்ட்டர்பீல்ட், போல்ஸ்ரிர்லிங், ஜோய்ஸ், நெய்ல் ஓபிரையன் உள்ளிட்டோர் ஒத்துழைப்பு கொடுக்க வேண்டும்.

### ஜோன்ஸ்டன் நம்பிக்கை

காயம் காரணமாக கடந்த போட்டியில் பங்கேற்காத ஜோன்ஸ்டன் இன்று களமிறங்குவது அணிக்கு உற்சாக செய்திதான், தவிர கெவின் ஓ பிரையன், மூனே, அன்ட்ரி போத்தாவும் பந்துவீச்சில் கைகொடுக்க வேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகக் கிண்ண கிரிக்கெட் திருவிழா 2011

பெப்ரவரி 19 – ஏப்ரல் 02

ICC Cricket World Cup 2011

# டக்-வேத் லூயிஸ் முறையில் பாகிஸ்தான் அணி வெற்றி சிம்பாவே அணி சோகம்



(பல்லேகல)

சிம்பாவே அணிக்கு எதிரான லீக் போட்டியில் பாகிஸ்தான் அணி டக்-வேத் லூயிஸ் முறையில் 7 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று காலிறுதிக்கு முன்னேறியது.

இலங்கை, இந்தியா, பங்களாதேஷ் ஆகிய நாடுகளில் 10ஆவது உலகக்கிண்ண கிரிக்கெட் தொடர் நடைபெற்று வருகிறது.

இதில் கண்டி, பல்லேகலயில் நேற்று நடைபெற்ற 33ஆவது லீக் போட்டியில் ஏ பிரிவைச் சேர்ந்த பாகிஸ்தான்-சிம்பாவே அணிகள் மோதின.

இப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய சிம்பாவே அணிக்கு ஆரம்பம் சிறப்பாக அமைய வில்லை.

ஆரம்பத்துடுப்பாட்ட வீரர் ரெய்லர் 4 ஓட்டங்களுடனும் சகாபவா பூச்சியத்துடனும் ஆட்டமிழந்தனர்.

அடுத்து தைபுவுடன் இணைந்த சிபண்டாவும் 5 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க சிம்பாவே அணி 13 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையிழந்தது.

தொடர்ந்து களமிறங்கிய எர்வின் பொறுப்பான ஆட்டத்தை வழங்கி ஆளுதலளித்தார்.

எனினும் மறுமுனையில் தைபு 19 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். அடுத்துவந்த லாம்பும் 16 ஓட்டங்களுடன் ஏமாற்றமளிக்க சிம்பாவே அணி 23.5 ஓவர்களில் 84 ஓட்டங்களை எடுத்து 5 விக்கெட்டுக்களை யிழந்தது.

அடுத்து வந்த அணித்தலைவர் சிகும்புரா நிதானமாக ஆடி அணியை சரிவிலிருந்து மீட்டார்.

இந் நிலையில் சிம்பாவே அணி 27.2 ஓவர்களில் 5 விக்கெட்டுக்களையிழந்து 96 ஓட்டங்களை எடுத்தவேளை மழையின் குறுக்கீட்டால் ஆட்டம் இடைநிறுத்தப்பட்டது.

பின் சில மணி நேரத்தில் ஆட்டம் ஆரம்பமானபோது டக்வேத் லூயிஸ் முறையில் போட்டி தலா 43 ஓவர்களாக குறைக்கப்பட்டது.

இந் நிலையில் தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய சிம்பாவே அணிக்கு எர்வின் 77 பந்துகளில் அரைச்சதம் அடித்து நம்பிக்கையளித்தார்.

எனினும் எர்வின் 82 பந்துகளில் (5 பவுண்டரிகள் உட்பட) 52 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார்.

அடுத்துக்களமிறங்கிய உற்சயா 18 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க சிம்பாவே அணி 39.4 ஓவர்களில் 151 ஓட்டங்களை எடுத்தது.

இந் நிலையில் மழையின் குறுக்கீட்டால் சிம்பாவே ஆட்டம் நிறுத்தப்பட்டது.

அணித்தலைவர் சிக்கும்புறா ஆட்டமிழக்காமல் 32 ஓட்டங்களை எடுத்தார்.

பந்துவீச்சில் உமர் குல் 3 விக்கெட்டுக்களையும் ரசாக், அப்ரிடி, ரியால்ஸ், கபீஸ் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

மழை சிறிது நேரத்தின்பின் விட போட்டி டக்வேத் லூயிஸ் முறையில் 38 ஓவர்களாக குறைக்கப்பட்டு பாகிஸ்தான் அணிக்கு 162 ஓட்டங்கள் வெற்றியிலக்காக நிர்ணயிக்கப்பட்டது.

இதனடிப்படையில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணிக்கு ஷேசாத் 08 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து ஏமாற்றமளித்தார். எனினும் 2 ஆவது விக்கெட்டுக்காக இணைந்த ஹபீஸ்-சபீக் ஜோடி பொறுப்பான ஆட்டத்தை வழங்க பாகிஸ்தான் அணி சரிவிலிருந்து மீண்டது.

இந்த ஜோடி 2 ஆவது விக்கெட்டுக்காக 18.4 ஓவர்களில் 82 ஓட்டங்களை இணைப்பாட்டமாக பகிர்ந்த போது மொகமெட் ஹபீஸ் 65 பந்துகளில் (6 பவுண்டரிகள் உட்பட) 49 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார்.

அடுத்துவந்த அணித்தலைவர் சகிட் அப்ரிடி 3 ஓட்டங்களுடன் வெளியேற பாகிஸ்தான் அணி 23.3 ஓவர்களில் 110 ஓட்டங்களை எடுத்து 3 விக்கெட்டுக்களையிழந்தது.

எனினும் அடுத்து களமிறங்கிய யூனிஸ்கான் நிதானமான ஆட்டத்தை வழங்க மறுமுனையல் சபீக் 76 பந்துகளில் அரைச்சதத்தைப் பெற பாகிஸ்தான் அணி 31.3 ஓவர்களில் 150 ஓட்டங்களைத் தாண்டியது.

பாகிஸ்தான் அணி 34.1 ஓவர்களில் 3 விக்கெட்டுக்களையிழந்து 164 ஓட்டங்களை எடுத்தது.

இதன்மூலம் பாகிஸ்தான் அணி டக்-வேத்லூயிஸ் முறையில் 7 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்ற பாகிஸ்தான் அணி 8 புள்ளிகளுடன் காலிறுதிக்கு முன்னேறியது.

துடுப்பாட்டத்தில் ஆசாத் சபீக் 97 பந்துகளில் (7 பவுண்டரிகள் உட்பட) 78 ஓட்டங்களையும் யூனிஸ்கான் 13 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காமல் எடுத்தனர்.

பந்துவீச்சில் பிரைஸ் 2 விக்கெட்டுக்களையும் உற்சயா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

இப் போட்டியில் பாகிஸ்தான் அணியின் உமர்குல் ஆட்டநாயகனாகத் தெரிவானார்.

**நாளைய ஆட்டம்**

cricket world Cup 2011

கனடா எதிர் அவுஸ்ரேலியா

மாலை 2.30

பெங்களூர்

## புள்ளிப் பட்டியல்

### பிரிவு A

| அணிகள் | போட்டி | வெற்றி | தோல்வி | சமனிலை | முடிவில்லை | புள்ளிகள் | நிகர ஓட்ட எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|---|
| நியூசிலாந்து | 5 | 4 | 1 | 0 | 0 | 8 | +1.957 |
| பாகிஸ்தான் | 5 | 4 | 1 | 0 | 0 | 8 | +0.729 |
| இலங்கை | 5 | 3 | 1 | 0 | 1 | 7 | +2.705 |
| அவுஸ்திரேலியா | 4 | 3 | 0 | 0 | 1 | 7 | +1.645 |
| சிம்பாவே | 5 | 1 | 4 | 0 | 0 | 2 | -0.669 |
| கனடா | 5 | 1 | 4 | 0 | 0 | 2 | -2.046 |
| கென்யா | 5 | 0 | 5 | 0 | 0 | 0 | -3.005 |

### பிரிவு B

| அணிகள் | போட்டி | வெற்றி | தோல்வி | சமனிலை | முடிவில்லை | புள்ளிகள் | நிகர ஓட்ட எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|---|
| இந்தியா | 5 | 3 | 1 | 1 | 0 | 7 | +0.768 |
| மேற்கிந்தியத் தீவுகள் | 4 | 3 | 1 | 0 | 0 | 6 | +2.206 |
| தென்னாபிரிக்கா | 4 | 3 | 1 | 0 | 0 | 6 | +1.352 |
| பங்களாதேஷ் | 5 | 3 | 2 | 0 | 0 | 6 | -0.765 |
| இங்கிலாந்து | 5 | 2 | 2 | 1 | 0 | 5 | +0.013 |
| அயர்லாந்து | 4 | 1 | 3 | 0 | 0 | 2 | -0.444 |
| நெதர்லாந்து | 5 | 0 | 5 | 0 | 0 | 0 | -2.086 |

# சென்னை வந்தனர் இந்திய வீரர்கள்

(சென்னை)

மேற்கிந்தியத்தீவுகள் அணிக்கு எதிரான உலகக்கிண்ண லீக் போட்டியில் பங்கேற்கும் இந்திய வீரர்கள் நேற்று சென்னை வந்தனர்.

பத்தாவது உலகக்கிண்ணக் கிரிக்கெட் தொடர் இந்தியத் துணைக் கண்டத்தில் நடக்கிறது.

இதில் இந்திய அணி இதுவரை விளையாடிய 5 போட்டிகளில் 3 வெற்றி, ஒரு சமனிலை, ஒரு தோல்வி உட்பட 7 புள்ளிகள் பெற்று பி பிரிவில் முதலிடத்தில் உள்ளது.

சமீபத்தில் தென்னாபிக்காவுக்கு எதிரான போட்டியில் 3 விக்கெட் வித்தியாசத்தில் மோசமான தோல்வியைத் தழுவிய இந்திய அணி எதிர்வரும் 20ஆம் திகதி சென்னை சேப்பாக்கம் மைதானத்தில் நடக்கவுள்ள கடைசி லீக் போட்டியில் மேற்கிந்தியத்தீவுகள் அணியை எதிர் கொள்கிறது. இப் போட்டியில் பங் கேற்க இந்திய வீரர்கள் நேற்று சென்னை வந்தனர்.

**சச்சின் வரவில்லை**

சச்சின், காம்பீர், யுவராஜ், சேவாக், சகீர் உள்ளிட்ட 5 முன்னணி வீரர்கள் நேற்று வரவில்லை. இவர்கள் நாளை சென்னை வருவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.



அணித்தலைவர் தோனி, யூசுப் பதான் உள்ளிட்ட மற்ற வீரர்கள் அனைவரும் டில்லியிலிருந்து சென்னை வந்தனர்.

சென்னை விமான நிலையத்திலிருந்து ஹோட்டலுக்குச் சென்ற இவர்கள், நேற்று பயிற்சி எதுவும் மேற்கொள்ளவில்லை. இன்று முதற்கட்டப்பயிற்சியை ஆரம்பிப்பார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமைச்சர்களின் செயற்பாடுகள் குறித்து ஜனாதிபதி மகிந்த கண்காணிப்பு!

(கொழும்பு)

ஆளும் கட்சியில் பதவி வகிக்கும் அமைச்சர்களின் செயற்பாடுகள் குறித்து ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கண்காணித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அமைச்சர்களின் செயற்திறன் தொடர்பில் ஜனாதிபதி மதிப்பீடு செய்து இறுதி அறிக்கை ஒன்றை தயாரிக்கத் திட்டமிட்டுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.

நாட்டின்அபிவிருத்திக்காகஅமைச்சர்கள் வழங்கிவரும் பங்களிப்பின் அடிப்படையில் அவர்களின் எதிர்காலம் தீர்மானிக்கப்படும் என தெரிவிக்கப்படுகிறது.

நாட்டின் பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்வது குறித்து ஜனாதிபதி கூடுதல் கவனம் செலுத்திவருவதாகக் குறிப்பிடப்படுகிறது.

இந்த ஆண்டின் 8-9 வீதமான பொருளாதார வளர்ச்சியை எட்டும் நோக்கில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எதிர்வரும் தமிழ்- சிங்களப் புத்தாண்டை தொடர்ந்து அமைச்சரவை மாற்றங்கள் பற்றி அறிவிக்கப்படவுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது. (ந-5)

## கிறிஸ்மஸ் தீ...

ஆர்ப்பாட்டக்காரர்கள் கடந்த சனி, ஞாயிறு தினங்களில் தமது எதிர்ப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.

இதன் ஒரு கட்டமாக அந்த அகதி முகாமைச் சுற்றி போடப்பட்டிருந்த வேலிகளை பிடுங்கி எறிந்ததோடு கதவுப் பூட்டுக்களையும் சில தங்குமிடங்களையும் சேதப்படுத்தியுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதன் காரணமாக இந்த ஆர்ப்பாட்டத்தை அமைதிப்படுத்த அதிகாலை 3.37 மணியளவில் தாம் கண்ணீர்ப்புகைப் பிரயோகம் செய்ய நேர்ந்ததாகப் பொலிஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-5)

## மூன்று நாட்...

திரும்பவில்லை. இந்நிலையில் இவரைக் கடந்த மூன்று நாட்களாக தேடப்பட்ட நிலையில் இன்று சடலமாக மீட்கப்பட்டுள்ளார். குறித்த சடலம் முல்லைத்தீவு அலம்பில் வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளைதண்ணீரூற்றுபொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ந-5)







## துணுக்காய்...

வழக்கு நீதிமன்றத்தில் உள்ளதால் தேர்தல் நடத்த முடியாது என தேர்தல் ஆணையாளர் கூறியுள்ளார்.

இதனால் மார்ச் 15ஆம் திகதிக்கு முன்னர் குறித்த வழக்கை விசாரணைக்குஎடுத்து தீர்ப்புவழங்க வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா நீதிமன்றத்தை வேண்டியுள்ளார்.

துணுக்காய் உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் வேட்புமனு நிராகரிக்கப்பட்டதை எதிர்த்து அக் கட்சியின் செயலாளர் சுசில் பிரேம ஜயந்த மேன் முறையீட்டு நீதி மன்றத்தில் மனுத்தாக்கல் செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந-5)

## தமிழ் மக்களை மூளைச்...

சக்தியாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மாறியிருக்கிறது. தமிழினத்தின் சக்தியையும் வாக்குப் பலத்தையும் கூட்டமைப்பு ஒவ்வொரு தேர்தல்களிலும் நிரூபித்துக் காட்டுவதோடு தமிழர் பிரதிநிதித்துவத்தை அதிகரித்துக் கொள்வதற்கு நடைபெறும் உள்ளூராட்சித் தேர்தலையும் ஒரு சந்தர்ப்பமாக பயன்படுத்திக் கொள்ளும் எனவும் அவர் தெரிவித்தார்.

நீதியானதும், சுதந்திரமானதுமான தேர்தல் நடைபெறவேண்டும் என்பதே முழு நாட்டினதும் எதிர்பார்ப்பாகும். அந்தவகையில் எதிர்வரும்17ஆம்திகதிநடைபெறும் தேர்தல் நீதியானதாக நடைபெறுவதற்குரிய சூழ்நிலையை ஏற்படுத்திக் கொடுக்கவேண்டிய முழுப்பொறுப்பும் தேர்தல்ஆணையாளருக்கேஉள்ளது.

யாழ்ப்பாணத்திலும், கிளிநொச்சியிலும் தேர்தல்கள் நீதிமன்றின் மூலம் நிறுத்தப்பட்டிருந்தாலும் அம் மாவட்டங்களில் தேர்தல்கள் நடைபெறும்போது அதனைச் சந்திக்க கூட்டமைப்பு தயாராகவேயுள்ளது. எமது மக்களை மூளைச்சலவை செய்யும் சக்திகளை இனம்கண்டு கொள்வதோடு அதற்கிடமளிக்காத வகையில் எம் மக்கள் செயற்பட வேண்டும்.

அதேவேளை நடைபெறவிருக்கும் தேர்தல் நீதியாக நடைபெறுவதற்கு பாதுகாப்புத் தரப்பினர் தமது கடமையை சரிவரச்செய்வர் என எதிர்பார்ப்பதோடு மக்கள் தமது வாக்குரிமையை பயன்படுத்தி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை வெற்றிபெறச்செய்வர் என்ற நம்பிக்கை இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ந-5)

## இலங்கையின் போர்ப்...

கண்காணிப்பகம் இந்த நாடுகளிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இது தொடர்பாக மனிதவுரிமைகள் கண்காணிப்பகத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் பிறட் அடம்ஸ் கருத்துத் தெரிவிக்கும்போது,

இக் கருத்தரங்கில் கலந்து கொள்வதில்லை என பல முக்கிய நாடுகள் முடிவுசெய்துள்ளதாக அறிந்து கொள்ள முடிகிறது.

பல்லாயிரக்கணக்கான பொது மக்களைப் படுகொலைசெய்த படை நடவடிக்கைகளுடன் தொடர்புடைய இராணுவக் கொள்ளையைப் பகிர்ந்து கொள்ளும் வகையிலான இந்தப் படைத்துறைக் கருத்தரங்கைப் புறக்கணிக்குமாறு சர்வதேச நாடுகளைக் கேட்டுக் கொள்வதாக அவர் தெரிவித்துள்ளார்.

இக் கருத்தரங்கில் வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ், ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் செயலாளர் லலித் வீரதுங்க, படைத்துறைச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ, மத்திய வங்கி ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால், தீவிரவாத முறியடிப்பு நிபுணர் கலாநிதி றொகான் குணரட்ண மற்றும் வன்னிப் போரில் பங்கெடுத்த படையதிகாரிகள் உட்பட பலர் உரையாற்றவுள்ளனர். (ந-5)

## அரசு மீது சனத்...

மாக அவரை மாவட்ட அபிவிருத்திக் குழுவின் தலைவர் பதவியில் இருந்தும் அகற்றுவதற்கான முயற்சிகள் ஆளும் கட்சியின் முக்கியஸ்தர்களால் முன்னெடுக்கப்பட்டிருந்தன. அவ்வாறான நிலையில் கடந்த சனிக்கிழமை மாத்தறை மாவட்ட அபிவிருத்திக் குழுவின் கூட்டம் ஜனாதிபதியின் தலைமையில் நடைபெற்றது.

அதற்கும் சனத் ஜயசூரிய சமுகமளிக்கவில்லை. அவர் தன்பாட்டில் வீட்டில் ஓய்வு எடுத்துக்கொண்டிருந்தார்.

அதனையடுத்து கூட்டத்தை முடித்துக் கொண்டவுடன் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நேரடியாக சனத் ஜயசூரியவின் வீட்டுக்குச் சென்று அவரை தேற்றும் முயற்சியில் ஈடுபட்டார்.

இம்முறை நடைபெறும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களின் பின் அவருக்கு விருப்பமானவர்களை தலைவர் பதவிகளுக்கு நியமிக்கவும் நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்துள்ளார். (ந-5)

## இலங்கையின் படை...

தால் இலங்கையின் மேற்படி கருத்தரங்கில் ஜப்பான் பங்கேற்றப்போவதில்லை எனத் தெரியவருகின்றது.

இறுதிக் கட்டப் போரின் பொறுப்பு விவகாரங்கள் மற்றும் இன நல்லிணக்கம் தொடர்பான இலங்கையின் செயற்பாடுகளில் அமெரிக்கா அதிருப்தி அடைந்துள்ளது. அமெரிக்காவைத் தொடர்ந்து பல முக்கிய அனைத்துலக நாடுகளும் புறக்கணிப்பு தொடர்பாக பரிசீலித்து வருவதாகவும் அறியமுடிகின்றது. (ந-5)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3.2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 15.03.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org